# இலங்கையில் வேடர்

## வாழ்வியலும் மாற்றங்களும்

வடிவேல் இன்பமோகன்









JPL
C13461

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேடர்

## வாழ்வியலும் மாற்றங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. *மரபுக்குப் பின் மட்டக்களப்பில் நாடகங்கள்* (2004), அனாமிகா வெளியீடு.
2. *கிழக்கிலங்கைச் சடங்குகள் : சமயம், கலை, அழகியல்* (2012), குமரன் புத்தக இல்லம். (2012ஆம் ஆண்டின் சிறந்த ஆய்வு நூலுக்கான கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றது.)
3. *கலைத்துவ சினிமா* (2012), குமரன் புத்தக இல்லம். (சிறந்த பல்துறை நூலுக்கான கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றது.)
4. *குருக்கேத்திரன் போர் - வடமோடிக் கூத்து* (பதிப்பு) (2017), கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
5. *சயிந்தவன் வதை வடமோடிக் கூத்து,* (பதிப்பு) (2018), பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கிழக்குமாகாணம். (சிறந்த பல்துறை நூலுக்கான கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றது)
6. பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அவர்களின் *ஐரோப்பிய மெய்யியல் வரலாறு* (பதிப்பு) (2018), குமரன் புத்தக இல்லம்.
7. *கூத்துப் பண்பாடு* (2019), குமரன் புத்தக இல்லம்.
8. *நுண்கலை ஓர் அறிமுகம்* (2019), குமரன் புத்தக இல்லம்.
9. *இந்தியக் கலையும் இரசனையும்* (2019), குமரன் புத்தக இல்லம்.
10. பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அவர்களின் *சைவசித்தாந்தம்: மறுபார்வை - அறிவாராய்ச்சியியல்* (பதிப்பு) (2019), குமரன் புத்தக இல்லம்.
11. *கலை, இலக்கிய, மெய்யியல் கோட்பாடு* (இணை ஆசிரியர்) (2020), குமரன் புத்தக இல்லம்.
12. *இந்தியக் கட்டடக்கலை* (2020) கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேடர்

## வாழ்வியலும் மாற்றங்களும்

KOHA JPL
பொதுசன நூலகம்
31 DEC 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்

வடிவேல் இன்பமோகன்
(BA (Hons), Dip.in Ed., MPhil, PhD)
நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

13471 C
KOHA JPL
Public Library Jaffna
281040

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2020

281040 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5:89

31 DEC 2020

இலங்கையில் வேடர் : வாழ்வியலும் மாற்றங்களும்

எழுதியது : வடிவேல் இன்பமோகன் ©

முதற்பதிப்பு : 2020

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Ilankaiyil Vetar : Vaalviyalum Marrankalum
by Vadivel Inpamohan ©

First Edition : 2020

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026
Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: # 865

ISBN 978-955-659-677-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

சமூகவியலாளர், மானிடவியலாளர்,
சமூக சேவகர், சுற்றுச்சூழல் விழிப்புணர்வாளர்
எனப் பல தளங்களில்
தன்னை அடையாளப்படுத்தும் அண்ணன்
**கலாநிதி ஞா. தில்லைநாதன்**
அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

உலகப் பண்பாடுகளில் பூர்வீக சமூகங்கள் எதிர்கொள்ளும் அடையாளம் சார்ந்த பிரச்சினைகள் இன்றைய மானிடவியல், இனவரைவியல் ஆய்வுப்புலங்களில் முக்கிய கவனம் பெறுவன. அவ்வாறே சுதேச பண்பாடுகளின் நிலைபேறு பற்றிய உலகளாவிய பிரகடனங்களுக்கும், தேச மட்டங்களிலான வாக்குறுதிகளுக்கும் குறைவில்லை. எனினும் நடைமுறை மகிழ்ச்சிதருவதாயில்லை. ஆபிரிக்க - அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிலிருந்து இலங்கையின் ஆதிப் பழங்குடியினரான வேடர்கள் வரை இருப்பும் எதிர்காலமும் கேள்விக்குறியாகவே தொடரக்காணலாம். இத்தகைய ஒரு சூழமைவில் கலாநிதி வ.இன்பமோகனின் **'இலங்கையில் வேடர் வாழ்வியலும் மாற்றங் களும்'** - நூலின் வரவு மகிழ்ச்சி தருகின்றது.

இலங்கையின் மேலாண்மை அரசியல், பண்பாட்டுமயமாக்க அலைகளிடை வேடர்களின் வாழ்வியல் எதிர்கொள்ளும் மாற்றங்களை, தனித்துவம் சார்ந்த சவால்களை இன்பமோகனின் இந்நூல் அழகாய் வெளிப்படுத்தி நிற்கின்றது. இது நாள் வரை வேடர்கள் பற்றி மேற் கொள்ளப்பட்ட முன் ஆய்வுகளின் தரிசனத்துடன் முறையியல் வழிப் பட்ட, இன்பமோகனின் நேரடியான கள ஆய்வுத் தேடலின் பயனாய் இந்நூல் கைவசமாகியுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான இன்பமோகனின் படிமலர்ச்சியினை அண்மையிலும் சேய்மையிலும் நயந்து வந்திருக்கின்றேன். துறைகளுக் கிடையிலான சுவர்களைத்தாண்டிய பல்துறை இணை நோக்கும் (Inter Disciplinary Approach), துறைகளை ஊடறுத்த (Transdisciplinary) நுண்ணிய கருத்தாக்கங்களும் எங்கள் சமூக - பண்பாட்டியல் ஆய்வுப் புலங்களை செழுமைப்படுத்துகின்ற வேளை இது. கிழக்கிலங்கைக் கோயில் சடங்குகளின் அழகியலை ஆராயும் கலாநிதிபட்ட ஆய்வுப் பயணத்திடை முளைவிட்ட வேடர்கள் பற்றிய இன்பமோகனின் ஆய்வு ஆர்வம், ஆய்வுக்குள் வாழ்தல் (Living in Research) எனும் ஆழ்ந்த ஈடுபாட்டின் வழி விரிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவ அடையாளங்களைத் தொலைத்து எஞ்சியதையேனும் காக்கும் வழிதேடும் சமூகமாக மாறியுள்ள இம்மக்கள் பற்றிய புரிதலுக் கான அறிவுத்தளத்தினை எதிர்காலத் தலைமுறையினரிடம் கையளிக்கும் நோக்கிலேயே, 'நுண்கலையைப்பேசிய நான், இனவரைவியல் தொடர் பான விடயங்களைப் பேச இந்த ஆய்விலே நிர்ப்பந்திக்கப்பட்டேன்' என்பார் இன்பமோகன். இந்த வகையில் சமூக நீதிக்கான அறிவுப் பங்களிப்பாக இந் நூலின் பெறுமதியை உணரமுடியும்.

பண்பாட்டுத்தனித்துவங்களைக் கவனத்திற் கொள்ளாத ஒற்றைத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை யின் இனத்துவ வரலாறு படும்பாடுகள் ஆதிப்பழங்குடியினரான வேடருடனே தொடக்கம் பெறக்காணலாம். விஜயன் -குவேனி சந்ததி யினராக வேடர்களின் வரலாற்றினை மட்டுப்படுத்தும் மகாவம்ச 'கதை-வசனங்களை 'அறிவார்ந்த மானிடவியல்-தொல்லியல் வரலாற்று ஆய்வுகள் ஏற்பதில்லை. அவ்வாறே வேடர் சமூகத்தினரும் ஒத்துக் கொள்வதில்லை. (இப்பொழுது எழுதப்படும் இராவணன் வாரிசு புதிய புனைவிடை எல்லாம் அடிபட்டுப்போவது தனிக்கதையாகும்).

துரித மகாவலி அபிவிருத்தி, காடழிப்பு, விவசாயம் என்றவாறு காலாகாலமாய் வாழ்ந்த வனங்களிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட நிலையில் தமது வாழ்வாதாரத்தை இழந்ததுடன் இருப்பினைத்தக்க வைக்கும் வகையில் வடமத்திய - ஊவா பிரதேச வேடர் சிங்கள மக்களுடனும், கிழக்குக்கரை வேடர் தமிழ்ச் சமூகத்தினருடனும் கலந்திட நேர்ந்தது வரலாறாகும் . ஆயினும் இந்த மாற்றங்களிடையேயும்,

**'நாங்கள் வேடர்களாகவே இருக்க விரும்புகிறோம்'**

என்ற அவர்களது ஆழ்மன ஏக்கத்தை எங்களது கள ஆய்வுப்பதிவுகள் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன. இன்பமோகனின் கிழக்கிலங்கைச் சடங்குகளின் நுண்கலை பற்றிய ஆய்வினைப்போலவே 'கதிர்காம முருகன்' பற்றிய எனது சமூக மானிடவியல் ஆய்வுத்தேடல் சபிர காமம் எனப்படும் சபிரர் கிராம வேடர்கள் (சபரர் - வேடரின் ஒரு கிளை வகுப்பினர்) பற்றிய நுண்ணிய அவதானங்களுக்கும், கதிர்காம வழிபாட்டு மரபுக்கு நெருக்கமான கிழக்கிலங்கை முருக வழிபாட்டு புலங்களில் வாழும் வேடர்கள் பற்றிய தேடல்களுக்கும் இட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. வேடர்கள் பற்றிய முழுதளாவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வின் அவசியம் கருதி அதனை மேற்கொள்ளத் திட்டமிட்டபோதும் காலம் இடந்தரவில்லை. எனினும் இன்பமோகனின் இந்த நூலின் வழி எனது கனவு மெய்ப்படுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

இந்த ஆய்வு உணர்த்தும் பாடங்கள் வேடர்களின் மேம்பாட்டுக்கு மட்டும் உரித்தானவை அல்ல. நவீனமயமாக்கம், மேலைமயமாக்கம், உலக மயமாக்கம் என்பவற்றின் வழியாகவே மேம்பாடு என்ற மாய மான் கோட்பாடுகள் பற்றிய இன்றைய பின்னை - மேம்பாட்டியலாளரின் (Post-Developmentalist) கருத்து விழிப்பு, எங்களுக்கும் வழி காட்டுவது. உலகப் பண்பாடுகளின் நிலம் சார்ந்த வாழ்வை-உரிமைகளை -தனித்துவங்களைப் புறந்தள்ளி மேலாண்மைப் பண்பாட்டு ஒடுக்கு முறைகளுக்குள் அடக்கி அதனையே மேம்பாடு எனும் சகாப்தம் முடிந்துவிட்டது (End of Development) இனி எங்கள் வேரிலிருந்து பண்பாட்டின் வழியான ஏற்பாடுகளைக் காண்போம் என்பார் எஸ்கோபர் (Escober). 'நிலத்திலிருந்து பிடுங்கப்படுவது மரத்துக்கான விடுதலை அல்ல' என்ற தாகூரது கூற்றின் வழி மொழிதலாகவும் இதனைக்கொள்ள முடியும்.

வேடர்களின் அடையாள இழப்பின் முதற் காரணியாக இந்த ஆய்வில் இன்பமோகன் இனங்காட்டும் நிலத்திலிருந்து அந்நியப் படுத்தல் சிறப்பான கவனத்துக்குரியது. இயற்கையோடு இயைந்த வாழ்வின் பெறுமதியை அண்மைய 'கொரோனா' கால ஞானமாக உலகம் முழுதும் சிலாகித்ததுண்டு. சூழல் காப்பு என்பதற்கு அப்பால் சூழலுடன் இயைந்த சுதேச அறிவின் காப்பு முக்கியமானது. எடுத்துக் காட்டாக வேடர்களின் இயற்கை மருத்துவ அறிவின் மேன்மைகள் பற்றிய ஆய்வு அவதானங்கள் உணர்த்தும் உண்மைகள் அனைத்து சமூகத்தினருக்குமானது. அவ்வாறே அவர்களது கலை வண்ணங்கள் வெளிப்படுத்தும் நுண்ணுணர்வுகளும் அழகியலும் தனித்துவமானவை. ஆக்கத்திறனான கலைப்படைப்புகளுக்கான உயிர்ப்பு மூலங்கள் என்றால் மிகையில்லை. இந்தப் புரிதல் இன்றி இன்றைய சந்தைப் பொருளாதாரத்தின் அங்கத்தினராக்கி அவர்களையே உல்லாசப் பயணத்துறையின் காட்சிப்பொருட்களாக்கும் திசையிலான இன்றைய வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமானவை அல்ல; உண்மையில் அபத்தமானவை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு குறிப்பிடும் போது அவர்களிடம் இன்று ஏற்பட்டுவரும் அறிவார்ந்த மேம்பாட்டு நிலைகளை முற்றாக புறந்தள்ள வேண்டும் என்பது பொருளல்ல. உலகளாவிய நிலையில் குறிப்பாக அமெரிக்க, ஆஸ்திரேலிய பசிபிக் தீவுகளில் நிலவும் ஏனைய பண்பாட்டு நீரோட் டங்களுடன் பூர்வீக மக்கள் ஒதுங்கியிருக்கின்ற நிலைமை இலங்கையில் இல்லை. ஆயினும் ஏனைய தேசிய இனங்கள் அனுபவிக்கும் - அவாவி நிற்கும் அத்தனை உரிமைகளும் தேசத்தின் மூத்த குடியின ருக்கான அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, மொழி வழித் தேசியம், ஓரிரவுக்குள் அரச மொழி மாற்றம், சுய மொழிவழியான கல்வி என வரலாறு எழுதிய இலங்கையின் அரசமைப்பிலோ அதன் இயந்திரங்களிலோ இந்த மக்களின் மொழி பற்றிய கவனிப்பு சிறிதும் இல்லை. இன்று முற்றாக அழியும் நிலையிலுள்ள அவர்களின் மொழி முதல் அவர்கள் வாழ்வியல் உணர்த்தி நிற்கும் மேன்மைகள் யாவும் காக்கப்பட வேண்டும். அவர்களின் பகிர்ந்துண்ணும், சாதிய, பால் நிலை பேதங்கள் இல்லாத சமத்துவ சமூக பண்பாட்டிலிருந்து ஏனை யோர் கற்றுக்கொள்வதற்கு நிறையவே உள்ளன.

ஆங்காங்கே சில நலன்புரி ஏற்பாடுகள் அரசமட்டங்களில் செய்யப் பட்டாலும் அவை சிறு பகுதியினரையே சென்றடைந்தன எனும் இன்ப மோகன் ஆய்வவதானம் இங்கு நம் கவனத்துக்குரியது. உலகப்பூர்வீக ஆண்டு பிரகடனத்தைத் தொடர்ந்து ஆண்டு தோறும் ஜெனீவாவில் கூடிய சர்வதேச மாநாட்டில் இலங்கை வேடர்களை பங்கேற்கச்செய்ய பண்பாட்டு மானிடவியலாளரான விவிகா ஸ்ரெகபோன் (Wiveca Stegeborn) எடுத்த முயற்சியும் அதற்கு நேர்ந்த கதியும் பற்றிய ஆய்வுப்பதிவினை இந் நூலில் இன்பமோகன் குறிப்பிடக்காணலாம். தம்பானை வேடுவருடன் நெடுநாள் ஆய்விடை வாழ்தல் எனும் பங்கேற்பு முறையில், அவர் மொழி-பண்பாட்டுக் கோலங்களைப் பயின்றதுடன் நவீனமயமாக்கச் செயன்முறையில் குறிப்பாக பெண்கள் எதிர்கொண்ட துயரங்களை வெளிப்படுத்தியதும் அதன் வழி அவர் எதிர்கொண்ட நெருக்கடிகளும் இன்று வரலாறாகும். பேராதனையில் தொண்ணூறுகளில் நடைபெற்ற **6th SriLankan Studies** சர்வதேச மாநாட்டில் வேடர்களில் துயர நிலை பற்றிய ஒரு ஆய்வறிக்கையின் போது விவிகாவுடன் ஏற்பட்ட அறிமுகதொடர்ச்சியில் இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குள் தணலாய்க் காக்கப்படும் வேடர்களில் வாழ்வியல் பற்றிய அக்கறையை உணர்வதுண்டு. இது போலவே என் அக்கா பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களின் தலை மாணாக்கரான இன்றைய கொழும்புப்பல்கலைக்கழக பேராசிரியர் கொட்டகம (Kotagama) வின் வேடர் மேம்பாடு பற்றிய அயராச் செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டாக இங்கு குறிப்பிடலாம். அவ்வாறே எங்கள் தமிழர் இனவரைவியல் கழகம் பேராசிரியர் பக்தவத்சபாரதி தலைமையில் தமிழக பழங்குடிகளிடை மேற்கொண்டுவரும் இன்றைய ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கன. எங்கள் புலத்து ஆய்வுகளுக்கு வழிகாட்டுவன. எனினும் இவை யாவும் உதிரியான பங்களிப்புகளே.

திட்டமிட்ட வகையிலான முழுதளாவிய புரிதலோடு தங்கள் வாழ்வியலை தீர்மானிக்கின்ற அதிகாரம் அவர்கள் வசமாகின்றபோதே அவர்கள் எதிர்கொள்ளும் அடையாளம் முதல் இருப்பு வரையான பிரச்சினைகளுக்கான தீர்வும் சாத்தியமாகும். இது மெய்ப்பட மனித - சமூக உரிமைகள் - விடுதலையின் உயிர் விசையாகக்கூடிய அனைவரினதும் ஒன்றுபட்ட அர்ப்பணிப்பான செயற்பாடு அவசியமாகும்.

இத்துணை சிந்தனை விழிப்புக்கு வித்திட்ட கலாநிதி இன்ப மோகனுக்கு எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது கலாநிதிப்பட்ட ஆய்வில் கிழக்கிலங்கைச் சடங்குகள் ஆய்வுப் பொருளாக அமைந்திருந்தது. இதற்காக கிழக்குமாகாணத்தில் பல பாகங்களிலும் நடைபெறும் சடங்குகளை ஆய்வுக்குட்படுத்தியிருந்தேன். சடங்குகள் ஒவ்வொரு சமூகத்தினதும் பூர்வீக பண்பாட்டு அடையாளம், வாழ்க்கை முறை என்பவற்றைத் தாங்கிய வடிவங்களாக விளங்கு கின்றன. சமூக மாற்றம் காரணமாக சமூகங்கள் அவற்றின் வாழ்வியல் அடையாளங்களைப் படிப்படியாக இழந்துகொண்டு வரும் நவீன வாழ்க்கைச் சூழலில் சமூகங்களின் அடையாளங்களைத் தாங்கி தொடரும் வடிவங்களில் சிறப்புமிக்கதாக சடங்குகள் இன்றுவரை செயற்படுகின்றன. என்னுடைய சடங்குகள் தொடர்பான ஆய்வெல் லைக்குள் வேடர்களினால் மேற்கொள்ளப்படும் சடங்குகள் பற்றிய நோக்கும் பிரதானம் பெற்றிருந்தது. ஆய்வுச் செயற்பாட்டில் நான் ஈடுபட்டுக் கொண்டிருந்த இக்காலத்தில் நாட்டில் யுத்தசூழல் நிலவிய தால் சடங்குகளைப் பார்ப்பதற்காக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றுவருவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் சில பிரதேசங்களில் நடைபெறும் சடங்குகளைப் பார்ப்பது, அச்சடங்குகள், சடங்குகளை மேற்கொள்ளும் சமூங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வது என்பவற்றில் சிரமங்களை எதிர் கொண்டேன். இதனால் வேடர்களால் மேற்கொள்ளப்படும் சடங்குகளை முழுமையாகப் பார்த்து ஆய்வுக்குட்படுத்துவதில் அக்காலத்தில் சிரமங்களை எதிர்கொண்டேன்.

இருந்தும் பாரம்பரிய மரபுகளுடன் முறுத்தானையில் வசிக்கும் வேடர்களின் சடங்குகளை ஆய்வுக்குட்படுத்தும் நோக்குடன் அக்கிராமம் சென்று வேடர்களுடன் உரையாடி சடங்கை பார்ப்பதற்கான பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தேன். இந்த முயற்சியை 2005 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்தேன். இப்பிரதேசம் வனாந்தரப் காடுகளால் சூழ்ந்ததாக அமைந்திருந்ததால் மேற்கொண்டு அங்கு சென்று சடங்குகளைப் பார்ப்பதற்கான வாய்ப்புக்களை யுத்தசூழல் வழங்கவில்லை. இருந்தும் களுவங்கேணி, தளவாய் போன்ற பிரதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்களில் மேற்கொள்ளப்படும் வேடர்களின் சடங்குகளை ஆய்வுக்குட் படுத்தவே முடிந்தது. இப்பிரதேசங்களில் வாழும் வேடர்கள் தமிழ் சமூகத்தினருடன் தொடர்புகளைப் பேணி, தமிழர்களின் பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்வியல் கூறுகளை உள்வாங்கியவர்களாகக் காணப் பட்டனர். இருந்தும் பூர்வீகமாக மூதாதையர்களினால் மேற்கொள்ளப் பட்டு வந்த சடங்குகளைத் தொடரவேண்டும் என்னும் வேட்கையுடன் அவற்றைத் தொடர்பவர்களாக விளங்கினர். தளவாய், களுவங்கேணி போன்ற பிரதேசங்களில் வேடர்களின் சடங்குகளை பார்த்து பதிவு செய்த என்னால் வேடர்களின் வாழ்வியல் நடைமுறைகளை அங்கு அறிந்துகொள்ள முடியாது போனது எனது ஆய்வுச் செயற்பாட்டில் ஒரு திருப்தியற்ற நிலையை உருவாக்கியிருந்தது.

என்னுடைய கலாநிதிப்பட்ட ஆய்வில் கிழக்கிலங்கை சடங்குக் கோயில்களில் நடாத்தப்பட்டுவரும் சடங்குகளில் காணப்படும் கலை, அழகியல் கூறுகளை ஆராய்வதற்கே முக்கியத்துவம் வழங்கியி ருந்தேன். சடங்குகள் பற்றிய என்னுடைய ஆய்வுநோக்கு சமூகங்களின் பண்பாட்டு முக்கியத்துவம், சமூகங்களின் பூர்வீகம், வரலாற்று மூலம் என சடங்கு நிலைகொண்டுள்ள சமூகத்தின் பல்வேறு மூலங்களையும் சடங்குகளின் ஊடே கண்டறியலாம் என்பதை தெளிவுபடுத்தியது. இருந்தும் எனது ஆய்வில் இவ்விடயங்களைப் பேசுவதற்கான வெளி வரையறுக்கப்பட்டிருந்ததால் இவை பற்றி என்னால் விரிவாகப் பேச முடியாதிருந்தது. கலாநிதிப்பட்ட ஆய்வின் மூலமாக சில பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்படாது இருந்ததை அன்றே உணர்ந்திருந்தேன்.

வேடர்களின் சடங்குகளை ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக சுமார் 10 வருடங்களின் பின்னர் 2016ஆம் ஆண்டு முறுத்தானைக் கிராமத்தில் உள்ள வேடர்களைச் சந்திப்பதற்காக சென்றிருந்தேன். இச்செயற்பாட்டிற்கு எனக்கு உதவியாக செயற்பட்டவர் முறுத்தானை வித்தியாலயத்தின் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. இ.சர்வேஸ்வரன். பல தடவைகள் அங்கு வாழும் வேடர்களைச் சந்தித்து அவர்களின் வாழ்வியல் மற்றும் சமகாலத்தில் அவர்கள் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் பற்றி உரையாடியிருந்ததுடன் அதனை நேரடியாக என்னால் அவதானிக்கவும் முடிந்தது. 2016ஆம் ஆண்டில் வேடர்களால் மேற்கொள்ளப்பட்ட சடங்கினையும் முழுமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்குட்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. முறுத்தானையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வேடர்களின் பண்பாடு, வாழ்க்கை முறை வேடர்கள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன தொடர்பான புரிதலை வழங்கியது.

இலங்கையில் வாழும் வேடர்கள் சமகாலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களால் அவர்களின் இனத்துவ அடையாளங்களை இழந்துகொண்டிருக்கும் இனமாக மாறிக் கொண்டிருக்கின்றனர். சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் குடியேற்றத் திட்டங்கள் என்பனவற்றால் வேடர்களின் பூர்வீகமான வாழ்விடங்களும் உணவீட்டத்திற்கான இடங்களும் இந் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களினது பொருளாதார செயற்பாட்டிற்கான இடங்களாகவும் மக்கள் வாழ்விடங்களாகவும் மாற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ், சிங்கள சமூகங்களுடன் இணைந்து வாழும் வேடர்கள் அவர்களின் இனத் தனித்துவத்தை இழந்து தமிழ், சிங்கள இனங்களால் உள்வாங்கப்படுபவர்களாக மாறினர். வேடர்களின் அடையாள இழப்பு இன்று வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான காலகட்டத்தில் முறுத்தானையில் வாழும் வேடர்கள் பாரம்பரிய அடையாளங்களை, முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவேனும் தாங்கியவர்களாக வாழ்கின்றனர்.

முறுத்தானையில் வேடர்களால் நடாத்தப்படும் சடங்குகள் இலங் கையில் ஏனைய தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் வேடர்களால் நடாத்தப்படும் சடங்குகளின் சில பொதுவான தன்மைகளைக் கொண்ட மைந்திருந்தாலும் பல விடயங்களில் தனித்துவமுடையதாகவே அமைந்திருந்தது. இச்சடங்குகளைப் பார்த்த அனுபவம், முறுத்தானை வேடர்களுடன் பல நாட்கள் பழகியது என்பன வேடர் பற்றியும் வேடர்களின் பண்பாடு பற்றியும் புதிய புரிதல்களுக்கு என்னைச் இட்டுச் சென்றது. வேடர்களின் சடங்கை அவதானித்து அதனூடாக வெளிப்படும் பழங்குடியினரின் கலை, அழகியல் பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்வதை எனது ஆய்வின் நோக்கமாகக் ஆரம்பத்தில் கொண்டிருந்த நான் வேடர்களின் பல்வேறு வாழ்வியல் அம்சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் ஆய்வுக் குட்படுத்தும் நிலைக்குப் பின்நாட்களில் தள்ளப் பட்டேன். அப்போது குறித்த கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட மைந்திருந்த என்னுடைய ஆய்வுப் பரப்பையும் நாடுதழுவியதாக வாழும் வேடர் களை ஆய்வு செய்வது என விரிவுபடுத்திக் கொண்டேன். இந்த உந்த லினால் வேடர்கள் பூர்வீகமாக வாழும் தம்பானை (மகியங்கனையில் அமைந்துள்ள வேடர்களின் பூர்வீக குடியிருப்பு), பொலநறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள யக்குரை போன்ற பிரதேச ங்களுக்கும் சென்று வேடர்பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டேன். சிங்களப் பிரதேசங்களில் வாழும் வேடர்கள் பற்றிய ஆய்வு நோக்கு இலங்கை முழுவதும் பரந்து வாழும் வேடர்கள் பற்றியதாக என்னுடைய ஆய்வை வடிவமைப்பதற்கு வழிவகுத்தது.

இலங்கையில் வேடர்கள் ஆரம்பகாலத்தில் தனித்துவமான ஒரு இனக்குழுமமாக வாழ்ந்தவர்கள். ஏனைய இனங்களின் ஊடுருவல் வேடர்கள் வாழ்ந்த பகுதியை ஆக்கிரமித்த போது அவர்களின் தனித்துவமான அடையாளங்கள் படிப்படியாக இழக்கப்பட்டு, எஞ்சியுள்ள கொஞ்ச அடையாளங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதற்கான உபாயங்களைத் தேடும் சமூகமாக இன்று மாறியுள்ளனர். இவ்வாறான ஒரு காலகட்டத்தில் வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை பற்றிய நோக்கும், சமகாலத்தில் எவ்வாறான மாற்றங்களைப் எதிர்நோக்கியுள்ளனர், இம்மாற்றங்களுக்குப் பின்னணியில் அமைந் துள்ள சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் எவை என்பவை தொடர்பான புரிதல்கள் அவசியமாகின்றன. இது எதிர்காலத் தலைமுறை யினருக்கு வேடர்களின் வாழ்வியல் பற்றிய பதிவைக் கையளிக்கும் ஒரு சிறு முயற்சியாகக் கூட அமையலாம் எனக் கருதினேன். இந்தப் புரிதல்களை நோக்கியதாக நூல் செல்கின்றது. நூலில் வேடர்களின் வாழ்வியலுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களும் விவாதிக்கப் பட்டுள்ளன. நுண்கலையைப் பேசிய நான் இனவரையியல் தொடர்பான சில விடயங்களைப் பேசுவதற்கு இந்த ஆய்வில் நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

தமிழில் வேடர்கள் பற்றி சில ஆய்வுகள் அல்லது எழுத்துக்கள் வெளிவந்துள்ளன. வேடர் தொடர்பான ஆய்வுகளில் சிலிக்மன் (Seligmann,C,G., (1911), The Veddas) அவர்களின் ஆய்வு முன்னோடி முயற்சியாகக் அமைகின்றது. அடுத்து விவிகா ஸ்ரெகபோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Dr Wiveca Stegeborn) அவர்களின் ஆய்வுகள் வேடர்களின் பல பிரச்சினைகளை சர்வதேசத்தின் பார்வைக்குச் கொண்டு சேர்ப்பதில் முதன்மையானதாக அமைந்திருந்தன. தமிழில் சி. மௌனகுருவின் 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' (1998), சசங்கப் பெரேரா அவர்களின் திரட்டான இலங்கைச் சமுதாயத்தையும் பண்பாட்டையும் வாசித்தல் என்பதில் வெளிவந்த யு.வி. தங்கராஜாவின் 'கிழக்குக் கரையோர வேடர்கள் இனக்குழும அடையாளத்தாற் பாதிக்கப்படுதல் பற்றிய எடுத்துரைப்பு', என்.சண்முகலிங்கன் அவர்களின் 'The Cult of Murugan in Eastern Sri Lanka' (2001) மற்றும் 'இலங்கை - இந்திய மானிடவியல்' (2014), எ.விஜயரெட்ணத்தின் 'மட்டக்களப்பு வரலாறு : பூர்வகுடிகளும் குமாரதெய்வ வழிபாடும்' (2013), வெல்லவூர் கோபாலின் 'மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்' (2005) மற்றும் 'மட்டக்களப்புத் தேசம் வரலாறும் வழக்காறும்' (2016), செல்வராஜகோபாலின் 'யாரிந்த வேடன்' (2005), கு.சண்முகத்தின் 'களுவங்கேணி வேடுவ சமூகத்தின் வழக்காறுகள்' (2020) என்பன வேடர்கள் தொடர்பாக இதுவரை வெளிவந்த ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் எ.விஜயரெட்ணம், செல்வராஜகோபால், கு.சண்முகம் ஆகியோரின் எழுத்துக்கள் வேடர்கள் பற்றிய முழுமையான பதிவுகளாக அமைந்திருந்தன. மற்றையவை வேடர்கள் பற்றிய குறிப்புக்களை அல்லது பகுதிகளை உள்ளடக்கியவை. இருந்தும் இந்த முயற்சிகள் வேடர்கள் பற்றிய புரிதலைப் தமிழ் வாசகர்களுக்குக் கொண்டு சேர்த்ததில் முதன்மைப்படுத்தி நோக்கப்பட வேண்டியவையாகவே அமைகின்றன. வேடர்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றிய புரிதலுடன் 'இலங்கையில் வேடர் வாழ்வியலும் மாற்றங்களும்' என்னும் இந்நூல் வாசகர்களாகிய உங்களின் நுகர்வுக்காக வழங்கப்படுகின்றது.

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் விசேட கற்கையை மேற்கொள்ளும் 3ஆம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களின் பாடத்திட்டத்தில் ''கிழக்கிலங்கையில் பழங்குடியினரின் கலை மரபு'' (FAS 3243 Indigenous Art Tradition of Eastern Sri Lanka) என்னும் பாடம் இணைக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையில் வாழும் முதன்மையான பழங்குடி சமூகமான வேடர்களின் வாழ்வியல் பற்றிய நோக்கு, கலையின் இயல்பு, சமகாலத்தில் அவர்களின் கலைகளில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் வாழ்வியல் நெருக்கடிகள் என்னும் விடயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் மூன்றாம் வருட பொதுக் கலைமாணி மாணவர்களுக்கான தெரிவுப் பாடங்களில் ஒன்றாக ''கலை, பண்பாடு மற்றும் சமூகம்'' (OFA 3143 Art, Culture and Society) என்னும் பாடத்தில் வேடர் சமூகம், அவர்களின் கலை, பண்பாட்டு அம்சங்கள் பற்றி கற்பிக்கப்படுகின்றன. இந்த இரு பாடங்களையும் 5 வருடங்களாக கற்பித்து வருவதால் பழங்குடியினரின் கலை, பண்பாடு, சமூக ஒழுங்கமைப்பு என்பவற்றின் மீதான எனது தேடல் அதிகரித்தது. கற்பித்தலுக்கான தேவையும் தேடலும் இலங்கையில் வாழும் பழங்குடி சமூகமான வேடர்கள் பற்றிய என்னுடைய ஆய்வுநோக்கை தீவிரப்படுத்திய காரணிகளில் பிரதானமானது.

வேடர்கள் பற்றிய இந்த ஆய்வு முயற்சிக்கான தொடக்க வித்துக்கள் 2016ஆம் ஆண்டு முறுத்தானை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இடப்பட்டது. முறுத்தானைக் கிராமத்திற்கு களஆய்வுச் செயற்பாட்டிற்கு பக்கபலமாக விளங்கியவர் ஆசிரியர் திரு இ.சர்வேஸ்வரன் ஆவார். மற்றும் திரு சு.சந்திரகுமார் மற்றும் அண்ணாவியார் வே.தம்பிமுத்து என்போர் ஆய்வுச் செயற்பாட்டை எந்தவித தடையும் இன்றி நடாத்தி முடிப்பதற்கு உதவியாகச் செயற்பட்டவர்கள். தம்பானை, யக்குரை கள ஆய்வுச் செயற்பாட்டிற்கு திரு த.ராஜ்குமார் (ராஜன்) ஓய்வுபெற்ற அதிபர் திரு கு.சண்முகம் மற்றும் எனது மகன் சுதஞ்சணன் மற்றும் கார்க்கி என்போர் உதவியாகச் செயற்பட்டவர்கள். வேடர்களின் வாழ்வியலை அறியும் அவர்களின் வேட்கை எனது ஆய்வில் செல்வாக்குச் செலுத்திய சாதகமான காரணியாக அமைந்திருந்தது.

இந்த ஆய்வுச் செயற்பாட்டில் ஆலோசனைகள் வழங்கியவர் மதுரைக் காமராஜர் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் இ.முத்தையா சேர் அவர்கள். பல நாட்கள் இந்த விடயப் பொருள் தொடர்பான நீண்ட உரையாடலுக்கு அவர் இடம் ஒதுக்கியிருந்தார். இந்த உரையாடல் ஆய்வை வளப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருந்தது. அவரால் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு கருத்துக்களும் ஆய்வுக்கான புதிய திசைகளை சுட்டிநின்றன. உள்நோக்கம், கைமாற்ற ஆரோக்கியமான உரையாடல் ஆய்வை வளப்படுத்தியது. மேம்படுத்தியது. இலங்கையில் வாழும் வேடர்கள் பற்றி அவ்வப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த சந்தேகங்களை கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் அண்ணன் கலாநிதி ஞா. தில்லைநாதன் தீர்த்துவைத்தார். வேடர்களின் சடங்கு பற்றிய கோட்பாட்டுத் தெளிவை நோக்கியதாக புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பணி யாற்றும் முனைவர் ச.பிலவேந்திரன் அவர்களுடனான கலந்துரையாடல் அமைந்திருந்தது.

இந்நூலுக்கான அணிந்துரையை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சேர் அவர்களின் பெருமனங்கொண்ட சேவைக்கு நன்றி உரித்து. எங்கள் புலங்களில் தமிழில் சமூகவியல், சமூக மானிடவியல் அறிவுத் துறைகளை நிலைபெறச் செய்த பெருமைக்குரியவர், அவரின் பெறு மதியான அணிந்துரையானது இந்நூலின் கனதியை உறுதிப்படுத்து வதாகவும் மேம்படுத்துவதாகவும் அமையப் பெற்றுள்ளமை எனக்குக் கிடைத்த பெரும் பேறு. மிகக் குறுகிய கால அவகாசத்தைக் கொண்ட என் வேண்டுகோளை அவர் ஏற்றுக் கொண்டமை, அவரின் தாராள மனதின், இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் சிரத்தையின் பிரதிபலிப்பு என்பதனை இங்கு பதிந்திடுவது என் தார்மீகக்கடமையாகும்.

இந்நூலின் மொழி வழுக்களை திருத்தியமைத்து உதவிய சக விரிவுரையாளர் திரு து.கௌரீசன், கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறையில் ஆய்வு உதவியாளராக பணியாற்றும் செல்வி சி.ஓசாநிதி, ஆசிரியர் திரு த.மேகராசா, ஆசிரியரும் கூத்துக் கலைஞருமான திரு.கு.பிரபாகரன் ஆகியோரின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது.

இவை யாவற்றிக்கும் மேலாக வேடர்கள் தொடர்பான இந்த ஆய்வை தனது வெளியீட்டகத்தால் வெளியிட முன்வந்ததுடன் நூலின் காத்திரத் தன்மையை மேம்படுத்தி வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைத்த குமரன் புத்த இல்லத்தின் உரிமையாளர் திரு. க.குமரன் அவர்களுக்கும் அவரின் உதவியாளர்களுக்கும் கடப்பாடு டையேன்.

**வடிவேல் இன்பமோகன்**

09.07.2020.

நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அணிந்துரை vii

முன்னுரை xii

1. அறிமுகம் 1
   - i. வேடர்களின் பூர்வீகம் 3
   - ii. வரலாற்றில் வேடர்கள் 6
   - iii. வேடர்களுக்கான நலன்புரித் திட்டங்களும் செயற்பாடுகளும் 12

2. வாழ்வியலும் ஏற்பட்ட மாற்றங்களும் 15
   - i. சமூக அமைப்பு 15
   - ii. குடும்பம் 18
   - iii. தலைமைத்துவம் 21
   - iv. மொழியும் அதன் சமகால நிலையும் 24
   - v. சடங்குகளும் தெய்வங்களும் 34
   - vi. உணவும் உணவீட்டமும் 54
   - vii. வாழ்விடம் 63
   - viii. வைத்தியம் 64
   - ix. ஆடை அணிகலன் 67
   - x. கலை மற்றும் கைப்பணி மரபு 67

3. வாழ்வியல் நெருக்கடிகளும் அடையாள இழப்பும் 85

படங்கள் 97

உசாத்துணைகள் 105

சுட்டி 109

பொது சன நூலகம்
31 DEC 2020
மாநகர
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 1 DEC 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகம்

வேடர்கள் இலங்கையில் வாழும் பழங்குடியினர். வேட்டையாடிகள் என்பது வேடர் என்னும் சொல்லின் திராவிட அர்த்தமாகும். வேடர்கள் வேட்டையாடுதலை பிரதான உணவீட்ட முறையாகக் கொண்டவர்கள். கும்புக்கன் ஓயா மேல் சமவெளி, பாணம்பற்றின் சரி சமப்பகுதி, மகவெதிரட்ட மற்றும் புத்தல வெதிரட்ட, அதுபோன்றே மல்வத்துஓயா சமவெளி, அனுராதபுரம் மாவட்டத்தில் யான் ஓயா மற்றும் தன்மன் கடுவை (பொலனறுவை) மாவட்டத்திலும், மகாவலி நதியின் இரு பாகங்களிலும், அம்பாறை மாவட்டத்திலும், பிபிளை, மொனறாக்கலை, வியலுவ போன்ற மலைப்பகுதிகளிலும் இலங்கையின் மேற்குப்புறச் சமவெளிகளிலும், மத்திய மலைப்பகுதியிலும் வேடர்களின் பூர்வீகக் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. இலங்கையில் வேடர்கள் வாழும் பிராந்தியங்களை அடிப்படையாகக் கொண்டு மலை வேடர் (Bintenne Veddas), அனுராதபுர வேடர் (குகை வேடர்), கரையோர வேடர் (Coast Veddas) என மூன்று பிரிவாக பகுத்து நோக்குவர். (https:// www.encyclopedia. com/ places/ asia/ sri-lankan-political-geography/ vedda). இவர்களில் குகை வேடர் என அழைக்கப்படும் அனுராதபுர வேடர்களே பூர்வீகமானவர்கள் என்பதையும் அவர்களில் இருந்தே ஏனைய வேடக் குழுக்கள் பிரிந்து உருவாகின என்பதையும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## முறையியல்

வேடர்களை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் வேடர்களின் பாரம்பரிய வாழ்வு இயற்கையுடன் தொடர்புடையதாக எவ்விதம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது என்பவை பற்றி அறிந்து கொள்வது பிரதானப்படுத்தப்பட்டிருந்தது. புதிய வாழ்க்கைச் சூழலை எதிர் கொள்ளும்போது வேடர்கள் எவ்வாறான மாற்றங்களைப் பெறு கின்றார்கள், எதிர்கொள்ளும் மாற்றங்கள் எவ்வாறான சவால்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றன என்னும் விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இந்த ஆய்வானது வேடர்களின் வாழ்வியல் பற்றியும் அதில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றியும் ஒரு முழுமையான தெளிவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய வாழ்க்கைச் சூழலில் வேடர்கள் போன்று இலங்கையில் வாழும் ஏனைய மக்களும் மாற்றங்களுக்கு உட்படுவதுடன் அம் மாற்றங்களினூடாக பல சவால்களையும் எதிர்நோக்கியவாறு உள்ளனர். வேடர்கள் அவர்களுக்குரிய வாழ்வியல் நோக்கிற்குள் வாழ இன்றுவரை முயற்சிப்பது அவர்களை ஏனைய இனக்குழுமங்களில் இருந்து வேறுபடுத்தும் தனித்துவமான பண்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது. குழுநிலை வாழ்வைப் பிரதானப்படுத்தும் வேடர்களிடம் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் பாகுபாடு பெரியளவில் பேணப்படுவதில்லை. இருந்தும் அவர்களிடமும் பல சாதிப்பிரிவுகள் பேணப்படுகின்றன. இதனால் அடையாள அரசியல் பற்றிய கருத்துருவாக்கம் வேடர்களிடம் ஏற்பட்டிருக்கவில்லை. தமிழ்ச் சூழலில் அடையாள அரசியல் பற்றி ந.முத்துமோகன் விவாதிப்பார் (2011: 28).

ஏனைய சமூகங்களுடன் தொடர்பின்றி அதே நேரம் ஏனைய சமூகங்களின் வாழ்க்கை ஒழுங்கிற்கு எதுவிதத்திலும் தடையாக அமையாது இயற்கையுடன் தொடர்புடையதொரு வாழ்வை வாழ்ந்த ஒரு சமூகக் குழுமம் இன்று உலகு தழுவியதாக ஏற்பட்டுக் கொ ண்டி ருக்கும் மாற்றங்களைப் படிப்படியாக உள்வாங்கிக்கொண்டு வருகின்றது. வேடர்களிடம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் மூலம் உலகு தழுவியதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களுக்கான பொறிமுறை பலம் பொருந்தியதொன்றாக அமைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

மாற்றங்களுடன் தொடர்புடைய பாதிப்புக்களே வேடர்களை ஏனைய சமூகங்களிலிருந்து தனிமைப்படுத்துகின்றது. வேடர்கள் நாகரிகமற்றவர்கள், நாகரிகமுடையவர்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்னும் காலனித்துவ ஆதிக்க நோக்கு வேடர்களைப் புதிய மாற்றங்களை உள்வாங்கச் செய்கின்றது. இந்த மாற்றங்களில் வேடர்கள் அடையாள இழப்பு பற்றிச் சிந்திக்கின்றனர். கருத்தியல் சார்ந்து வேடர்களின் அடையாளங்களைச் சிதைப்பதற்கு கையாளப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரோபாயங்களாக இந்த மாற்றங்களை வேடர்கள் கருதுகின்றனர். சமூக, பண்பாட்டு, பொருளாதார, அறிவியல், கலை அடையாளங்கள் சிதைக்கப்படுவதை உணர்ந்த வேடர்கள் அவற்றைப் புதிய சமூகத் தளத்தில் எவ்விதம் தொடர்ந்து முன்னெடுப்பது, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களினுள்ளே அடையாளங்ளை எவ்விதம் தொடர்வது என்பது பற்றிச் சிந்திக்கின்றனர். அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் தயாராகின்றனர். ஒவ்வொரு சமூகமும் அவர்கள் முன் வைக்கப்படும் மாற்றங்களில், சமூகத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் அம்சங்களை உள்வாங்கிச் சமூகத்தை மேம்படுத்த முயற்சிப்பது மாற்றங்களுக்கான அடிப்படையாக அமைகின்றது. வேடர்கள் மாற்றங்களை உள்வாங்கி புதிய வாழ்க்கை ஒழுங்கில் அவர்களை நிலைநிறுத்துவதற்கான அடிப்படைகள் பற்றிச் சிந்திக்கின்றனர்.

வேடர் சமூகம் எதிர்கொள்ளும் மாற்றங்கள், மாற்றங்களுடன் தொடர்புடைய கருத்தியல், அக்கருத்தியல் வேடர் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது, மாற்றங்களால் எதிர் கொள்ளும் சவால்கள் எவை என்பவை தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய இந்த ஆய்வு பண்புசார் முறையியலை அடிப்படையாகக் கொண்டது. கட்டமைக்கப்படாத நேர்காணல், நேரடி அவதானிப்பு என்பன தகவல் சேகரிப்பில் பிரதானம் பெற்றிருந்தன. முடிவுகளும் பரிந்துரைகளும் பண்புசார் அடிப்படையில் பெறப்பட்டது.

## i. வேடர்களின் பூர்வீகம்

வேடர்களை வன்னியா லஎடோ (Wanniya-Laeto- காடுகளில் வாழ்பவர்) என்றும் அழைப்பர். இவர்கள் இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் பிரிவினரில் இருந்து அவர்களின் அனைத்து செயற்பாடுகளிலும் வேறுபட்டவர்களாக விளங்குகின்றனர். இதனால் தங்களைத் தனித்துவமான சமூகப் பிரிவாக அடையாளப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். வேடர்கள் இந்நாட்டின் புதிய கற்கால சமூகத்திற்குரிய (Neolithic Community) பூர்வீகமான தொடர்ச்சியைப் பேணும் வம்சாவளியினராக கொள்ளப்படத்தக்கவர்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவர்கள் கி.மு. 125,000க்கு முற்பட்டவர்களாக இருக்கலாம் என்பதை சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்படுத்துகின்றன. இதனை பேராசிரியர் S.U.தெரனியகல (இலங்கையின் முன்னாள் தொல்பொருளியல் துறை இயக்குனர்) ''வேடர்களின் மூதாதையர்கள் இலங்கையில் குளிர்ந்த மேடுகளான மாகஎலியவில் இருந்து வரண்ட தாழ் நிலங்களான மன்னார், வில்பத்து வரை உள்ள அனைத்து மூலை முடுக்குகளிலும் பரந்து காணப்பட்டனர், இலங்கை இந்தக் காலகட்டத்தில் இந்தியாவுடன் தரைவழி பாலம் ஒன்றின் மூலம் தொடர்புபடுத்தப்பட்டு இருந்திருக்கலாம். இந்தியாவிலிருந்து 7000 வருடங்களுக்கு முன் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தீவாக பிரிக்கப்பட்டது'' எனக்குறிப்பிட்டார் (http://btoptions.lk/serendib /article.p›?issue=9&id= 196).

மேற்குறித்த கருத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் மனித இனத்தின் பரம்பல் தொடர்பான சில தகவல்களை சு.கி.ஜெயகரன் தருகின்றார். தற்கால மனித இனத்தவரும் அவர்களின் முன்னோடிகளும் ஆபிரிக்காவை விட்டு வெளியேறி உலகின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர் என்பார். ''தற்கால மனித இனம் ஆபிரிக்காவை விட்டு ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன், கடல்மட்டம் தாழ்வாக இருந்தபோது எத்தியோப்பியாவிற்கும் ஏமனுக்கும் இடையிலுள்ள பாப் எல் மண்டெப் (Bab el Mandeb) நிலப்பாலம் வழியாக பயணித்து ஆசியா, ஐரோப்பாவிற்குக் குடியேறியவர்கள் ஏறத்தாழ எண்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்தில் குடியேறினர் என்று தொல்லியல் ஆய்வுகள் காட்டுகின்றன. பின்னர் அங்கிருந்து ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தோனேஷியா வழியாக பாப்புவா. நியூகினி, ஆஸ்திரேலியா, டாஸ்மெஷியா இணைந்த பெருந்தீவில் குடியேறினர். இதே காலகட்டத்தில் இலங்கை, அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் தற்கால மனித இனங்கள் குடியேறினர்'' (ஜெயகரன்,2016:145-146). இத்தகவல்களின் ஊடாக இந்தியவழித் தொடர்புகளின் ஊடாகவே வேடர்களின் பரம்பல் இலங்கையில் ஏற்பட்டுள்ளது என்பதை ஊகிக்கமுடிகின்றது.

மகாவம்சம் வேடர்களின் பூர்வீகத்தை சிங்கள சமூகத்தின் பூர்வீகம் தொடர்பான வரலாற்றுடன் தொடர்புபடுத்திப் பேசுகின்றது. இலங்கையிலுள்ள வேட சமூகமானது இளவரசன் விஜயன் (கி.மு. 6 - 5 ஆம் நூற்றாட்டில் சிங்கள நாட்டை கண்டெடுத்தவர் எனச் சிங்களவர்களால் கருதப்படுபவன்) யக்ஷ குலப் பெண்ணான குவேனியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் முடித்ததன் மூலம் உருவானதாக மகாவம்சம் கூறுகின்றது. குவேனி மற்றும் விஜயனின் பிள்ளைகள் இருவர் (ஆண் மற்றும் பெண்). சுமண குத்த (இரத்தினபுரி மாவட்டத்தில் சிவனொளிபாத மலையை அண்டிய பிரதேசம்) என்னும் பிரதேசத்தில் பிறந்தனர். இவர்களே வேடர்களின் சந்ததிக்குத் தொடக்கமாகக் காணப்பட்டனர். தற்காலத்து வேடர்கள் அந்த உறவுமுறையின் விளைவாகவே உருவானவர்கள் என மகாவம்சம் கூறுகின்றது. வேடர்கள் பண்டைய காலத்தில் யக்ஷ குலத்தவர்களை ஒத்தவர்களாகக் காணப்பட்டதாக நம்பப்படுகின்றது. வேடர்கள் அவர்களினுடைய மூதாதையர்கள் இலங்கையில் ஆரம்பகாலத்தில் இருந்து வாழ்ந்ததாகக் கூறுவதுடன் மகாவம்சத்தில் கூறப்படும் கதைகளையும் மறுக்கின்றனர். அத்துடன் அவர்கள் குறிப்பிட்ட எந்த நபரிடமிருந்தும் தோன்றவில்லை எனவும் கூறியுள்ளனர். இலங்கையில் வாழும் தனித்துவமானதும், பூர்வீகமானதுமான ஒரு இனம் என்பது அவர்களின் உறுதியான நிலைப்பாடாகும்.

கண்டிய மன்னனால் சிறைப்படுத்தப்பட்டபோது ரொபேர்ட் நொக்ஸ் எழுதிய புத்தகத்தில் வேடர்களைக் காட்டு மனிதர்கள் எனக் குறிப்பிட்டார், அத்துடன் அதில் சிலர் ஏனைய சமூகங்களுடன் தொடர்பாடுவதற்கு ஏற்ற முறையில் பழக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர், இவர்கள் பின்னர் அரசனின் படைகளில் கூட சேவை புரிந்துள்ளனர் என்னும் தகவல்ளைத் தருகின்றார். ரொபேர்ட் நொக்ஸின் குறிப்பு வேடர்கள் இலங்கையில் காணப்பட்ட பூர்வீகமான சமூகம் என்பதைச் சுட்டுவதாகவே அமைகின்றது.

தொல்பொருள் ஆய்வாளரான நந்த தேவ விஜயசேகர சப்பிரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்டத்திலேயே பண்டைய வேடர்கள் தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். சப்பிரகமுவ என்னும் பெயர் கூட சபராஸ் (காட்டுமிராண்டிகள் அல்லது நாகரிகமில்லாதவர்) என்பவர்களின் கிராமம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இரத்தினபுரி மாவட்டத்தில் இருக்கும் இடங்களின் பெயர்களான வேடகால (வேடப் பாறை), வேட எல (வேடக் கால்வாய்), வேதிக் கண்ட (வேட குன்று) என்பன இரத்தினபுரியில் வேடர்களின் பூர்வீகத்தைக் காட்டும் எழுத்து வடிவமற்ற வாய்மொழிச் சான்றுகளாக பாதுகாக்கப்படுகின்றன (http://vedda. org/ keerthisinghe. htm) எனக் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாய்வாளர் ப.புஷ்பரட்ணம் கூட இலங்கையின் பூர்விக குடிமக்கள் நாடோடிகளாகத் திரிந்து வேட்டையாடுதலில் ஈடுபட்ட சமூகமாக இருக்க வேண்டும் என்றும் இம்மக்களுக்கும் இலங்கையில் பிற்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கும் அவர்களின் பண்பாட்டிற்கும் இடையே இருந்திருக்கக் கூடிய தொடர்புகளைக் கூறமுடியாதுள்ளது (2017:08) என்றார்.

பல்வேறு ஆதாரங்களும் இலங்கையில் பூர்வீக காலம் தொட்டு வாழ்ந்துவரும் சமூகமாக வேடர்கள் இருந்திருக்கின்றனர் என்பதையும் தனித்துவமான வாழ்க்கை முறையைக் கொண்ட சமூகம் என்பதையும் ஆதாரப்படுத்துகின்றன. வேடர்கள் ஏனைய சமூகத்தினரைப் போன்று நாகரிகமடையாது தொடர்ச்சியாக குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்குள் வாழப் பயிற்றப்பட்டிருந்ததால் பிற்காலத்தில் நாகரிக சமூகங்களின் பரம்பலும் தொடர்புகளும் வேடர்களின் வாழ்வியல் ஒழுங்கமைப்பை மாற்றியமைத்துள்ளன. இதற்கமைய கி.மு.543 தொடக்கம் வட இந்திய ஆரியர்களின் வருகைக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அடுத்தடுத்த குடியேற்றங்கள் காரணமாக வேடர் சமூகம் பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து படிப்படியாக மாற்றங்களுக்குள்ளாகத் தொடங்கியது.

## ii. வரலாற்றில் வேடர்கள்

வரலாற்றுரீதியாக நோக்கும்போது கடந்த 25 நூற்றாண்டுகளாக இலங்கையில் உள்ள பழங்குடி சமூகமான வேடர்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விஜயன் காலம் முதலாக நடந்ததாகக் கருதப்படும் வட இந்தியக் குடியேற்றங்கள், தென்னிந்திய மக்களின் குடியேற்றங்கள், படையெடுப்புக்கள், காலனித்துவ ஆக்கிர மிப்பாளர்கள் போன்ற அடுத்தடுத்து வந்த அலைகளால் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆரம்பகாலத்தில் இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்த விஜயனின் வழித்தோன்றல்களாகக் கருதப்படும் சிங்களவர்களின் பார்வையில் காடுகளில் வாழும் வேடர்கள் மனிதர்களாக அன்றி காட்டு ஆவிகளாகவே கருதப்பட்டனர். நாகரிகம் படைத்த மனிதனின் இயல்புகளில் இருந்து வேடர்கள் வேறுபட்டு காணப்பட்டதே இவ்வாறான நோக்குநிலைக்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர்கள் மனித இயல்புக்கு அப்பாற்பட்டவர்கள் என்பது இவர்களின் நிலைப்பாடாக இருந்தது. காலனித்துவ அரசு (ஆங்கிலேயர்) அவர்களின் இயல்பு வாழ்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியதும் அல்லது வேடர்களை நாகரிக சமூகமாக மாற்ற முயன்றபோது வேடர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து சண்டையிட்டனர். இந்தமோதல்களால் பல வேடர்கள் கொல்லப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. 1818களில் அவர்களுக்கு எதிராக சண்டையிட்ட வேட சமூகத்தைச் சேர்ந்த பலர் ஆங்கிலேயர்களினால் கொல்லப்பட்டுள்ளனர். அது போல் 1841இல் நடைபெற்ற மாத்தளைக் கலகத்திலும் பல வேடர்கள் கொல்லப் பட்டுள்ளனர் (தகவல் : தம்பானை கலாசார மையம், தம்பானை, மகியங்கனை).

1977 இல் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடங்கப் பட்டது. இத்திட்டம் வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு முக்கியமான இலங்கை அரசாங்கத்தின் திட்டமாக அமைந்திருந்தது. நாட்டில் விவசாய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக் கப்பட்டது. இத்திட்டத்தால் பாரம்பரியமாக வேடர்களினால் வேட்டை யாடலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள் ஏனைய சமூகங்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டது. பூர்வீகமாக இந்த நிலங்களில் வாழ்ந்து வந்த வேடர்களுக்காக வழங்கப்பட்ட இழப்பீடானது பாதிப்புக்கு உட்பட்டவர்களுக்கு வழமையாக மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கை போன்று, இவர்களின் வாழ்விடங்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகவே அமைந்திருந்தது. புதிய வாழ்விடங்கள் வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையினை வாழ்வதற்கு பொருத்தமற்றவையாக அமைந்திருந்ததுடன் ஏனைய சமூகங்களைப் போன்று வாழ்க்கையை மேற்கொள்வதற்கான அடிப்படை வசதி கள்கூட அங்கு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இந்தச் செயற் பாட்டை அரசாங்கம் வேடர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் மேற்கொண்டது. காடழிப்பு விவசாயத்துடன் தொடர்புடைய பெரும் பான்மை சமூகங்களின் (சிங்கள, தமிழ்) காடுகளை நோக்கிய புலம் பெயர்வாக இது அமைந்திருந்தது. மகாவலி துரித அபிவிருத்திச் செயற்றிட்டம் பெரும்பான்மை சமூகத்தின் உறுப்பினர்கள் காடு களுக்குள் நுழைவதற்கான செயற்றிட்டமாகவும், காடுகளை அழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டமாகவும் அமைந்திருந்தது. பொருளாதார ரீதியாக நாட்டை கட்டிவளர்ப்பதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களில் ஒன்றாக இது கொள்ளப்பட்டது.

1983ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி 145,450 ஏக்கர் நிலம் மாதுருஓயா பூங்கா அமைக்கும் திட்டத்திற்குரியதென அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத் திச் செயற்றிட்டங்களினால் காடுகள் அழிக்கப்பட்டுக்கொண்டு வந்தது. அத்துடன் வேடர்களைத் தவிர வேறுவேட்டையாடிகளும் காட்டுவிலங்குகளை வேட்டையாடி உண்பதிலும் காட்டு இறைச்சி விற்பனையிலும் ஆர்வம் காட்டினர். இதனைவிட மக்கள் காட்டு வளங்களை அரச அனுமதி இன்றி பயன்படுத்தும் போக்கும் சுட்டிக்காட் டத்தக்கது. இவை இயற்கைவளங்களைப் பாதுகாப்பது தொடர்பான ஒரு விழிப்புணர்வை அரசுக்கு ஏற்படுத்தியது. இப்பின்புலத்திலேயே மாதுருஓயா பூங்காத் திட்டம் உருவாகின்றது. இதற்காக ஒதுக்கப் பட்ட நிலம் காலங்காலமாக வேடர்களினால் வேட்டையாடலுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த, அவர்கள் வாழ்ந்து வந்த நிலமாகும். பூங்கா அமைக்கப்பட்டதன் பின்னர் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இப்பிரதேசத்திற்குள் நுழைவதற்கோ விலங்குகளை வேட்டையாடுவதற்கோ தடை விதிக்கப்பட்டது. இச்செயற்பாடுகளால் வேடர்கள் இந்நிலப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் வாழ்வாதாரத்திற்காக புதிய முயற்சிகளை நாடவேண்டியிருந்தது.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் சர்வதேச நியமங்களுக்கேற்ப நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துச் செயற்பட்டன. இதன்போது சர்வதேச நாடுகளின் பொருளாதார, அரசியல் கொள்கை களை உள்வாங்கி நாட்டை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்வதற்கு முயன்றனர். இது நாட்டின் பொருளாதார பண்பாட்டுத் தளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியது போன்று வேடர்களின் பண்பாட்டு மாற்றத்திற்கும் வழியேற்படுத்தியது. வனம்சார்ந்த வாழ்விலிருந்து நிலையான ஓய்வினை வேடர்களுக்கு வழங்கியது. இதனால் சம காலத்தில் வேடர்களுக்குரியதாக விளங்கிய தனித்துவம்மிக்க உலக நோக்கு, வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டு நினைவுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைமண்டல பசுமை நிறைந்த வரண்ட பருவகாலத்தைக் கொண்ட காடுசார்ந்த வாழ்வுடன் தொடர்புடைய பருவகாலங்கள் பற்றிய அறிவு, முன்னோர்களினால் மாற்றியமைக்கப்பட்ட பண்பாடு என்பன அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சவால்களின் நேர்வினால் ஒன்றிணைக்கப்பட்ட அவர்களையும் அடையாளத்தையும் இருப்பையும் கேள்விக்குறியாக்கின.

வேடர்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றங்களினூடே இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இரு வேறுபட்ட தந்திரோபாயங் களைக் கையாண்டனர்.

1. ஏனைய பண்பாட்டு மரபுகளை உள்வாங்குதல்.
2. காடுசார்ந்த வாழ்வினைச் சுருக்கிப் பின்வாங்குதல்.

என்பவையே அவையாகும். இந்த இரண்டு செயற்றிட்டங்களும் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டனவாக அமைந்திருந்தன. வேடர்களின் அடையாளங்களைப் பாதுகாப்பது தொடர்பில் உறுதியற்ற தீர்மானங்களாக அமைந்திருந்தன. இருந்தும் இத்தீர்மானங்கள் காலத்தின் நிர்ப்பந்தமாகவும் அமைந்திருந்தன. இந்த இரு நடவடிக்கையினாலும் எண்ணிக்கையில் கணக்கிடமுடியாத ஆயிரத்திற்கும் அதிகமான வேடர்களின் பூர்வீகமான வாழ்விடங்கள் இலங்கையின் அதிகாரம் மிக்க பிரதான சமூகப் பிரிவுகளான சிங்கள சமூகத்தாலும் (வடமத்திய ஊவா மாகாணங்களைச் சேர்ந்த வேடர் குடிகள்) தமிழ் சமூகத்தாலும் (கிழக்குக் கரையோரம்) உள்வாங்கப்பட் டன. சிறியளவான வேடர்களே அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை, பண்பாட்டு அடையாளம் என்பவற்றைப் பாதுகாக்க முயற்சிக் கின்றனர் (http://kataragama.org/ research/wanniyalaeto.htm). பாரம்பரிய வாழ்க்கைச்சூழல் மாற்றமடைந்ததால் புதிய வாழ்க்கைச்சூழலுடன் இணைந்தும் தனித்துவத்தைப் பாதுகாத்தும் வாழவேண்டியிருந்தது.

கூச்ச சுபாவம் கொண்டவர்களும், இயற்கை சார்ந்த வாழ்விலி ருந்து ஒதுங்கியிருந்தவர்களுமான வேடர் சமூகம் அவர்களின் காப்பாளர்களாகக் கருதி பிரதான சமூகங்களுடன் தொடர்புபட்டிருக்க வேண்டியிருந்தது. பிரதான சமூகங்களின் தீர்மானங்கள் வேடர்களின் வாழ்கையை மறுசீரமைப்பதாக அமைந்திருந்தது. நாடோடி வாழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பைக் கொண்ட வேடர்களின் விருப்பங்களுக்கும், விவசாயம், வர்த்தகம் என்பனவற்றைப் பிரதான பொருளீட்ட முறைகளாகக் கொண்ட பிரதான சமூகங்களின் நோக்கங்களுக்கும் இடையே எப்போதும் முரண்பாடுகள் ஏற்பட்டதுடன் வேடர்களின் விருப்பங்களை புறக்கணிப்பதாகவும் அமைந்திருந்தன.

வேடர் சமூகம் பாதிக்கப்படக்கூடிய இரு தீர்மானங்களை அதிகாரம் மிக்க பிரதான சமூகங்கள் மேற்கொண்டன.

1. பாரம்பரியமாக வேட்டையாடி உணவீட்டும் வேடர்கள் பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்பில் இருந்து உணவுகளைப் பெற்றுக்கொள்வதை முற்றாகத் தடை செய்தல்.
2. வேடர்களின் தினசரி வாழ்வு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது வேடர்களின் ஆலோசனைகள் சுட்டிக் காட்டல்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்படத் தேவையில்லை.

இந்த இரு தீர்மானங்களும் வேடர்களின் காட்டுடன் தொடர்புடைய வாழ்வு, முன்னோர்களால் மேலும் மேம்படுத்தப்பட்டு வந்த பண்பாடு மற்றும் அவர்களின் அனைத்து நன்மைகளுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்திருந்தன. நாட்டில் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வந்த மாற்றங்களாலும் வேறுபட்ட கருத்தியல் சார்ந்த திட்டங்களினாலும் உள்ளூர் நிர்வாகிகளின் அதிகாரத்தினாலும் பூர்வீகமாக வாழ்ந்த நிலத்தையும் விருப்பங்களையும் இழந்துகொண்டு வந்தனர் (http://kataragama.org/research/wanniyalaeto.htm).

சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு உலகு தழுவியதாக ஏற்பட்டிருந்ததன் காரணமாக சுற்றுச்சூழல் ஒழுக்கம் தொடர்பான கருத்துக்களும் வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றன. ''மனிதர்கள் இயற்கையினையும் விலங்குகளையும் தன்னளவில் மதிப்புடைய பொருட்களாக கருதமாட்டார்கள் என்றும் அவர்கள் இயற்கை மற்றும் விலங்குகளின் அழிவிற்கும் பின்னர் தமது அழிவிற்கும் காரணமாக இருப்பார்கள்'' (2020:164) என்றும் இயற்கைச் சூழல் மற்றும் விலங்குகள் தொடர்பில் நாம் பாரம்பரியமாகக் கொண்டிருக்கும் மதிப்பீடுகளிலும் கொள்கைகளிலும் கட்டாயம் மாற்றங்கள் தேவை என்றும் சுற்றுபுறச் சூழல் ஒழுக்கவியலாளர்கள் வற்புறுத்துகின்றனர் (2020:165) என்பார் இரத்தினசபாபதி பிரேம்குமார். இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் சூழலைப் பாதுகாக்கும் திட்டங்கள் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலாளர் கூறும் கருத்துக்களுடனும் தொடர்புபடுகின்றன.

சமூகரீதியாக தனிமைப்படுத்தப்படுவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வேடர்கள் சிங்கள அல்லது தமிழ்ப் பெயர்களை அவர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் வைத்தல், வேறு மொழிகளைக் கற்றுக் கொள்ளுதல், உணவு, ஆடை, வாழ்க்கை முறை என்பவற்றைச் சூழ்ந்து வாழும் பெரும்பான்மை சமூகம் போன்று தழுவிக் கொள்ளுதல் என்னும் செற்பாடுகளை மேற்கொண்டர். அத்துடன் பேரளவில் பௌத்த, இந்து மதத்தைத் தழுவிக் கொள்பவர்களாகவும் மாற்றமடைந்தனர். சமகாலத்தில் வேடர்களின் பாரம்பரியம் பெரியளவான சமூகங்களில் இருந்து வேறுபட்டதாகவே விளங்குகின்றது. வேடர்கள் சமூகரீதியாக ஒன்றுபட்டு இருத்தல், பண்பாட்டு ரீதியான சுய அடையாளத்தை வெளிப்படுத்தல் என்பவற்றால் வெளிப்புறச் சூழலில் காணப்படும் பண்பாட்டுப் பொறியிலிருந்து தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்கின்றனர்.

இவ்வாறான மாறுபட்ட நிலைப்பாட்டிற்குள் இருந்து வந்த வேடர்கள் சமகாலத்தில் கல்வியில் ஏற்பட்ட மேம்பாட்டால் வேட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழக கல்வி வரை சென்று கல்வி கற்று அரச உத்தியோகம் மற்றும் அரசாங்கத்தின் உயர் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இலங்கையில் அவர்களின் சமூகம் பற்றிய புரிதலுடன், அவர்களின் முன் விதிக்கப்பட்ட மிகப்பெரிய தடைகளில் இருந்து வெளியே வருவது பற்றியும் சுய கௌரவம், தகுதி, மனித உரிமை, பண்பாட்டு ஒருமைப்பாடு என்பவற்றைப் பெற்று வளர்ச்சியடைவதற்கான வெளியையும் உருவாக்க முயற்சிக்கின்றனர். ஆரம்பகாலத்தில் வேடர்கள் பின்னிலையிலுள்ள மற்றும் ஏமாறக்கூடிய சமூகமாகக் கருதப்பட்டனர். இவை பெரும்பான்மை சமூகத்தால் வேடர்கள் புறக்கணிக்கப்படுவதற்கு வசதியாக ஏற்படுத்தப்பட்ட கருத்துருவாக்கங்களாக அமைந்திருந்தன. அக்கருத்தியலை வெற்றி கொள்வதற்கான பாதை இளைஞர், யுவதிகளால் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iii. வேடர்களுக்கான நலன்புரித் திட்டங்களும் செயற்பாடுகளும்

ஆட்சியாளர்களினாலும் நிர்வாகிகளாலும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் செயற்றிட்டங்கள் வேடர் சமூகத்தைப் பாதிப்பனவாக அமைந்திருந்த போதும் வேடர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கில் சில செயற்றிட்டங்களையும் அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. இந்தத் திட்டங்கள் சிறு அளவிலான அங்கீகாரத்தை பாரம்பரிய வாழ்வினை வாழ்வதற்கு வேடர்சமூகத்திற்கு வழங்கியதுடன் இதன் மூலமாக பாரம்பரிய இனத்துவ அடையாளங்களை பாதுகாப்பதற்கும் பின்பற்றுவதற்குமான வாய்ப்புக்களை ஓரளவு ஏற்படுத்திக் கொடுத்தன. குறிப்பாக வேடர்கள் இலங்கையில் வாழும் ஒரு இனக்குழுமம் என்னும் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கு உதவின.

இந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் விருத்திக் கான துறைக்குழு 1950 இல் ''வேடர் நலன்புரிக் குழு'' **(Veddha Wefare Committee)** என்னும் அமைப்பை இலங்கை அரசின் தூண்டுதலினால் ஏற்படுத்தியது. நடைமுறையில் காணப்பட்ட பழங்குடியினர், தனித்துவமான சமூகங்களின் அருவிப் போகும் விடயங்கள், மாற்ற முடியாததும் விருப்பத்துக்குரியதுமான செயல்முறைகளை பாது காப்பதற்கும் பேணுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை செயற்படுத்தியபோது இத்திட்டத்தில் சில பிற்போக்கான அம்சங்கள் உள்ளதாகக் கருதி இதனை தேசிய அபிவிருத்திக்குத் தடையானதாக அப்போதிருந்த அரசாங்கம் கருதியது. இத்திட் டத்தை குறைபாடு உடையதாகக் கருதியதால் இதன் பின்னர் பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய சமூகம் எனப்படும் வேடர்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை. ஏனெனில் சமூக வளர்ச்சியில் பின்நிலையிலுள்ள சமூகங்களின் நலன்கருதிய செயற்றிட்டங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக அமையும் எனக் கருதியதே இதற்கான காரணமாக அமைந்திருந்தது.

வேடர்கள் பாரம்பரிய வாழ்வினை மேற்கொள்வதற்கென 1800 ஏக்கர் நிலம் வழங்குவது என 1974 இல் ஆட்சியில் இருந்த அரசாங் கத்தால் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. இருந்தும் இத்திட்டம் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களால் பூர்த்தி செய்யப்படாது இழுபறி நிலையில் முடிவடைந்தது. இதனை விட வேடர்களை புதிய நிலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281040



குடியமர்த்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலங்கள் வேட சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரினதும் நிலத்தேவையை (தங்குமிடம், வாழ்வாதாரத்திற்கான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வது) பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக அமையவில்லை.

1990 ஆண்டு யூன் மாதம் 16ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச அரச உயர் அதிகாரிகளுடன் வேடர்களைச் சந்தித்தார். இதில் அப்போதைய வேடர்களின் தலைவர் திஸகாமி உட்பட வேடர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பிரேமதாச வேட சமூகத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் அல்லது தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்ற தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளைப் பணித்திருந்தார். இதற்கமைய மூன்று நாட்களின் பின்னர் அப்போதைய நிலவள, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் க. தயாரத்தின வேடர்களின் நலன்கருதி கீழ் குறிப்பிடும் இரண்டு திட்டங்களுக்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்று செயற்படுத்தினார். அவை,

1. 1500 ஏக்கர் நிலம் வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டது. மாதுரு ஓயா தேசிய பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட நிலத்திலிருந்து பிரித்தெடுத்து இந்நிலம் வழங்கப்பட்டது. வேடர்களின் சரணாலயமாக இந்தப் பிரதேசம் கொள்ளப்பட்டது.
2. வேடர்களின் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கும் அதை மேம்படுத்துவதற்குமான ஒரு சபையினை உருவாக்கினர். இது பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அரசு சார்பற்ற தனியார் அமைப்புக்களினால் நிர்வகிக்கப்பட்டது.

இப்போது வேடர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அந்தப் பிரதேசத்தில் வேடர்களின் வாழ்வியல், இன அடையாளங்களை வெளிப்படுத்தும் கலாசார மையம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தில் வேடர்களின் தலைவர் மற்றும் வேடக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் (படம்: 01). அரசாங்கத்தால் வேடர்களின் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட அதிகபட்சமான நன்மைகளாக இவை அமைந்திருந்தன. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்த நடைமுறைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தன. நாட்டின் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்களிலுமுள்ள வேடர்களில் சிறு பகுதியினருக்கே இத்திட்டம் பயனளித்தது. ஆனால் ஏனைய வேடசமூகத்தினர் சிங்கள, தமிழ் சமூகங்களுடன் இணைந்து வாழ்கின்றனர். பாரம்பரிய சடங்குகள், சில பாரம்பரிய உணவீட்ட முறைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றால் அவர்களின் சமூகத் தனித்துவம் வெளிப்படுகின்றது.

பல்வேறு வருடங்களாக வேடுவ வாழ்க்கை முறையில் காணப் பட்ட விஞ்ஞானரீதியான ஈடுபாட்டினால் இவர்களின் பண்பாடு சர்வதேச ரீதியாக அடையாளங்காணப்பட்டது. குறிப்பிட்டுக் கூறப் போனால் சுவீடன் நாட்டினுடைய பண்பாட்டு மானிடவியலாளர் Dr. விவிகா ஸ்ரெகபோன் (Dr Wiveca Stegeborn) தம்பானையில் காணப்படும் வேடுவ சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியிருந்தார். இவர் அவர்களின் மொழியைக் கற்று அவர்களில் ஒருவராக வாழ்வது வரையான எல்லை வரை சென்றிருந்தார். இவர் வேடுவர்கள் சமீப காலங்களில் முகம் கொடுத்து வந்த பிரச்சினைகள் தொடர்பான விடயங்களைக் கருத்திற் கொண்டு வேடுவ சமூகத்திற்கான அங்கீகாரத்தை சர்வதேசரீதியாகப் பெற்றுக் கொடுத்தார். விவிகா ஸ்ரெகபோன் 1985ஆம் ஆண்டு ஜெனிவாவிற்கு வேடுவர்களை அழைத்துச் செல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். இதற்காக மூன்று வேடுவர்கள் அழைக்கப்பட்ட போதும் இலங்கையின் குடியகல்வு குடிவரவுத் திணைக்களம் இவர்களுக்கான கடவுச் சீட்டினை வழங்காததால் அழைத்துச் செல்லமுடியவில்லை. இதற்கு முன்வைத்த காரணமாக இவர்கள் இலங்கை பிரஜைகள் என்பதற்கான சான்றுகள் இவர்களிடம் இல்லை என்பது அமைந்திருந்தது. அரசாங்கத்தின் நிர்வாக ஒழுங்கமைப்புக்குள் வேடர்கள் உள்வாங்கப்படாமையின் விளைவே இதுவாகும்.

இருந்தும் 1996 இல் முதலாவது வேடப் பிரதிநிதி நேபாளத்திற்கு ஆசிய பழங்குடி மக்கள் உடன்படிக்கை தொடர்பான கருத்தரங்கிற்கு விவிகா ஸ்ரெகபோன் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார் (https://uit.academia.edu/ WivecaStegeborn/CurriculumVitae). இது வேடர்கள் பற்றிய பதிவை சர்வதேச உலகத்திற்குக் கொண்டு செல்லும் செயற்பாடாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. வாழ்வியலும் ஏற்பட்ட மாற்றங்களும்

வேடர்கள் சமகாலத்தில் இயற்கையுடன் தொடர்புடைய பாரம்பரிய வாழ்க்கை முறையில் இருந்து பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்டு விட்டனர். ஏனைய தேசிய இனங்கள் போன்று வாழ்வதற்கு பணிக்கப்பட்டுள்ளனர். புதிய வாழ்க்கை முறைக்குப் படிப்படியாக மாறிக்கொண்டு வருகின்றனர். தேசிய இனங்களுக்குரிய அத்தனை கட்டுப்பாடுகளும் இவர்களுக்கும் ஏற்புடையவாக அமைந்திருந்தன. அவர்களுக்கு பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு செல்வதற்கான வாய்ப்புக்களை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட சட்ட நடவடிக் கைகள், செயற்றிட்டங்கள் இல்லாமல் செய்தன. இருந்தும் வேடர்கள் இன்றுவரை தனித்துவமான சமூகப் பிரிவினராக அடையாளப் படுத்தக்கூடிய பல அம்சங்களை தாங்கியவர்களாக வாழ்கின்றனர். வேடர்களின் பாரம்பரிய மரபுகள் எவை என்பது தொடர்பான புரிதல், அவை எப்படி பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன, சமகாலத்தில் பாரம்பரிய மரபுகளைப் பாதுகாப்பதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர், புதிய வாழ்க்கைச் சூழலை வேடர்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பவை தொடர்பான பதிவுகள் இந்தப் பகுதியின் ஆய்வுப் பொருளாகின்றன.

### i. சமூக அமைப்பு

வேடர்கள் காட்டுடன் இணைந்ததாகவே அவர்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொள்வதுடன் சிறு சிறு குழுக்களாக வாழும் இயல்பு டையவர்கள். வேடர்கள் அவர்களை ''யக்ஷ கோத்திரம்'' என பொது வாக அழைக்கின்றனர். வேடர்களிடம் பலதரப்பட்ட உட்பிரிவுகள் (சாதிகள்) இருக்கின்றன. ஆரம்பத்தில் 14 கோத்திரங்கள் இருந்ததாக அடையாளங்காணப்பட்ட போதும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆறு கோத்திரங்கள் இருப்பதாக அடையாளங்காணப்பட்டது. அவை ஊரு கோத்திரம், தலா கோத்திரம், நபுடன் கோத்திரம், உனாபான கோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம், மொரான கோத்திரம், அம்பனை கோத்திரம் என பாகுபடுத்தப் படுகின்றன. ஒவ்வொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்கின்றனர். இதன்படி ஊரு கோத்திரத்தினர் உனிச்சி, பிம்தன்னை, தம்பானை, தமன்கடுவ, யக்குரை உல்பொதை போன்ற பிரதேசங்களிலும், தலா கோத்திரத்தினர் ஹோனெபத்த, தம்பானை, ஒலிகொத்திய, களுகொலாப, யக்குரை, அம்பாறை, பக்கிஎல்ல போன்ற இடங்களிலும், நபுடன் கோத்திரத்தினர் தம்பானை, வட்டவனை, கத்தேகம்வெல, சொரபொரை, கல்போருயாய, பிந்தனை போன்ற இடங்களிலும், உனாபான கோத்திரத்தினர் ஹோனெபத்த, அம்பாறை, பக்கிஎல்ல, தனிகல் போன்ற இடங்களிலும், மொரான கோத்திரத்தினர் நிலகல, ஹோனெபத்த, ரண்டாரதூவ, சீதல வன்னிய, கொடதலாவை, உணுவதுர, பிபுல, மஹாஓயா, பிங்கொடை போன்ற இடங்களிலும், அம்பனை கோத்திரத்தினர் வாகரை, மட்டக்களப்பு போன்ற கரையோரப் பிரதேசங்களிலும் பரந்துவாழ்வதாக அறியமுடிகின்றது.

இலங்கையில் பல பிரதேசங்களிலும் வாழும் வேடர்களை பிரதேச ரீதியாக அடையாளப்படுத்தும் ஒரு பிரிப்பாகவே இது அமைந்திருந்தது. இலங்கையில் சிங்களவர் மற்றும் தமிழரிடம் காணப்படும் சாதியமைப்பு மற்றும் இந்தியாவில் நிலவும் சாதி அமைப்பு மற்றும் அதன் பலமான தன்மை, சாதிகளுக்கு இடையேயான முரண்பாடு ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது வேடர்கள் அவர்களுக்குள்ளே சாதி ரீதியாக முரண்படுவதில்லை. வேடர்கள் என்னும் பொது அடையாளத்தை தாங்கியவர்களாக வாழ்கின்றனர்.

வேடர்கள் அவர்களின் சமூகத்தில் வாழும் எவருக்கும் சிறப்புச் சலுகை கொடுத்து நோக்குவதில்லை. உதாரணமாக மந்திர ஆற்றல் கொண்ட மருத்துவர் அல்லது மதகுரு (Shaman) தனது வேலைகளை ஏனையவர்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு மேற் கொள்வார். இருந்தும் அவர் ஏனையவர்களைப் போலவே தனது நாட்களை வேட்டையாடுதல், தேன் எடுத்தல், அவரது சேனையில் வேலை செய்தல் எனக் கழிப்பார். மந்திர ஆற்றல் கொண்ட மருத்துவர் என்பதற்காக அவர் சமூகத்தில் இருந்து சிறப்புச் சலுகைகளை எதிர்பார்ப்பதும் இல்லை, அதே நேரம் சமூக உறுப்பினர்கள் அவருக்கு சிறப்புச் சலுகைகளை வழங்குவதும் இல்லை. அவரது மகன் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் அவரைப் போன்று மாந்திரிக மருந்துவராக எதிர்காலத்தில் வருவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலும் இருக்கலாம். ஏனெனில் அவர் தனது மகனை மருத்துவராக வரவேண்டும் என வற்புறுத்துவ தில்லை. அவரினுடைய மகன் தனது தந்தையின் திறனைக் கற்றுக் கொள்ள நாட்டம் காட்டாவிடின் ஏனைய நாட்டமுடைய வேடர் சமூகத்தைப் சேர்ந்தவர்களுக்கு அதற்கான பயிற்சிகளை அளிப்பார். கற்றுக் கொள்ளும் ஆர்வம், தேவை என்பவற்றின் நிமிர்த்தம் இது நடைபெறும். இயற்கையுடன் தொடர்புடைய வாழ்க்கையில் இணைந் துள்ள வேடர்கள் சமூகத்தின் தேவைக்கான சிறப்புத் தேர்ச்சியாளர் களைக் கொண்டிருப்பதுடன் அவர்களின் மூலம் வைத்தியம், சமயம், வாழ்வாதாரம் அல்லது உணவீட்டம் மற்றும் அவர்களைச் சூழவுள்ள இயற்கையை வெற்றிகொண்டு வாழ்வது தொடர்பான சேவைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வர்.

சடங்குகள், வேட்டை, உணவுவிநியோகம் போன்ற எந்தவொரு நிலையிலும் அவர்களிடம் சமமின்மையோ தரப்பிரிப்புகளோ பேணப் படுவதில்லை. அவர்களின் வேட்டைக் குழுக்களுக்குத் தலைவர்கள் இல்லை. வேட்டைப் பொருட்களும் பிற உணவுப் பொருட்களும் அனைவராலும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. இவ்வகைப் பண்பே சமத்துவ சமூதாயத்தின் சிறப்புப் பண்பு என மானிடவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சமத்துவ சமுதாயம் பகிர்ந்து கொள்வதை (Sharing) அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையைக் கொண்டது. இது சமநிலையின்மையினை ஒதுக்குகின்றது. உறவுப் பிணைப்பினை வலுப்படுத்துகின்றது (பக்தவத்சலபாரதி 2003:300-3001) என பழங்குடி சமூகத்திற்கு வரையறுக்கும் பண்பு களை வேடர் சமூகத்தில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இருந்தும் வேடர்கள் சிங்கள, தமிழ் இனங்களாக சமகாலத்தில் அடையாளப்படுத்தப்படுவதால் வேடர்களின் தொகை குறைவடைந்து கொண்டு வருகின்றது. வேடர்கள் இலங்கையில் வாழும் மக்கள் தொகையில் சிறு தொகையினராகும். இவர்கள் புகழ்பெற்ற மக்கள் தொகையினராக இருந்து குறைவடைந்து வரும் பழங்குடி சமூகமாக இலங்கையில் மாற்றமுற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ii. குடும்பம்

குழுக்களாக வேடர்கள் வாழ்ந்தாலும் குடும்ப அமைப்பு வேடர்களிடம் நிலவுகின்றது. குடும்ப அமைப்பு ஒரு தலைவனைக் கொண்டதாக அமைந்திருந்தது. தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியன குடும்பத்தின் பிரதான அலகுகளாகும். கணவனுக்குக் கட்டுப்பட்டு மனைவி செயற் படுவார். வேடர்கள் பிள்ளைகளை பெருமளவில் நேசிக்கின்றனர். பெற்றோர், பிள்ளைகள் யாவரும் ஒரே வாழ்விடத்தில் இணைந்தே வாழ்கின்றனர். திருமணத்திற்குப் பின்னர் பிள்ளைகள் வேறாகக் குடி போவார்கள். அந்தந்த நபர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காட்டுக்குள் அவர்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொள்வர். ஒரு வேடர் குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்திற்கு ஏனையோர் உரிமை பாராட்டுவதில்லை. எல்லைகள், குறிகள் மூலம் காட்டப்படும். தமது எல்லைக்கு உட்பட்ட மரங்களில் அல்லது கற்களில் குறி பதித்து எல்லைகள் காட்டப்படும்.

அனுராதபுர மாவட்டத்தில் வேடர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட ஜேம்ஸ் பிறோ (James Brow) மற்றும் ஏனைய மானிடவிய லாளர்கள் வேடர்கள் திராவிட முறையிலான திருமண முறையினை கடைப்பிடித்தாலும் அவர்களின் திருமணமுறை வட அமெரிக்கர்களின் திருமண முறையினை ஒத்ததாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்தனர். வேடுவர்கள் 14 வயதைத் தாண்டிய பின்னர் பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து வைக்க முடியும். அவளின் கணவன் இரண்டு தொடக்கம் பத்து வயது கூடியவராக இருக்க வேண்டும். திருமணத்திற்கான வயதெல்லை ஏனைய சமூகத்தினரின் திருமணத்திற்கான வயதெல்லையுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்ததாகக் கருதப்படுகின்றது. அதாவது இளமைத் திருமணமாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கை அரசாங்கம் ஆண், பெண் இருவரும் 18 வயதின் பின்னரே திருமணத்திற்கு தகுதியுடையவர்கள் என்பதை சட்டமாகக் கொண்டுள்ளது.

திருமணமாகும் வரை வீட்டுக் கடமைகள் இல்லாது பெண்கள் காணப்படுவர். அவர்களின் கடமைகளாக தனது சிறிய சகோதரங்களைப் பராமரித்தல், விறகு தேடுதல், தண்ணீர் எடுத்தல், சமைத்தல் போன்றன ஒதுக்கப்பட்டிருக்கும். சிறு வயதில் இருந்து பழக்கப்பட்ட ஒருவரையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் திருமணம் செய்வார்கள். எதிர்கால மருமகன் பெற்றோரிடம் குறித்த பெண்ணை மனைவியாகக் கேட்கும் போது அவர்கள் நம்பிக்கையடைவர். பெற்றோரால் திருமணம் முன் ஏற்பாடு எதுவும் இன்றி நடைபெறும். எனினும் சில வேளைகளில் பெற்றோர் மணமகன் தெரிவு விடயத்தில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துவர் (http://vedda.org/stegeborn.htm).

1989 வரை வேடர்கள் பதிவுத் திருமணம் மேற்கொள்ளவில்லை. அதன் பின்னர் வேடர்களின் திருமணத்தை சட்டபூர்வமாக்குவதற்காக அதிகளவான திருமணங்கள் அரசாங்கத்தால் பதிவுத்திருமணங்களாக மேற்கொள்ளப்பட்டன. சமகாலத்தில் வேடர்கள் விரும்பாவிட்டாலும் பதிவு திருமண பத்திரத்தில் கையொப்பம் இட்டு அல்லது கைவிரல் முத்திரையைப் பதித்து திருமணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது.[1]

தகப்பன் இறந்தால் மூத்த புதல்வன் தாய் மற்றும் சகோதரர்களின் முழுப் பொறுப்பினை ஏற்பான். தக்க வயதுடையவனாக இருந்தால் சேனையைப் பராமரிப்பது மற்றும் வேட்டையாடுவது ஆகியவற்றை தந்தையின் பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்வான். தகப்பனின் வேலைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து குடும்பத்தை வழிநடத்து வான். தனது மகன் திருமணம் முடித்து தனியாகச் சென்றால் தாய் தனது கணவனின் இளைய சகோதரர்களில் ஒருவரையோ அல்லது தனது உறவினராக உள்ள ஒருவரையோ கணவனாக ஏற்றுக் கொள்வாள்.

மனைவி இறந்தால் இறந்த பெண்ணின் தாய் சமையல் உபகர ணங்களை மீட்டெடுப்பார். ஏனெனில் அது புதுமனை புகும்போது அவளால் அத்தம்பதியருக்கு வழங்கப்பட்டது. புதல்வர்கள் தனது தந்தையுடன் இருக்க முடிவு செய்யப்படும். மனைவியின் உடைகள் அவரது தனிப்பட்ட பொருட்களை அவரைப் புதைக்கும் போது அல்லது எரிக்கும் போது அவருடன் சேர்த்து அவற்றையும் புதைப்பர் அல்லது எரிப்பர். வேடர்கள் தனது தாய் தனது மனைவி அல்லது புதல்விகளின்

1. பிறப்புப் பதிவு, திருமணப் பதிவு போன்றன வேடர்களுக்கு இலங்கைப் பிரஜைகள் என்னும் அங்கீகாரத்தை வழங்குவனவாக அமைந்திருந்தன. ஆரம்பகாலத்தில் வேடர்களை அரசாங்கத்தின் நிர்வாகச் செயல்பாடுகள் சென்றடையாததால் அவர்கள் புதிய வாழ்க்கைச் சூழலில் இணையும் போது சில அரசாங்கத்தின் சலுகைகளை இழக்கவேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைகளை இன்னொருவர் அணிவதைப் பார்க்கும் போது உளரீதியாக கஷ்டப்படுவர். அதனாலேயே இவ்வாறு செய்கின்றனர். வேடர்களைப் பொறுத்தவரை கடந்த காலத்தைப் பற்றி அதிகளவில் நினைப்பது சுகாதாரரீதியாக நல்ல விடயமில்லை எனக் கருதுகின்றனர். மனைவியின் சகோதரிகளில் திருமணமாகாது இருக்கும் ஒருவரை சில சந்தர்ப்பங்களில் மணம் முடிப்பர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உறவு முறைகளும் ஏனைய வழக்கங்களும் பழைய நடைமுறைபோன்று பின்பற்றப்படும். சொந்தம் இல்லாத இன்னொருவரை மணம் முடிக்கும் போது அந்த ஊரின் நடைமுறைக்கேற்ப நடந்துகொள்வர்.

வீட்டுத் தலைவர் வேட்டை மற்றும் தேன் தேடுவதற்கு ஒவ்வொரு நாளும் செல்வர். வேட்டையில் உணவு கிடையாவிட்டாலும் கிழங்கு வகைகள், இலை குழைகளை உணவுக்காக எடுத்து வருவர். அன்றைய நாள் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும் ஏதாவது உணவுப் பொருளுடன் திரும்புவார் என்னும் நம்பிக்கையுடன் குடும்ப உறுப்பினர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

சிறுவர்கள் 10 - 11 வயதெல்லையை அடையும்போது வேட்டையாடுதல், மிருகங்களைக் கண்காணித்தல் மற்றும் இயற்கையை அவதானித்தல் போன்ற திறமைகளைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றனர். அவை தொடர்பான பயிற்சிகளும் ஆலோசனைகளும் சிறுவர்களுக்கு தந்தை மற்றும் முதியவர்களினால் வழங்கப் படும். ஒரு சிறுவன் வில்லை தாங்கிக் கொள்ளும் இயலுமையை எப்போது பெறுகின்றானோ அப்போது வேட்டைக்குரிய உபகரணமான வில், அம்பு கொடுக்கப்படுகின்றது. அதே நேரம் 8 - 9 வயதை தாண்டும் போது தேன் எடுப்பதற்கு அனுப்பப்படுகின்றனர். 11 - 12 வயதில் அவனது தந்தையுடன் ஒரு சிறுவன் வேட்டைக்குத் துணையாகச் செல்வான். வேட்டையாடுதலை மிகவும் கடினமான விடயமாக வேடர்கள் கருதினர். அதில் பல ஆபத்தான நிகழ்வுகளை எதிர்கொள் வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வேடர்கள் கருதுகின்றனர். மிருகங்கள் எதிர்பாராதவிதமாக வேட்டையாடிகளைத் தாக்கலாம் என கருதுகின்றனர். இதனால் 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை வேட்டையாட அனுமதிப்பதில்லை. தந்தையுடன் அல்லது அவனின் உறவினருடன் வேட்டைக்குச் செல்லும் சிறுவன் ஒரு நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையில் வெற்றியடைவான். அவன் வெற்றிகரமாக ஒரு மிருகத்தை வேட்டையாடியபின் அதனைப் பற்றிய பெருமைகளை தொடர்ச்சியாகப் பேசப் பேச எதிர்காலத்தில் அவனின் வேட்டைத் திறனும் மேம்பட்டுக் கொண்டு செல்லும் என்பதால் சிறுவன் நிகழ்த்திய வேட்டை பற்றிய பல விடயங்களையும் அவனுடன் பெருமையாகப் பேசிக் கொள்வர். காலம் செல்லச் செல்ல பெருமைக்காக வேட்டையாடுவதைத் தவிர்த்து சாதாரணமான ஒரு வேட்டையாடியாக மாறுவான். அதன்பின்னர் வேட்டை விலங்கை தனித்து எதிர்கொள்ளும் மனவலிமையையும் அதனை வேட்டையாடும் திறனையும் பெறுகின்றான்.

வேட்டையாடும் கலாசாரம் வழமையாக ஆண்களுக்குரியதாகவே இருந்தது. பெண்கள் வில் - அம்பினைப் பாவிப்பதற்கு பயிற்றுவிக்கப் படுவதில்லை. மிருகங்களைக் கண்காணிப்பதற்கோ அவற்றின் ஒலிகளைக் கேட்பதற்கோ அல்லது வேட்டையாடுதலுடன் தொடர் புடைய உடல் உள ரீதியான எந்தவிதமான செயற்பாட்டிலும் தொடர்பு படுவதில்லை. வளர்ந்த பெண்கள் பிள்ளைகளை பராமரிப்பதில் முக்கிய பங்கெடுப்பர். ஒரு குழந்தையை சுமார் 5 வயதைத் தாண்டும் வரை பராமரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பர்.

பொதுவாக வேடர்கள் ஒன்றாக அல்லது இரண்டு மூன்று குடும் பங்கள் கொண்ட சிறு குழுக்களாக இணையும் பகுதியில் வாழ்ந்தனர். கற்குகை குழுக்களானது பொது உரிமைக்கு உட்பட்டதாகும். ஒவ்வொரு குடும்பத்தினரும் குகையில் குறிப்பிட்டதொரு இடத்தை அல்லது பகுதியை வேறுபடுத்திக் கொண்டு இருந்தனர். ஒவ்வொரு குடும்பமும் குகையை சுவர் போன்றவற்றால் வேறுபடுத்தி பிரிக்காத போதிலும் ஒவ்வொரு குடும்பத்தின் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டது. அதற்கேற்றாற்போல் குடும்பங்களிடையே புரிந்துணர்வு நிலவியது. சிறு பிள்ளைகள் மாத்திரம் அவர்களது விருப்பத்திற்கேற்ப கற்குகை களில் அங்குமிங்கும் உலாவித் திரிந்தனர்.

### iii. தலைமைத்துவம்

வேடர்கள் காட்டில் வாழ்ந்த காலத்தில் தலைவர் என ஒருவர் இருக்க வில்லை. தலைவரைத் தெரிவு செய்வது வெவ்வேறு செயற்பாடுகளை வைத்து நடைபெறும். பொருளாதாரம், மதம், அரசியல் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்தில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் வேடர்களுக்கு அந்நியமானவையாகும். தலைமைத்துவம் எப்போதும் சமூகத் தேவையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதாகவே உள்ளது. வேடர்களிடம் மருத்துவ குணம் வாய்ந்த தாவரங்கள் பற்றிய அறிவினைக் கொண்ட நபர்கள் காணப்படுகின்றனர். இது தவிர வேடர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அவர்களின் குடும்ப மாகும். வேலைகள் வகுப்பு, வயது மற்றும் பால் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது. சில செயற் பாடுகளில் திறமை கொண்டவர்களும், வயதில் மூத்தவர்களும், அறிவு மிக்கவர்களும் நிகழ்வுகளைத் தலைமைதாங்குவதற்கு தகுதி உடையவர்களாகக் காணப்படுவர்.

குறிப்பிட்ட சில விடயங்களில் சிறந்த அனுபவம் கொண்ட வர்கள் குறித்த அத்துறை பற்றி பெரும்பாலும் ஆலோசனை வழங்குபவர்களாகக் காணப்படுவர். உதாரணமாக வேட்டையின் போது கூர்மையான கண் பார்வை உடையவர் ஏனையவர்களுக்கு தலைமை தாங்கிச் செல்வார். வேடர்களின் அடையாளங்கள் மகன்/மகள், கணவன்/மனைவி, தாய்/தந்தை, மாமா/மாமி மற்றும் நண்பர்கள் என்னும் அடிப்படையில் காணப்படுகிறதே அன்றி அவர்களின் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைவதில்லை. தலைமைத்துவமானது ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது அதில் ஒருவரை ஒருவர் தங்கி இருப்பதனை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுகிறது. பழங்குடி சமூக அமைப்பில் தலைமைத்துவம் தொடர்பான நிலைப்பாட்டை பக்தவத்சலபாரதி குறிப்பிடும் கருத்துக்கள் வேடர்களுக்கும் பொருத்தமுடையனவாக அமைகின்றன ''தலைமைமுறைகூட சிக்கல்கள் ஏற்படும் காலங்களில் மட்டுமே ஏற்படுகின்றது. இதனை ஒரு நிலையான அமைப்பாக ஏற்படுத்தி அதன் பொறுப்புக்களைக் கவனிக்கும் பொருட்டுச் சிலர் பொருளாதாரப் பயனைச் செய்வதிலிருந்து ஒதுக்கிவிடுவதில்லை. ஆனால் எந்தவகையிலும் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினர்மீது ஆதாயம் தேடும்வகையில் செயற்படுவது கிடையாது'' (பக்தவத்சலபாரதி 2003:300).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

தேவையின் நிமித்தம் குறித்த நபர்கள் குறிப்பிட்ட நிகழ்வுகளை அல்லது செயற்பாடுகளை தலைமையேற்று செயற்படுத்தும் நடைமுறையே வேடர்களின் சமூக அமைப்பில் நிலைகொண்டுள்ளது. இதில் முழுக்க முழுக்க குறித்த நபர்களில் காணப்பட்ட திறனுடன் சேர்ந்த அனுபவம் மதிக்கப்பட்டுள்ளது. வேடர்கள் யாவரும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து சனநாயக பண்புடைய வாழ்வினை வாழ்ந்துள்ளனர்.

சமகாலத்தில் வேடர்களின் பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட வேண்டியிருந்தது. இப்போது ''ஊருவரிக்கே வன்னிலாத்தன்'' பரம்பரை அவர்களின் நாடுதழுவிய தலைமைத்துவத்தைக் குறிக்கின்றது. அதன் சமகாலத் தலைவராக ஊருவரிக்கே வன்னிலா எத்தோ விளங்குகின்றார் (படம்: 02 & 03). தலைவராக இருந்த ஊருவரிக்கே திசகாமி 1999இல் அவரின் 96ஆவது வயதில் மரணமடைந்ததைத் தொடர்ந்து சமகால தலைவரான அவரின் மகன் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இதனைவிட ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒவ்வொரு தலைவர் காணப்படுவர். உதாரணமாக முறுத்தானைக் கிராமத்தின் தலைமை சின்னத்தம்பி வண்டையா என்பவரிடமும் (படம்: 04) வாகரை பிரதேசத்தின் தலைமைத்துவம் வேலாயுதம் என்பவரிடமும் உள்ளது. தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு செயற்படுதல் வேடசமூகத்தின் சிறந்த பண்புகளில் ஒன்றாகவுள்ளது.

தலைவர்கள் கோத்திரத்தின் முன்னேற்றத்திற்குரிய முடிவுகளை எடுப்பர். சமய, சமூக விழாக்கள் மற்றும் நிகழ்வுகள் நடைபெறும் போது அவற்றுக்குத் தலைமை தாங்குவர். சமூகம் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு முயற்சித்து சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுப்பர். முன்பு இருந்த தலைவர் மரண மடைந்த பின்னர் அவர்களிடம் இருக்கக்கூடிய முதியவரொருவர் தலைவரின் கோடரியை[2] புதிய தலைவருக்கு வழங்குவதன் மூலம் தலைமைத்துவம் புதியவருக்கு கைமாறப்படும் அல்லது புதிய தலைவர்

2. சமூக நிகழ்வுகளின்போது தோளில் அணியும் சிறிய கோடரி அவர்களின் இனத் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் சின்னமாக வேடர்களால் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கோடரி அவர்களின் உணவீட்டத்தில் முக்கியமானதொன்றாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]


நியமிக்கப்படுவார் (சுட்டா சுட்டா[3], தம்பானை, மகியங்கனை). அவர் களின் கோத்திரத்தைப் பாதுகாத்தல் தலைவரின் பிரதான பணியாக வுள்ளது. பிரதேசத் தலைவருக்கும் நாடுதழுவிய தலைமைத்துவத்திற்கு பொறுப்பான ஊருவரிக்கே வன்னிலாத்தன் பரம்பரைக்கும் எப்போதும் தொடர்பு இருக்கும். பிரதேசத் தலைவர்களால் அவர்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாதபோது ஊருவரிக்கே வன்னிலாத்தன் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்.

### iv. மொழியும் அதன் சமகால நிலையும்

ஒரு சமூகத்தின் அடையாளத்தைத் தாங்கிய சாதனங்களில் பிரதான மானது மொழி. வேறுபட்ட பண்பாட்டுச் சூழலைக் கொண்ட மனிதக் குழுக்கள் அவற்றின் தொடர்பாடலுக்காக ஏற்படுத்தப்பட்ட குறியீட்டு வடிவமாக மொழி அமைகின்றது. இதனால் மொழி சமூகங்களை வேறுபடுத்தி அறிய உதவும் முக்கிய சாதனம். ''ஒரு சமூகத்தில் பல்வகையான குறிகள் காணப்படுகின்றன. பாவனை (Gestures), உடலசைவுகள், மற்றும் செய்பண்டங்கள், மொழி என்பன அக்குறியீடு களில் சிலவாகும். இவற்றில் ஒலிக் குறியீடுகள் அதாவது மொழிக் கட்டமைப்பு முதன்மையானது. விடயியின் கருத்து வெளிப்பாட்டை ஏனைய குறியியல் அமைப்புக்களிலும் பார்க்க மொழிக் குறியீடுகளே மிகவும் தெளிவாகப் புலப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இவை பெருந்தொகையான அனுபவத்தையும், அர்த்தத்தையும் சார்பற்ற முறையில் தன்னுள்ளே தேக்கி வைத்து மற்றவர்களுக்குப் பரிமாற்றுவ துடன், காலாதிகாலமாக அவற்றைப் பேணி பாதுகாத்தும் வருவதால், பண்பாட்டின் கொள்கலனாகவும் மொழி உள்ளது'' என்பார் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா (2010:24). இங்கு மொழி தொடர்பாடலுக்குரியதாக அன்றி சமூகங்களின் அடையாளங்களைத் தாங்கிய வடிவமாகவும் விளங்குகின்றது என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. சமூகத்தில் வேரூன்றியுள்ள பண்பாடு, தொழில்நுட்பம், மரபுகள், வாழ்க்கை முறை, கலை என அத்தனை அம்சங்களையும் தாங்கிய வடிவமாக

3. இங்கு இடம்பெறும் சுட்டா சுட்டா என்பது தகப்பன் மகன் இருவரின் பெயரையும் குறிக்கின்றது. தகப்பனின் பெயர் சுட்டா. மகன் பிறப்பதற்கு முன்னர் தகப்பன் இறந்ததால் தகப்பனின் பெயரையே மகனுக்கு சுட்டா என இட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281040



விளங்கும். வேட சமூகத்தின் இன அடையாளத்தை, பண்பாட்டுத் தனித்துவத்தைக் காட்டும் முக்கியமானதொரு சான்றாக வேடர்களினால் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் ''வேட பாசை'' விளங்குகின்றது. ஒரு சமூகம் தொடர்பாடலுக்குரிய ஒரு மொழியைக் கொண்டிருக்குமாயின் அது பூர்வீகமான வரலாற்று அடிப்படைகளையும், பண்பாட்டு மரபுகளையும், தனித்துவமான வாழ்க்கைக் கோலத்தையும் கொண்டதொரு சமூகமாக விளங்கும். ஏனெனில் தொடர்பாடலுக்காக சமூகங்கள் உருவாக்கும் பல ஒலிக் குறியீடுகளின் இணைவில் மொழி உருவாக்கப்படுகின்றது. சமூகங்கள் உருவாக்கும் மொழிக் குறியீடுகள் சமூகத்தின் அத்தனை அம்சங்களையும் தாங்கிய சாதனமாகும்.

வேடர்களின் வேடபாசை எழுத்துவடிவம் பெறாத ஒரு இனக் குழும மொழியாகும். வேடபாசை பற்றிக் குறிப்பிடும் சிலிக்மன் ''இது சிங்கள மொழியின் பேச்சுவழக்கு நீட்சியாகவும் சிங்களவர்களின் பேச்சுப் பாணியில் இருந்து வேறுபட்டதாகவும் விளங்குகின்றது. சிங்கள மொழியில் இருந்து சிறுசிறு வேறுபாடுகளைக் கொண்டிருப்பதால் வேடபாசைச் சொற்களை முறையாக உச்சரிக்கும்போது வேடபாசை பற்றிய அறிமுகம் இல்லாதவர்களுக்கு வேடபாசை புதுமொழியாகக் காணப்படும். அத்துடன் மிருகங்கள், ஏனைய இயற்கையின் பொருட்களுக்கு வேடர்கள் சில தனித்துவமான சொற்களைப் பயன்படுத்துகின்றனர். சில சொற்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் இருந்து வந்தனவாகவும் காணப்படுகின்றன. குறிப்பிட்ட அளவான சொற்கள்தான் அவர்களின் வேட பாசைக்கு உரியதாகவும் இவற்றுள் குறிப்பிட்ட சிலவற்றுக்கு மட்டும் இலக்கண வெளிப்பாடுகள் காணப்படுவதுடன் சிங்களத்தில் காணப்படும் சில சந்தேகத்திற்குரியதாகக் காணப்படும் சொற்கள் இவர்களின் இலக்கண வெளிப்பாடுகளில் உள்ளடக்கப்படாது'' (Seligmann,1911:380) என்பார். தனித்துவமான பேச்சுவழக்கை கொண்ட மொழி வடிவமான வேடபாசை சிங்கள, தமிழ் மொழிகளில் இருந்து அதற்கான சொல்லகராதியை பிற்காலத்தில் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது என்னும் முடிவுகளையே சிலிக்கமன் வழங்குகின்றார்.

வேடர்கள் இந்தியா மற்றும் இலங்கைக்குள் திராவிடர் மற்றும் ஆரியர் உட்புக முன்னர் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களை அவர்களின் மொழி வழங்குகின்றது. நந்ததேவ விஜய சேகர அவர்களின் (Nandadeva Wijesekera) கருத்தின் அடிப்படையில் வேடர்களின் மொழியானது ஆரம்பகால மொழிகளில் இருந்து உருவானதாகவும் இதனை ''முண்டா'' மொழி என்றும் அழைக்கின்றார். இந்த மொழி இந்தியாவில் உள்ள பழங்குடியினரினுடைய மொழியில் ஒருவகை யாகும். காலத்திற்குக் காலம் இடம்பெற்ற இந்து-ஆரியர்கள் மற்றும் திராவிடர்களின் படையெடுப்பினால் வேடர்களினால் பயன்படுத்தப் பட்டு வந்த வேடபாசை படிப்படியாக எலு (Elu) எனப் படும் பண்டைய சிங்கள மொழியிலிருந்தும், தமிழ் மொழியிலிருந்தும் காலத்திற்குக் காலம் சொல்லகராதியைப் பெற்றுள்ளது. வேட பாசையினை தென்னிந்திய திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவற்றுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாது என்னும் கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தார். இங்கு வேடபாசையினை இனக்குழும மொழியான முண்டா மொழியிலிருந்து வளர்ச்சியடைந்த ஒரு புராதனமான மொழி என்பதை உறுதிப்படுத்த முயன்றதுடன் இந்த வேட பாசை சிங்கள, தமிழ் மொழிகளினால் பிற்காலத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்பதையும் உறுதிப்படுத்த முயல்கின்றார் விஜயசேகர. முண்டா மொழி பற்றிய கருத்துக்களை சிலிக்மன் வழங்காத போதும் விஜயசேகர குறிப்பிடும் ஏனைய கருத்துக்கள் சிலிக்மனின் கருத்துக்களுடன் ஒத்துப்போவனவாகவே அமைகின்றன.

M.W சுகதபால டி சில்வா (M.W.Sugathapala de Silva) வேட மொழியைப் பற்றிய விளக்கத்தை மேலும் தெளிவுபடுத்த முனைகின் றார். வன்னிய லாடோ (wanniya-laeto) என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு அவரினுடைய விளக்கம் அமைந்திருந்தது. சிங்கள மக்கள் காட்டுப் பகுதிகளை ''வன்னி எல்லை'' என அழைத் தனர். முன்பே குறிப்பிட்டவாறு ''வன்னிய லாடோ'' என்பது காட்டு வாசிகளையும் ''வன்னி'' எனப்படுவது வேடுவர்களின் மொழியிலும் சிங்களவர்களின் மொழியிலும் ''காடு'' என அழைக்கப்படுவதாலும் அற்றோ எனப்படுவது ஒருமை மற்றும் பன்மை உயிரூட்டல் பெயர்ச் சொல்லாகக் காணப்படுகின்றது.

சுகதபால டி சில்வாவின் கருத்தின் அடிப்படையில் ''வன்னி'' எனப்படும் சொல்லானது வேடுவ மொழியில் இருந்து இரவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கப்பட்டதாகவும் இது எவ்வாறு இரவல் வாங்கப்பட்டது என்பதை அவர் விளக்காவிடினும் அவரது புத்தகத்தில் வேடுவ மொழியினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விபரித்துள்ளார். ஆனால் இந்த மொழியானது சமஸ்கிருதம் ஆகிய இந்தியாவின் செந்நெறி மொழியுடன் தொடர்புபட்டு உள்ளது எனக் கருதுவது தவறு எனக் கருதுகின்றார். மற்றும் வனம் எனப்படும் காடு அல்லது பூஞ்சோலை வன்னி என்னும் சொல் சமஸ்கிருதம் அல்லது இந்து-ஐரோப்பிய மற்றும் திராவிட மொழிக்கு தொடர்புபடாமலும் இரண்டு பிரதான மொழிக் குடும்பங்களுடனும் தொடர்புபடாமலும் அமைகின்றது. இருந்தும் வேடர்கள் ஏனைய தென்னியாவில் காணப்படும் பழங்குடி மக்களில் ஒரு பிரிவினரான சென்சு (Chenchu) இனத்தினருடன் தொடர்புபட்டவர்களாக காணப்படுகின்றனர். செஞ்சு மக்கள் ஆந்திரா, தெலுங்கு, கர்நாடகா போன்ற மாநிலங்களில் வாழ்கின்றனர். வேடர்கள் போன்ற வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். திராவிட மொழிப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். செஞ்சு இனத்தினர் வேடர்களின் தோற்றப் பொலிவைக் கொண்டிருந்தாலும் இவர்கள் திராவிடர்களினாலும் தெலுங்கு மக்க ளினாலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி ஆக்கிரமிக்கப்பட்ட இனங்களின் மொழியைக் கற்றுக் கொண்டனர்.

சுகதபால டி சில்வா அவர்களின் கருத்துக்கள் வேடர்களின் மொழி பற்றியதாக அமைந்திருந்தாலும் வேடர்களுக்கும் தென்னிந்தியப் பழங்குடிகளுக்கும் இடையேயான தொடர்புகளையும் காட்ட முயல் கின்றார். இருந்தும் சென்சு இனத்தினர் எம்மொழியைப் பேசினர், அம்மொழியின் பாதிப்புக்கள் வேடர்களின் மொழியில் தாக்கம் செலுத்தியுள்ளதா என்னும் தகவல்களை வழங்காது விடுகின்றார். வேடபாசையில் இருந்து சிங்கள மொழி சொற்களை இரவல் வாங்கி யுள்ளது என்னும் கருத்தின் ஊடாக சிங்கள மொழிக்கு முற்பட்ட மொழியாக வேடபாசையினைக் காட்ட முயல்கின்றார். அத்துடன் சமஸ்கிருதம் போன்ற இந்தியாவில் நிலவிய பாரம்பரிய செந்நெறி மொழிகளுடன் தொடர்பற்றது என்பதையும் குறிப்பிடுவதன் மூலம் வேடர்களின் மொழி தொன்மையான மொழி என்பதை ஆதாரப்படுத்த முயன்றுள்ளார். இம்முயற்சி வேடர்களை இலங்கையில் வாழ்ந்த ஆதி குடிகளாகக் காட்டும் முயற்சியாகவும் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த ஆய்வாளர்களின் கருத்துக்களில் இருந்து மொழியியலாளரான மெரிட் ரூலன் வேட மொழி பற்றிய புதியதொரு பதிவை முன்வைக்கின்றார். பழங்குடிமொழிக் குடும்பத்திற்குள் முண்டா மொழிகள் உள்ளடக்கப்படுவதாகவும் இவை இரண்டு கிளைகளாக வளர்ச்சியடைந்ததாகவும் குறிப்பிடுகின்றார். சிறிய முண்டா மொழிக்குடும்பம் வடஇந்தியாவிலும் பெரிய முண்டா மொழிக்குடும்பம் மேலும் பாகுபடுத்தப்பட்டு மொன்கார் (Mon-khmer) குடும்பம் என தென்கிழக்கு ஆசியா மற்றும் வங்காளவிரிகுடாவின் நிக்கோவார் தீவுகள் வரை பரந்திருந்தது என்கின்றார். ரூலனின் வகையீட்டின்படி வேடமொழி முண்டா மொழியின் இரு குடும்பத்தினுள்ளும் உள்ளடக்கப்படவில்லை. ரூலன் இந்தோ-ஈரானியன் மொழி வகுப்பிற்குள் வேட மொழியை கொண்டு வருகின்றார். இது இந்து-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் காணப்படும் ஒரு உப மொழியாகும். இதனை அமெரிக்க மொழியியல் நிலையத்தில் பணிபுரியும் வாவரா கிறைம்ஸ் (Barbara Grimes) அவர்களும் ஒத்துக் கொள்கின்றார். இந்தோ-ஆரியன் மொழியான சிங்களம் இந்தோ-ஈரானிய மொழிக்குடும்பத்திற்கும் உரியது. இது இலங்கையில் பேசப்படும் பெரும்பான்மை மொழி என்கின்றார்.

சுகதபால டி சில்வா குறிப்பிட்ட சிங்கள மொழி வேட மொழியில் இருந்து சொற்களை இரவல் வாங்கியது என்னும் கருத்து மற்றும் ரூலனின் இந்து-ஈரானிய மொழிக்குடும்பத்துக்குரியதாக வேட மொழியைக் கொள்வது மற்றும் அதே மொழிக் குடும்பத்திற்குரியதாக சிங்கள மொழியையும் உள்ளடக்குவது என்பன சிங்களம் வேட மொழி என்பவற்றிக்கிடையே உள்ள தொடர்புகளை வலுப்படுத்தும் முயற்சிகளாக அமைகின்றன. வேடர், சிங்களவர் ஆகிய இரு இனங்களும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட தொடர்புகளின் மூலம் மொழிப் பரிமாற்றத்திற்கு உட்பட்டுள்ளது அதாவது ஒரு இனத்தின் மொழியை இன்னொரு இனம் இரவல் வாங்கியுள்ளது என்பது வேடர்களின் மொழி பற்றிய இந்த ஆய்வுப் பகுதியின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. வேட சமூகம் சிங்கள சமூகத்தினர் இலங்கையில் காலூன்றுவதற்கு முன்பிருந்து இலங்கையில் வாழ்ந்து வந்த இனமாகக் கருதப்படும் நிலையில் ஆரம்பத்தில் சிங்களவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர்களின் மொழியின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனை சுகதபால டி சில்வா அவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. பிற்காலங்களில் சிங்கள மொழி வேட மொழியை விட மேம்பட்டு வளர்ச்சியடைந்த நிலையில் வேட மொழி சிங்கள மொழியில் இருந்து இரவல் வாங்கி வளர்ச்சியடைந்துள்ளது. இந்நிலையில் கொண்டும் கொடுத்தும் இரு மொழிகளும் வளர்ச்சியடைந்துள்ளன என்பது உறுதியாகின்றது. சிங்கள மொழி அதிகாரம் (அரசியல் அதிகாரம்) மிக்க மொழியாக விளங்கியதால் வேகமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

முடிவாக வெளி இடங்களிலிருந்து வேடர்கள் வாழும் இந்த தீவுக்கு மக்கள் வந்தபோது (சிங்களவர், தமிழர் மற்றும் ஏனைய இனங்கள்) வேடர்கள் கலப்புத் திருமணத்தினால் உள்வாங்கப்பட்டதைப் போல இடமாற்றம் மற்றும் புதிய இடங்களுக்கு புலம்பெயர்ந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினர். இதனால் வேடர்களுக்கிடையே இருந்த சமூக ஒருமைப்பாடு சிதைவடைந்துள்ளது. அதே வேளை சிலர் தமது அடையாளத்தினைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர். வேடர்கள் அவர்களினுடைய மொழியினை தக்கவைத்திருந்தாலும் ஏனைய அந்நிய மொழிகளில் இருந்து சில சொற்களை இரவல் வாங்கினர். இனங்கள் ஏனைய இனங்களுடன் தொடர்பு கொள்ளும் போது பலம்பொருந்திய மொழியிலிருந்து சில சொற்களை உள்வாங்குவது பலம்பொருந்திய மொழியின் பலமாகும். இவ்வடிப்படையிலேயே பாரம்பரிய சிங்கள மொழியான 'எலு' மொழியில் காணப்படும் சில சொற்கள் வேட பாசையில் உள்வாங்கப்பட்டன. வேடர்கள் பிற்காலத்தில் சிங்களவர்களினால் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பின்னர் வேட பாசையில் பேசுவதைத் தவிர்த்து சிங்கள மொழியை தொடர்பாடலுக்குப் பயன்படுத்துகின்றனர். (http://vedda.org/stegeborn.htm). இது போன்று தமிழர்களால் உள்வாங்கப்பட்ட வேடர்கள் தமிழ் மொழியைத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்துகின்றனர்.

பிற்காலங்களில் சிங்கள, தமிழ் இனங்கள் வளர்ச்சியடைந்த போது அவற்றின் மொழியும் வளர்ச்சியடைந்தது. அவை எழுத்து வடிவம் கொண்ட மொழியாகவும் அமைந்திருந்தது. தொடர்பாடலுக்குரிய எழுத்து வடிவம் பெறாத மொழியாக விளங்கிய வேட மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலங்களில் சிங்கள, தமிழ் மொழிகளின் ஆக்கிரமிப்பால் கொஞ்சம் கொஞ்சமாக அதன் பலத்தை இழந்து இன்று தொடர்பாடல் அந்தஸ்தை இழந்த மொழியாகவும் மாறிவிட்டது. இந்நிலையில் உலகில் அழிவடைந்து சென்ற மொழிகளின் பட்டியலில் உள்ளடக் கப்படும் மொழியாக இடம்பிடித்துள்ளது.

வேடமொழி பற்றிய இந்த ஆய்வுப் பகுதியின் அடுத்த நிலையில் வேடபாசையின் வீழ்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

வேடபாசை இப்போது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது / வழக் கொழிந்துள்ளது என்று குறிப்பிடலாம். வேடர்களின் பாரம்பரியமான மூலமொழி தம்பானையில் வாழும் வேடர்களினாலேயே பயன்படுத் தப்படுகின்றது. கரையோர, அனுராதபுர வேடர்கள் அவர்களை வேடர்கள் என அடையாளம் காட்டாமல் மறைப்பதில் கண்டிப்பாக இருப்பதால் வேட்டையின் போதும் குலதெய்வத்திற்கான சடங்கின் போதும் சடங்குப் பாடல்களைப் பாடுவதற்கும் மட்டுமே வேடபாசை யைப் பயன்படுத்துகின்றனர். சமகாலத்தில் அவர்களின் தொடர்பாடல் மொழியாக (பேச்சுவழக்கு வடிவம்) அவர்கள் சார்ந்து வாழும் பிரதான இரு இனக்குழுக்களின் மொழிகளான சிங்களம், தமிழ் ஆகிய இரண்டையுமே பேசுகின்றனர். சிங்களத்தை பேசும் வேடர்கள் தென்கிழக்குப் பிராந்தியங்களில் வாழ்கின்றனர். சிறப்பாக ஊவா மாகாணத்தை அண்மித்த பிரதேசங்களில் வாழ்கின்றனர். இதன்படி அனுராதபுரம், வடமத்திய மாகாணம் என்பன குறிப்பிடத்தக்கன. ஏனைய கிழக்குக் கரையோரங்களில் வாழும் வேடர்கள் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மட்டக்களப்பு, திருகோண மலை போன்ற பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்கள் தாய்மொழியாகத் தமிழைப் பேசுகின்றனர். இருந்தும் அவர்களின் பேச்சு வழக்கு தனித்துவமானது. வேடர் என்பதை அடையாளப்படுத்தும் இயல்புடையது (https:// www.encyclopedia. com/ places/ asia/ sri-lankan-political-geography/ vedda).

வேட மொழியின் பேச்சொலி சிங்கள மொழியில் இருந்து வேறு பட்டது. இருந்தும் பிற்காலத்தில் வேடர்கள் சிங்கள மொழியில் இருந்து சொற்களை உருவாக்கி வேடபாசையுடன் இணைத்து மொழிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கையை உண்டுபண்ணினர். அவர்களின் சொல்லகராதியை வளப்படுத்தியுள்ளனர். 10ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் இருந்து வேடர்கள் தொன்மையான சிங்கள மொழியிலுள்ள விதிகளை கையாள ஆரம்பிக்கின்றனர். அதே நேரம் வேடர்கள் அவர்களுக்கே தனித்துவ மான பல சொற்களை சிங்கள மொழியில் இருந்து பெற்றுக் கொள்ளாது தக்கவைத்துள்ளனர். மாறாக சிங்கள மொழி கூட தொன்மையான வேடமொழியிலிருந்து இரவல் வாங்கப்பட்டதாகக் கூட கருதப் படுகின்றது.

1959ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது ஆரம்ப காலத்தில் காணப்பட்ட வேடர்கள் அவர்களின் வேட பாசையில் சிறந்த பரீட்சயம் உடையவர்களாக இருந்தனர். ஆனால் 1990 ஆண்டுகளில் வேடர்கள் வேடபாசையில் சில சொற்களையும் வாக்கியங்களையுமே அறிந்து வைத்திருந்தனர் என்பதை ஆய்வுகள் தெரியப்படுத்தின. இந்த ஆய்வு முடிவுகள் வேடர்கள் ஏனைய இனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியதால் வாழ்வியல் தேவையின் நிமித்தம் புதிய மொழிகளை தொடர்பாடல் மொழியாக பின்பற்றி யுள்ளனர் என்பதையே தெரியப்படுத்துகின்றன. ஆனால் வேட மொழியினைச் சிறந்த முறையில் பேசக்கூடிய சில வேடர்களும் காணப்பட்டனர். இருந்தும் அவர்களால் தொடர்பாடலுக்காக வேட பாசையினை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தது. இளந்தலைமுறையினரே வேடபாசையில் பரீட்சயம் குறைந்த வர்களாக மாறினர். ஏனெனில் அவர்களின் தொடர்பாடல், கல்வி, தொழில் சார்ந்த நடவடிக்கைகள் அனைத்தும் சிங்கள, தமிழ் மொழி ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது.

புதிய வாழ்க்கைச் சூழல் வேடர்களின் பாரம்பரிய மரபுகளில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்தியது. ''அனைவருக்கும் இலவசக் கல்வி'' என்னும் அரசாங்கத்தின் தேசியக் கொள்கைக்கு அமைய வேடச் சிறார்கள் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகின்றது. கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களில் பிள்ளைகளை நிர்ப்பந்தப்படுத்தி பாடசாலைக் கல்வியைத் தொடரச் செய்தனர். இதற்கமைய காடுகளில் இருந்து வேடர்கள் தனிமைப்படுத்தப்பட்டு புதிய வாழ்விடங்களில் குடியமர்த்தப்பட்டதால் அவர்கள் வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பிரதேசங்களிலும் அரச பாடசாலைகள் அமைக்கப்பட்டு அவற்றின் ஊடாக இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

இலங்கையில் உள்ள பாடசாலைகள் சிங்கள, தமிழ் மொழி மூல பாடசாலைகளாக அமைந்துள்ளதால் வேடச் சிறுவர்கள் அவர்களின் தாய்மொழியிலன்றி சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமே கல்வியைக் கற்கவேண்டியிருந்தது. வேடபாசை வரிவடிவமற்றதாகவும் அரச அங்கீகாரம் அற்ற பழங்குடி மொழியாகவும் விளங்கியதால் அதனை தேசிய மொழிகளில் ஒன்றாக அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை / ஏற்றுக் கொள்ளவில்லை. சிங்களம், தமிழ் ஆகியவற்றையே உத்தியோக பூர்வ மற்றும் தேசிய மொழிகளாக 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அங்கீகரித்து சட்டமாகக் கொண்டுவந்தது. ''இலங்கைப் பிரஜை ஒருவர் இலங்கையில் உள்ள தேசிய மொழிகளில் ஒன்றின் ஊடாக கல்வியைக் கற்பதற்கு தகுதியுடையவராவார். அத்துடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாகக் கொள்ளப்படும்'' (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, 2015:10) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் மாத்திரமே கல்வியைத் தொடர்வதற்கான வச திகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. சிங்களம், தமிழ் என்னும் இரு மொழிகளை தாய் மொழியாகக் கொண்டிராத இனங்கள் அவர்களின் தாய் மொழியில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை அரசின் மொழிக் கொள்கை வழங்காமையால் அம் மொழிகளை புறக்கணிப்பதாக அமைந்திருந்தது. தெலுங்கு மொழி பேசும் குறவர், போர்த்துக்கல் மொழி பேசும் பறங்கியர் போன்ற இனங்களும் வேடர்கள் போன்று மொழிப் புறக்கணிப்புக்கு உள்ளாகி யிருந்தனர். உலகு தழுவியதாக பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் பொதுவானதொரு பிரச்சினையாகவே இது விளங்குகின்றது.

புதிய வாழ்க்கைப் பின்புலத்தில் வேடர்களின் இனத் தனித்து வத்தின் அடையாளமான வேடபாசையை தொடர்பாடலுக்கு பயன்படுத்துவதில் பாதிப்பு ஏற்படுகின்றது. சமகாலத்தில் வேட சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தாய்மொழியான வேடபாசை பரீட்சயமற்றதாக மாறியுள்ளது. இப்பிரச்சினை புலம்பெயர் நாடு களில் வாழும் புலம்பெயர்வாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாகவும் உள்ளது. புலம்பெயர்வாளர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள மொழிகளில் ஒன்றிலேயே அவர்களின் சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். இலங்கையில் வேடர்கள் பூர்வீகமான குடிகளாக இருந்தும் புதிதாக அவர்களுடன் அறிமுகமான இனங்களின் மொழிகளை தழுவிக் கொள்ள நிர்ப்பந்திக் கப்படுகின்றனர். வேடர்களின் மொழி, வளர்ச்சியின் பின்னடைவு இதில் தாக்கம் செலுத்தியது. பழங்குடி சமூகத்தின் மொழி தொடர்பாக பக்தவத்சலபாரதி குறிப்பிடும் கருத்துக்கள் இங்கு தொடர்புபடுத்தி நோக்கத் தக்கன. பழங்குடியினர் பெரும்பாலும் இருமொழியாளர்களாக **(Bilinguals)** உள்ளனர். பேச்சுவழக்கில் உள்ள தாய் மொழியுடன் அவர்கள் வாழும் மாநிலத்தின் மொழியையும் பேசுகின்றனர். இந்த இருமொழி நிலையானது அவர்களுடைய தாய்மொழியை இழப்பதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது (2017:09).

நரிக்குறவரின் மொழி பற்றிக் குறிப்பிட்ட ச.பத்மபாரதி ''இவர்கள் நிரந்தரமான ஒரு இடத்தில் தங்கியிருக்காது பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து செல்லுதல், இவர்களின் மொழி எழுத்துவடிவம் பெறாமல் இருத்தல் என்பவற்றால் இவர்களின் மொழியைச் சரியாக இனங்காண முடியாது என்றும் இரண்டு மூன்று மொழிகள் இவர்களின் பேச்சுவழக்கில் இணைந்துள்ளது'' (2004:27) என்றும் குறிப்பிட் டார். இது வேடர்களின் வேடபாசைக்கும் பொருத்தமுடையதே. நரிக்குறவர் போன்றே வேடர்களும் நிரந்தரமாக ஓர் இடத்தில் தங்காது காலநிலை மாற்றம், உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்மை ஆகியவற்றிக்கு ஏற்ப புலம்பெயர்ந்து வாழும் இயல்பைக் கொண்டிருந்தனர். ஓர் இடத்தில் நிரந்தரமாகத் தங்கி ஏயை சமூகங்களுடன் இணைந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானபோது சூழவாழும் சமூகங்களின் மொழிகளை தொடர்பாடல் மொழியாக மாற்றிக் கொள்கின்றனர். இதனால் வேடபாசை இப்போது வேடசமூகத்தின் இளந்தலைமுறையினருக்கு பரீட்சயமற்றதாக மாறிக்கொண்டு வருகின்றது. வேட சமூகத்தின் தொடர்பாடலுக்குரிய வடிவமாக சிங்கள, தமிழ் மொழிகள் பயன்படுத்தப்படுவது இதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ் இனங்களில் ஒன்றினுள் வேடர்களை அடையாளப்படுத்திய இலங்கை அரசாங்கம் வேடர்களை ஒரு தனித்துவமான இனமாக அடையாளப்படுத்தி அவர்களுக்கான முக்கியத்துவத்தை வழங்குவதற்கு முன்வரவில்லை. இதனால் வேடர்களின் தாய் மொழியான வேடபாசை பற்றியும் அதன் மூலமாக வேடர்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் பற்றியும் கவனம்செலுத்தவில்லை. வேடபாசை வரிவடிவம் பெறாத மொழியாக அமைந்திருந்தது இப்புறக்கணிப் பிற்கான காரணங்களில் அடிப்படையானது. ஏனைய மொழிகள் போன்று வேடபாசை அதன் வளர்ச்சியில் அடுத்த பரிமாணமான வரிவடிவத்தைப் பெற்று வளர்ச்சியடையாது பேணப்பட்டுவந்ததே இன்று அது மருவிக்கொண்டு போவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைகின்றது.

### V. சடங்குகளும் தெய்வங்களும்

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள அனைவரினதும் ஒன்றுபட்ட மன வெளிப்பாடே அச்சமூகத்தவரின் சமயம் என்பார் எமில் தர்க்கைம் (Emile Durkheim). தொன்மைச் சமயம் முதல் இன்றைய பெரும் சமயங்கள் வரை அனைத்திலும் இடம்பெறும் சடங்குகள் மக்களை இணக்கமுறச் செய்கின்றன - ஒன்றுபட வைக்கின்றன - கருத்துவேறுபாடுகளை இல்லாமல் செய்கின்றன. இதன்மூலம் அனைவரின் ஒன்றுபட்ட நடத்தைமுறை (Collctive Behaviour) ஏற்படுகின்றது. சமுதாயக் கட்ட மைப்பை வலுப்படுத்தி நிலைப்படுத்துகின்றது (பக்தவத்சல பாரதி, 2003:512).

மரபுவழிச் சமூகங்களிற் காணப்படும் சடங்குகள் யாதேனும் ஒரு வகையில் சமூக ஒழுங்கை - சமூக ஒழுக்கலாற்றை, காலத்திற்குக் காலம் மீள வலியுறுத்துவனவாகக் காணப்படுகின்றன. பொருட்களைச் சுத்தப்படுத்துவது போல, ஒரு சமூகம் சடங்குகளை நிகழ்த்துவதன் மூலம் தம்மிடையேயுள்ள வேறுபாடுகளையும் குறைபாடுகளையும் களைந்து, தம்மை மீள ஒழுங்கு படுத்திக்கொள்ளும். இச்சடங்குகள் ஒரு கொண்டாட்டமாக இருக்கும். இவ்வாறு மீள் ஒழுங்குபடுத்திக் கொள்ளும் நடவடிக்கையை, ஒரு சமூகம் சடங்காகவும், சமூகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளை மீள் ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயலாகவும் கருதுகின்றது (கிருஷ்ணராஜா,2011:38). இதன்மூலம் சமூகத்தின் கூட்டுணர்வுக்கும் அதன் அங்கத்தவர்களிடையே தன்னியக்கமுடையதும் பிரிக்கமுடியாததுமான ஒற்றுமைக்கும் வழியமைக்கின்றது.

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக்கள் சடங்கினை சமூகங்கள் நடத்துவதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுகின்றன. சடங்குகளின் பொதுவான இயல்பு சமூக உறுப்பினர்களை ஒன்றிணைப்பதாகும். இந்த ஒன்றிணைவுக்கு உறுப்பினர்களிடையே நிலவவேண்டிய கூட்டுணர்வு அல்லது ஒற்றுமை அவசியமானது. சடங்கு சமூக உறுப்பினர்கள் எதிர்பார்க்கும் தேவைகளைப் பூர்த்தி செய்து சமூக உறுப்பினர்களை இணையச் செய்கின்றது. சமூகத்தின் இயக்கத்திற்கு தேவையான விடயங்கள் சடங்குச் செயற்பாட்டின் போது பகிரப்படுதல், சமூக உறுப்பினர்களை வலுப்படுத்தல், சமூகத்தில் காணப்படும் குறைகளைக் களைந்து நேர்த்தியான சமூக இயக்கத்திற்கான அடிப்படைகளை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் சடங்கு சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இவ்வடிப்படையில் சடங்குகள் ஒவ்வொரு சமூகத்தின் செயற்பாட்டிலும் அடிப்படையாக விளங்குகின்றன.

வேடர்களினால் ஆண்டுக்கு ஒருதடவை நடாத்தப்படும் சடங்குகள் வேடர்களின் சமூக ஒன்று கூடலுக்கும் சமய வழிபாட்டிற்கும் உரியதொரு வடிவமாக அமைந்திருந்தன. சடங்கு வழிபாட்டில் இயற்கைக்கு தெய்வசக்தியை கற்பிதம் செய்து வழிபடுகின்றனர். தெய்வத்திடம் தேவைகளைப் பூர்த்தி செய்து தரும்படி மன்றாடுவது வழிபாட்டு முறையில் உள்ள சிறப்பாகும். இயற்கையுடன் தொடர்புடைய பல தெய்வங்களை வழிபடுகின்றனர். இதனால் உருவ வழிபாடு அதாவது தெய்வங்களின் உருவத்தை வைத்து வழிபடும் வழக்கம் வேடர்களின் வழிபாட்டில் பிரதானம் பெறுவதில்லை. இயற்கையின் சக்திகளை தெய்வ இயல்புடையனவாகக் கருதி வழிபடுகின்றனர். குமாரர் எனப்படும் தெய்வத்தை பிரதானமாகக் கொண்ட இவர்களின் வழிபாட்டை ''குமார தெய்வச் சடங்கு'' என தமிழ் பகுதிகளில் வாழும் வேடர்கள் அழைக்கின்றனர்.

வேடர்களின் வாழ்வியலின் பல்வேறு அம்சங்களையும் தாங்கியதொரு வடிவமாக சடங்கு வழிபாடு கொள்ளப்படுகின்றது. இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு அவர்களின் பண்பாட்டு அம்சங்களையும் வாழ்வியல் நோக்கையும் அடையாளங்காண முடியும்.

வழிபாட்டிடங்கள் யாவும் சடங்கு காலத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டு சடங்குகள் மேற்கொள்ளப்படும். ஏனெனில் வேடர்கள் புலம்பெயர்ந்து வாழும் இயல்புள்ளவர்களாக விளங்கியது, வாழ்விடங்களை நிரந்தரமாக அமைத்து வாழும் பழக்கமற்றவர்களாக விளங்கியது போன்ற காரணங்களினால் வழிபடும் தெய்வங்களுக்கான வழிபாட்டிடங்களையும் நிரந்தரமாக அமைக்கவில்லை. சடங்கு வழிபாட்டு இடத்தை அமைக்கும் நிகழ்வுடனேயே சடங்குகள் ஆரம்பமாகும். இதில் கப்பல் மரம்[4] நடுவது (படம்: 05) மற்றும் அல்லுப்பேய், மசுமந்தப் பேய், சுல்லுப் பேய், பேருந்துச் சாமி எனப்படும் தெய்வங்களுக்கு பந்தல் அமைக்கும் சடங்குகள் இரவு முழுவதும் இடம்பெறும். இச்சடங்கின் ஒவ்வொரு விடயமும் கப்புகனின்[5] வழிகாட்டலின் படி மேற்கொள்ளப்படும். கொட்டு[6] இசைத்தல், வேடபாசையில் மந்திரம் சொல்லுதல் ஆகியன சடங்கில் அடிப்படையான அம்சங்கள். வேடத் தெய்வங்கள் பற்றிய விபரத்தை சி.மௌனகுரு அவர்களின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் என்னும் நூல் விபரமாக வழங்குகின்றது (1998:100-101).

---

4. கப்பல் மரம் குமாரதெய்வச் சடங்கிற்காக உருவாக்கப்படும் ஒரு கட்டு மானமாகும். இது சுமார் 60 அடி உயரமுடயதாகக் காணப்படும். இக்கட்டு மானம் கப்பல் தெய்வம் எனப்படும். தெய்வம் இதில் ஏறி ஆடுவதற்காக உருவாக்கப்படும். இது மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாவைக் கொத்து, பூ என்பனவற்றை மூன்று தடைகளிலும் கட்டியிருப்பதுடன், மஞ்சள் குங்குமம் ஆகியவற்றை வரி வரியாக பூசியிருப்பர். இந்தக் கப்பல் மரமானது கனேடிய மற்றும் அமெரிக்கச் செவ்விந்தியர்களினால் அவர்களின் சடங்குத் வழிபாட்டின் போது அமைக்கப்படும் குலமரபுத் துருவங்களுடன் (Totem Pole) தொடர்புபடுத்தி நோக்கத்தக்கதாக அமைகின்றது.
5. குமாரதெய்வச் சடங்கை முன்நின்று நடாத்தும் பூசாரியை கப்புகன் என்பர். கப்புகன் வேடர் சமூகத்தின் மூத்த உறுப்பினராக இருப்பார். இலங்கையில் உள்ள முக்கியமான வழிபாட்டுத்தலமாக விளங்கும் கதிர்காமம் முருகன் கோயிலில் பூசை செய்யும் பூசாரியையும் கப்புகன் என்றே அழைப்பர்.
6. கொட்டு எனப்படுவது குமார தெய்வச் சடங்கில் இசைக்கப்படும் ஒரு தோல்வாத் தியக் கருவி. இது பற்றி இக்கட்டுரையின் பிற்பகுதியில் விளக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு வழிபாடு முடிவடைந்ததும் சடங்குக்காக அமைக்கப்பட்ட கட்டுமானம், சடங்குப் பொருட்கள் யாவற்றையும் குறித்த சடங்கு நடைபெற்ற இடத்தில் கைவிட்டுச் செல்வதனை பொது வழக்கமாகக் கொண்டுள்ளனர் (படம்: 06.) அடுத்த வருடம் சடங்கிற்காக எல்லாமே புதிதாக உருவாக்கப்படும்.

வேடர்களினால் நடாத்தப்படும் சடங்கு வழிபாட்டில் ''கப்புகன்'' என அழைக்கப்படும் மதகுரு அல்லது பூசாரி முதன்மையான இடத்தைப் பெறுகின்றார். இவரிடம் உலகு பற்றிய பல்வேறு விதமான முன் அறிவும் காணப்பட்டது. இந்த அறிவு பிரபஞ்சத்தின் தொடர்ச்சியான செயற்பாடு பற்றியதாக அமைந்திருந்தது. இவர் அறிவின் மையமாக வேடர்களால் எப்போதும் நோக்கப்பட்டார். மற்றையவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சக்தியை அவர் பெற்றிருந்தார். இவருக்கு அவரின் ஆவியை இன்னொரு உயிருக்கு மாற்றும் வல்லமை இருந்தது. மதகுருவின் ஆவி மாற்றப்பட்ட உயிரினம் இன்னொரு உலகத்திற்கோ தெய்வத்திற்கோ பறந்து செல்லும் என வேடர்கள் நம்பினர். சடங்கு நிகழ்வை இவரே முன் நின்று நடாத்துவார். தெய்வங்கள் யாவும் மதகுருவில் வெளிப்பட்டுச் செல்லும். சடங்கு காலத்தில் வேடர்கள் வழிபடும் தெய்வங்களை கப்புகனில் கண்டு ஆசியைப் பெற்றுக்கொள்கின்றனர். இது அவரின் புனித அடையாளமாகவும் அமைகின்றது. கப்புகன் சமூகத்தில் காணப்படும் ஒரு வயதுமுதிர்ந்த உறுப்பினராக விளங்குவார். சடங்கு காலம் தவிர்ந்த ஏனைய காலங்களிலும் மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள், இடையூறுகள், நோய்கள் என்பவற்றுக்கு அவருள் இருக்கும் மந்திர ஆற்றல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்.

வேடர்களினால் மேற்கொள்ளப்படும் சடங்கு வழிபாட்டில் இறந்த முன்னோர்களை தெய்வமாகக் கருதி வழிபடுதல் பிரதானம் பெறுகின்றது. இலங்கை வேடர்கள் தமது மூதாதையர்கள் இறந்தபின் இன்னொரு பரிணாமத்தில் அவர்களோடு எப்போதும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர் என நம்புகின்றனர். ஒருவர் உண்மையாக இறப்பது அவரைத் தெரிந்தவர்களும் அவரில் அன்பு செலுத்தியவர்களும் இறந்த பின்னரே என நம்புகின்றனர். அவர்களுடன் நெருக்கமாக உள்ள ஆன்மா அண்மையில் செத்த ஒரு உறவினராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார். அவர்களது முன்னோர்களின் ஆன்மா அவர்களுக்கு அருகில் நிரந்தரமாக இருந்து நாளாந்த வாழ்க்கையில் உதவுவதற்காக இருக்கும். இந்த ஆத்மாக்கள் மரங்கள், குன்றுகள், அருவிகள், குகைகள் மற்றும் பாறைகளில் இருந்து வேடர்களை அன்புடனும் கருணையுடனும் இரவு பகலாகப் பாதுகாக்கும். இந்த ஆத்மாக்கள் கருணை மிக்கவையாகக் காணப்பட்டாலும் உயிருடன் இருக்கும் போது உள்ளவாறு இந்த ஆத்மாக்களால் புனிதப்படுத்தப்படவும் புறக்கணிக்கப்படவும் முடியும். இறந்த ஆத்மாக்களால் வாய்மொழியாக உயிருடன் இருப்பவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும் பிற வழிகளின் மூலம் தொடர்பு கொள்ள முயற்சிப்பர். இறந்த ஆத்மாக்கள் யானைகள், கரடிகள், குரங்குகளை வேடர்களிடம் உணவுகளை உண்பதற்கு அனுப்பும். அல்லது இறந்த ஆத்மாக்கள் எலிகளையும் பூச்சிகளையும் சோளன் மற்றும் குரக்கன் தினைகளை தொற்றுக்குட்படுத்த அனுப்பும். ஒரு தந்தையும் மகனும் வேட்டைக்குச் சென்று வேட்டையில் எந்தவிதமான விலங்குகளும் கிடைக்கவில்லையெனின் அங்கே அவர்களின் முன்னோர்களின் ஆவி அவர்களை வழிநடத்துவதற்கு இல்லை என்பதை அறிந்துகொள்வர் (http://vedda.org/stegeborn.htm). வேடர்கள் இறந்த மூதாதையரின் ஆத்மாக்கள் அவர்களின் பல்வேறு விடயங்களிலும் உதவிபுரிந்து வழிகாட்டுவதாக நம்புகின்றனர். ''இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும் என்ற நம்பிக்கை, இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்குக் கிடைக்கவேண்டும், இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவர்களை வழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களிலிருந்து முன்னோர்கள் தப்ப வைப்பார்கள் என்றும் அவர்கள் சினம் கொள்ளாமல் அருள் குணத்துடன் ஆதரிப்பர் என்று நம்பியும் முன்னோர்களை வழிபடுகின்றனர்'' (பக்தவத்சலபாரதி 2003:515). இறந்த முன்னோர்கள் அவர்களின் பரம்பரையினருக்கு தொடர்ச்சியான வாழ்வியல் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக செயற்பட்டு வருகின்றார்கள் என நம்பினர். இறந்த முன்னோர்கள் இவ்வுலகிற்கும் ஆத்மீக உலகிற்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தி செயற்படுபவர்களாக கொள்ளப்பட்டனர் (Ohale, Christine Nwakego, 2003:62). இதனால் இறந்த முன்னோருக்கு வேடர்களின் வழிபாட்டில் பிரதான இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர்களை சிங்கள மொழி பேசும் வேடர்கள் ''நீ ஜக்கா'' (நெய லயமர) என அழைப்பர். தமிழ் மொழி பேசுபோர் ''உத்தியாக்கள்'' என அழைக்கின்றனர். இறந்த மூதாதையர்கள் நோய்களைக் கொண்டு வருபவர்கள் என நம்புவதால் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக நீயக்க, கிலிந்த யக்கா, கண்ட யக்கா என்னும் தெய்வங்களை வழிபடுகின்றனர். அத்துடன் கிரிகொரகா நடனச் சடங்கையும் மேற்கொள்வார்கள். வேடர்களின் சடங்கு வழிபாட்டில் முன்னோர்களை வழிபடுவதற்காக விசேட சடங்கு அல்லது ஒரு நாள் சடங்கு ஒதுக்கப்படும்.

கிரி அம்மா அல்லது செவிலித்தாய்மார் என்றழைக்கப்படும் தெய்வங்கள் வேடர்களால் வழிபடப்படும் தெய்வங்களில் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றின் எண்ணிக்கை எட்டு எனக் குறிப்பிடப்படுகின்றது. அவை இந்திகொல்லே கிரி அம்மா, கந்தே கிரி அம்மா, உனாபானே கிரி அம்மா, திவெல் கிரி அம்மா, குருலாபொல கிரி அம்மா, வெல்லஸ்ஸே கிரி அம்மா, பிளிந்தி கிரி அம்மா, மகா கிரி அம்மா என்பனவாகும். இவற்றுள்ளே குருலாபொல கிரி அம்மாவிற்கு வேடர்கள் முக்கியத்துவம் வழங்குகின்றனர். இதனை குவேனியின் தேவ ஆத்மாவாக வேடர்கள் கொள்கின்றனர். பிள்ளைகள் கிரியம்மாக்களால் நோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றனர். கிரிகொரஹ எனப்படும் சடங்கின் போது செவிலித்தாய்மார் வந்து குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் வழங்குவர். இச்சடங்கின் போது பிள்ளைப் பாக்கியம் இல்லாத பெண்கள் பிள்ளை வேண்டி செ விலித்தாய்மாரை மன்றாடுவர்.

இது போன்று நாச்சி என்று அழைக்கப்படும் இன்னொரு பெண் தெய்வம் பற்றியும் அறிய முடிகின்றது. நாச்சி என்பது கிரி அம்மாவிற்கு வழங்கப்படும் இன்னொரு பெயர் என்றும் குறிப்பிடுகின்றனர். உடு பேரமளுவே நாச்சி, யட்டி பேரமளுவே நாச்சி, குல்ஹி எல்லே (நீர் வீழ்ச்சி) நாச்சி, ஹித்தட்டி கிகிரன் (கற்பாறை) நாச்சி, பாதோ கலே நாச்சி, பாதோ கிந்தே (தண்ணீர் குழி) நாச்சி, உடு கும்மன ஹதே (அந்தி வேளை) நாச்சி, யட்டி கும்மன ஹதே நாச்சி, கிரிந்தி நுவர நாச்சி, பம்பல் நுவர நாச்சி, லேபத் நுவர நாச்சி, ஹம்பாதேச நாச்சி, பாதளதேச நாச்சி ஆகிய நாச்சிமாரை வேடர்கள் வழிபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் நாச்சி எனப் பெயர் கொடுத்து வேடர்கள் வழிபட்டுள்ளனர் என்பதையே நாச்சிமாரின் பெயர்களைக் கொண்டு அறிய முடிகின்றது.

வேடர்கள் விசித்திரமான பல தெய்வங்களை வழிபடுபவர்கள். இவை வேடர்களுக்குரிய தனித்துவமான தெய்வங்களாகும். ஆவியுலகக் கோட்பாடு வேடர்களின் சமய வழிபாட்டில் பூர்விக மானதாக விளங்குகின்றது. தெய்வங்கள் எவற்றுக்கும் உருவத்தைக் கற்பிக்காது அவற்றை இயற்கையின் கூறாக கருதினர். இயற்கையையும் வேட சமூகத்தையும் இயக்கும் சக்தி தெய்வங்களுக்கு உண்டு என்றும் நம்புகின்றனர். இயற்கையின் சக்திகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வத்தைப் பிரதானப்படுத்தி இயற்கையுடன் ஒன்றிய வாழ்வை வெற்றிகொள்ள முயற்சித்தனர். வழிபாட்டின் போது மந்திரங்களை சொல்வர். இந்த மந்திரங்கள் வேட பாசையில் அமைந்திருப்பதுடன் துதிப்பாடலின் இயல்பைக் கொண்டனவாகவும் கொட்டு எனப்படும் பின்னணி வாத்தியத்தின் இசையுடனும் சொல்லப்படும்.

ஆண்டுக்கொருதடவை நடாத்தப்படும் சடங்கைத் தவிர சில விசேட சடங்குகளையும் மேற்கொள்வர். வேடர்கள் வனாந்தரங்களில் பயணிக்கும் போது அவர்களின் பாதுகாப்பிற்காகவும் வேட்டையில் விலங்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் நேர்த்திக்கடன்களை தெய்வத்திற்கு வைத்துச் செல்லும் வழக்கமுடையவர்கள். மட்டமான கற்பாறைகளில் தேங்காய் ஒன்றை வைத்து மரணமடைந்த உறவுப் பேய்களுக்கும் மலையில் இருப்பதாக நம்பப்படும் முல்ஹெல, இந்திரிகொல்ல பேய்களுக்கும் இவ்வாறு நேர்த்திக்கடன் வைப்பர். நேர்த்திக்கடன் வைத்துவிட்டு காட்டினுள் வேட்டைக்குச் சென்றால் வேட்டையில் வெற்றி கிடைக்கும் என்றும் விச யந்துக்களாலும் காட்டு விலங்குகளாலும் எதுவித பாதிப்பும் ஏற்படாது என்றும் நம்புகின்றனர். வேட்டையின் வெற்றியின் பின்னர் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர். இச் செயற்பாடு வேட்டை வெற்றியைக் கொண் டாடும் ஒரு நிகழ்வாகவே அமைந்திருக்கும்.

எடுத்துக்காட்டாக ''அம்புப் பேயாட்டம்'' என்னும் சடங்கு வேட் டைக்குப் போகும் முன் தெய்வத்திடம் நேர்த்தி வைப்பதை அடிப் படையாகக் கொண்டது. ''பம்புராயகு யக்கம்மா'' வேட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியீட்டிய பின் தெய்வத்திற்கு நேர்த்தி தீர்க்கும் சடங்காக அமைந்திருந்தது. அம்புப் பேயாட்டத்தை வேட்டைக் களத்தில் வேட்டைகள் கிடைக்காதபோது மேற்கொள்கின்றனர். இச்சடங்கின் போது நாகமர இலைகளால் அல்லது மில்ல மர இலைகளால் அலங் கரிக்கப்பட்ட அம்பொன்றை தரையில் நடுவப் (கிடர்த்தி) போட்டு மண்டாட்டொன்றைக் கூறிக் கொள்வர். அதனைச் சுற்றிவர வேடக் குழுவினர் ஆடுவர். இதற்கு கப்புகன் தலைமை தாங்குவார். இந் நடனத்தில் எத்தனை பேர் பங்கேற்க வேண்டும் என்னும் எண்ணிக்கை முக்கியமானதல்ல. இந்நடனத்தின் போது

*''மலையில் இருந்து மலையொன்றுக்கு நாகர இலைகளால் அலங்கரி*
*நல்ல நல்ல கல் மாடுகளின் அடிக்கு அடி*
*இதோ போவது மாயா மலையின் முதலிடத்தின் வன்னியன்''*

என்பது போன்ற மந்திரங்களை கொட்டு ஒலித்து பாடலாக உச்சரிப்பர். வேட்டையில் வெற்றி கிடைப்பதை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் இச்சடங்கை நடாத்தி முடித்தால் வேட்டையில் வெற்றி கிடைக்கும் என வேடர்கள் நம்புகின்றனர்.

மேற்குறித்த சடங்குபோன்று ''பம்புராயகு யக்கம்மா'' என்னும் சடங்கு பன்றி மற்றும் காட்டுக் கிழங்குவகைகள் பெற்றுக் கொடுத்ததன் பொருட்டு இடம்பெறுகின்றது. இப்பேயாட்டம் ஒரு சில அபிநயங்களைக் கொண்டமைந்துள்ளது. தனது கணவனின் வில்லால் எய்து பன்றியொன்றைச் சாகடிக்கும் பெண் தெய்வமொன்றும் இதில் உள்ளடக்கப்படுகின்றது. இவள் துன்னே யகினி என பெயர் பெறுவாள். இப்பேயாட்டத்திற்காக முல்பொத இடிய, கூரு, ஊன்று கோல், ஹலபெத, பொன்வாள், வில்லு போன்ற பொருட்கள் தயாரிக் கப்படும். இது வேட்டையின் வெற்றியைக் கொண்டாடும் சடங்காக அமைந்திருந்தது.

இலங்கையில் வாழும் பௌத்த, இந்துக்களின் வழிபாட்டுத் தலமான கதிர்காமத்தில் இருக்கும் முருகனை வேடர்கள் வழிபட்டு வருகின்றனர். இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப் பட்ட வழிபாட்டுத் தலமாகக் கருதப்படுகின்றது. முருகன் வேட இனக்குழுமப் பெண்ணான வள்ளியைத் திருமணம் செய்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையில் வாழும் மக்கள் வள்ளியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர்களின் குலப் பெண் என நம்புகின்றனர். இது கதிர்காமத் தலத்தை தரிசிப்பதில் வேடர்களின் ஆர்வத்தைத் தூண்டும் செயற்பாடாக அமைந்திருந்தது. இன்னொரு நிலையில் வேடர்களின் சடங்கு வழிபாட்டிடமாக இருந்த கதிர்காமத் திருத்தலம் காலவோட்டத்தில் பௌத்த, இந்து மக்களின் வழிபாட்டுத் தலமாக மாற்றமடைந்திருக்கலாம். ஏனெனில் வேடர்களால் வழிபடப்படும் குமாரர் முருகனின் இயல்பை ஒத்தவராகவே சடங்குகளில் தோன்றுகின்றார். அவரின் கையில் இருக்கும் வேல் வேடர்களின் அம்பினை குறிப்பதாகவும் அமைந்தி ருக்கலாம். அனேகமான வேடர்கள் வழிபட்ட இடங்கள் பிற்காலத்தில் பிரபல்யமான இந்துக் கோயில்களாக மாறியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இன்றுவரை சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி, மண்டூர் கந்தசுவாமி என்பனவற்றில் வேடர்களுடன் தொடர்புடைய முக்கியத்துவம் பேணப்படுகின்றது.

கதிர்காமத் தலத்துடன் வேடர்களுக்குள்ள தொடர்பினை வேடர்கள் மற்றும் தமிழ், சிங்கள மக்களிடம் வழங்கிவரும் கதைகள், தொன்மங்கள், வழிபாட்டு முறைமை, கதிர்காமத்தையும் வேடர்களையும் தொடர்பு படுத்தும் பாக்பர், செலிக்மன், விவிகா ஸ்ரெகபோன் ஆகியோரின் ஆய்வுகள் களஆய்வு முடிவுகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆதாரப்படுத்துகின்றார் பேராசிரியர் என்.சண்முகலிங்கன். பேராசிரி யரின் ஆதாரப்படுத்தலில் கதிர்காமம் பூர்வீக காலமாக வேடர்களால் வழிபடப்பட்டு வருகின்ற வழிபாட்டிடமாக விளங்குவது சுட்டிக் காட்டப்படுகின்றது. கதிர்காமத்திற்கும் வேடர்களுக்குமான பிணைப்பை வலுபடுத்துவதில் முருகன்-வள்ளி திருமண உறவு அடிப்படையாக விளங்குவதை சுட்டிக்காட்டியிருந்தார். ''குமரத்தன், குமரதம்பிரான் வழிபாடுகள் தொடர்பான கள ஆய்வுகள், கதிர்காமத்தை ஒத்த வனச் சூழலியலில் உருவான ஒத்த பண்பாட்டுக் கோலங்களாகக் கருத வைப்பன. இங்கு (கதிர்காமத்தில்) வேடர் பூசையே முக்கியமானது'' என்னும் கூற்று வேடர்களின் பூர்வதலமாக கதிர்காமம் இருந்திருக்கலாம் என்னும் நூலாசிரியரின் கருத்துக்கு வளம்சேர்ப்பதாக அமைகின்றது (2014:08).

வேடர்கள் வழிபாட்டில் மந்திரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மந்திரங்கள் வாழ்க்கைக்கு துணைபுரிவதாகவும் காட்டுடன் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடைய வாழ்க்கை முறையை சரியாக மேற்கொள்ள உதவுவதாகவும் நோய்நீக்கத்தை வழங்குவதாகவும் வேடர்கள் நம்பினர். மந்திரங்க ளுக்கு மாபெரும் சக்தி உண்டென்று வேடர்கள் நம்பினர். காட்டு விலங்கான புலி மற்றும் பாம்பு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் தேன் சேகரித்தல் போன்றவற்றில் வெற்றி பெறுவதற்கும் என பலவகைப்பட்ட மந்திரங்கள் வேடர்களிடம் நடைமுறையில் இருந்தன.

வேடர்களின் வழிபாட்டு முறை, வழிபடப்படும் தெய்வங்கள், வழிபாட்டின் நோக்கம், மாந்திரிகம் வழிபாட்டுடன் தொடர்புடையதாக அமைந்திருப்பது என்பவற்றின் ஊடாக புராதன சமய வழிபாட்டின் இயல்புகளை தாங்கிய வடிவமாக சடங்குகள் அமைந்துள்ளதை உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. ஆதி சமூகத்தில் வழிபாடு இயற்கையைத் தம்வயப்படுத்தவும் இயற்கையிலிருந்து பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மனிதனால் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் வேடர்களுக்கும் இயற்கைக்கும் இடையே இருந்த பிணைப்பினையும், இயற்கையுடன் ஒன்றிய வாழ்வின் அடிப்படை களையும் வேடர்களால் மேற்கொள்ளப்படும் சடங்கு வழிபாட்டின் ஒவ்வொரு அம்சங்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

புராதன மனிதனால் நடாத்தப்படும் சடங்குகள் பற்றிக் குறிப்பிட்ட ஜார்ஜ் தாம்சன் ''ஆதிகாலச் சடங்கை விளங்கிக் கொள்வதற்கு பழங்குடி மக்களிடையே பரவலாகக் காணப்படும் பாவனை நடனத்தையே (Mimetic Dance) எடுத்துக்கொள்ளலாம். பாவனை (போலச் செய்தல்) என்பது உழைப்பு இயக்கத்திற்கு முன்னதாகவே அல்லது அதற்குப் பிறகோ உழைப்பின் இயக்கத்தைச் செய்வது போல நடித்துக்காட் டப்படும் வகையில் மனிதனால் பயன்படுத்தப்பட்டுள்ளது. யதார்த்த வாழ்க்கையின் அவனது செயற்றிறனை மேம்படுத்துவதுதான் இதைப் போலச் செய்தலின் நோக்கமாகும். யதார்த்தக் கூட்டு உழைப்பு இயக்கத்தில் உள்ள குரலியக்கங்களும் உடல் அசைவுகளும் தனியாகப் பிரிக்கப்பட்டு பாட்டும் நடனமும் இணைந்ததொரு சுயேச்சையான செயற்பாடாக ஒழுங்குபடுத்தப்பட்டு சடங்காக உருப்பெறுகின்றன (2017:70). ஜார்ஜ் தாம்சன் குறிப்பிட்டதற்கு அமைய வேடர்களின் உணவீட்ட முறையான வேட்டையை மேம்படுத்தும் நோக்குடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட சடங்குகளாகவே வேடர்களால் மேற்கொள்ளப்பட்ட சடங்குகள் அமைந்திருந்தன. இவை உழைப்பின் முன்னரும், உழைப்பின் பின்னரும் நடாத்தப்பட்டன. வேடர்கள் யாவரும் ஒன்றிணைந்து வாழ்வியல் தேவைகளை நிறைவேற்ற வேண்டியும் நிறைவேற்றிக் கொடுத்த இயற்கைக்கு நன்றி செலுத்துவதாகவும் இந்தச் சடங்குகள் நடாத்தப்பட்டன. வேடர்களின் சடங்குகளுக்கும் உணவீட்டத்திற்கும் இடையே நெருக்கமான தொடர்பிருந்தது. வேடர்களின் வாழ்வாதாரத்திற்கான உணவைப் பெற்றுக்கொள்வதும் காட்டு விலங்குகளில் இருந்தும் இயற்கை நிகழ்வுகளில் இருந்தும் அவர்களைப் பாதுகாப்பதும் பிரதானம் பெறுகின்றது.

சடங்குடன் தொடர்புடையதாக வேடர்களிடம் பல நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்நம்பிக்கைகளே அச்சமூகத்தின் ஒழுக்க வரையறையாகவும், சமூகத்தை கட்டுப்படுத்துவதாகவும், வழிநடத்துவதாகவும் அமைந்துள்ளன. சடங்கிற்காக பலரையும் ஒன்றிணைப்பதில் இந்நம்பிக்கைகளுக்கு முக்கிய இடமுண்டு. வேடர்கள் அவர்களின் சகல வாழ்வியல் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தி அவர்களை வழிநடத்துவது அவர்களின் குலதெய்வங்களே என நம்பினர். அவர்களுக்கு ஏற்படும் நன்மை, தீமை இரண்டிற்கும் தெய்வத்தையே காரணமாகக் கருதுகின்றனர். கிழக்கிலங்கையில் வேடர்கள் வாழும் பிரதேசங்களில் ஒன்றான முறுத்தானையில் சடங்கினை முன்நின்று நடத்தும் வண்டையா குறிப்பிடும் போது ''வேடர்குடிகளாகிய எங்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் வரும். அவ்வாறு ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்றாக தேன் எடுக்கச் செல்லும் வேடர்களுக்கு தேன் கிடைக்காமை ஒன்று. அவ்வாறான சந்தர்ப்பத்தில் எங்களால் எதுவுமே செய்யமுடியாத போது கதிர்காமத்தில் இருந்து வள்ளியம்மன் வந்து எங்களுக்கு வாக்குக் கொடுப்பார். அவரின் வாக்குப்படி நாங்கள் இறுதியாக அழைக்கும் தெய்வம் 'அப்பாதினியம்மா'. அவருக்கு உரிய சடங்குகளை செய்து அழைக்கும் போது அத்தெய்வம் வரும். தேன் கிடைக்காமைக்கான காரணத்தையும் அதற்கான பரிகாரத்தையும் குறிப்பிடும். அவ்வழியில் செயற்பட்டால் வழமைபோல் தேன் கிடைக்கும்'' (வண்டையா, சின்னத்தப்பி, முறுத்தானை) எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர்களின் சடங்கில் பெட்டித் தெய்வம் என்றொரு தெய்வம் ஆடிவரும் சடங்குள்ளது. இச்சடங்கின் இறுதியில் தெய்வம் பெட்டியில் இருக்கும் நெல்லை எடுத்து சடங்கு பார்த்துக்கொண்டிருக்கும் வேடர் களுக்கு கொடுக்கும். இச்சடங்கை தேன் எடுக்கும் அவர்களின் வாழ்வியல் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி நோக்குவர். பெட்டியில் இருக்கும் நெல்லை தேன் எடுக்கப்போகும் வேடர்களுக்கே தெய்வம் வழங்கும் என்றும் தெய்வம் வழங்கும் நெல்லின் எண்ணிக்கை நெல்லின் தன்மை என்பன அவர்கள் தேன் எடுக்கச் செல்லும் போது கிடைக்கும் தேனின் சாத்தியப்பாட்டை அடையாளப்படுத்தும் என்று நம்புகின்றனர். தேன் எடுக்கப்போகும் போது ஏற்படும் இடையூறுகளை நீக்கும் ஒன்றாகவும் இச்சடங்கு அமையும் என்பது வேடர்களின் நம்பிக்கை.

மேற்குறித்த இரண்டு சடங்குகளுடன் தொடர்புடைய ஐதீகங் களும் வேடர்களின் உணவீட்டத்துடன் தொடர்புடையனவாகவே அமைந்திருந்தன. வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கைச் சூழலில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதென்பது பல அபாய நேர்வு களுடன் தொடர்புடையதாகவும் உறுதியற்றதாகவும் அமைந்திருந்தது. இதனால் சடங்குநிகழ்வுகளில் உணவீட்டத்தை இலகுபடுத்துவதற்கான சடங்குகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இங்கு வேடர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் சடங்குகள் முக்கிய இடம் வகித்தன என்பதை இரு ஐதீகங்களையும் கொண்டு தெளிவுபெற முடிகின்றது.

வேடர்களின் சடங்குகளின் மூலம் பாரம்பரிய சமூக அடையா ளத்தைப் பிரதிபலிக்கும் பல விடயங்கள் தொடரப்படுகின்றன. வேடர் களின் இளந்தலைமுறையினருக்கு வேடபாசை பரீட்சயமற்றதாக மாறியுள்ள நிலையில் சடங்கின்போது மந்திரங்கள் யாவும் வேட பாசையில் இசைக்கப்படுகின்றன. கப்புகனில் வேடர்களின் இறந்த முன்னோர் தோன்றி அவர்களின் கடந்தகால வாழ்வின் பல அனுபவங்களையும் எடுத்துரைக்கின்றனர். வேட்டையாடல், தேன் எடுத்தல் தொடர்பான நுட்பங்கள் இதன்போது எடுத்துரைக்கப்படுதல், விச ஜந்துக்கள் தீண்டல், மற்றும் தீராத நோய்களுக்கான வைத்திய முறைகள், இயற்கையில் காணப்படும் முக்கியமான மிருகங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சிகள், மரங்கள், மூலிகைகள், கிழங்குவகைகள் அவற்றின் முக்கியத்துவம் அவற்றைப் பாதுகாக்கும் முறை, வேட்டைக்கான ஆயுதங்கள் தயாரிக்கும் முறை, இயற்கையின் சீற்றத்திற்கு தப்பித்து வாழும் முறை என வேடர்களின் வாழ்வுடன் தொடர்புடைய பல விடயங்கள் சடங்குகளின்போது பகிர்ந்து கொள்ளப்படுகின்றன அல்லது கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவையாவற்றிக்கும் மேலாக வேடர்களின் ஒன்றுகூடலுக்கும் மகிழ்வளிப்புக்கும் உரியதொரு விடயமாகவும் சடங்குகள் அமைந்திருந்தன. ஆடல், பாடல், அபிநயம், மகிழ்வுற்றிருத்தல், பலரும் பகிர்ந்துண்டு உறவுகளை பகிர்ந்து மகிழ்தல் போன்ற விடயங்களும் சடங்குச் செயற்பாடுகளின் போது நிறைவேற்றப்பட்டன. இந்நிலையில் சடங்குகள் வேடர்களின் பல்வேறு அடையாளங்களையும் தாங்கிய வடிவமாகத் திகழ்கின்றன. தொழில் திறன், பாரம்பரிய மரபுகள் என்பன பற்றிய விடயங்கள் சமூக உறுப்பினர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படுவதன் ஊடாக வேட சமூகத்தினரை வலுப்படுத்தும் ஒன்றாகவே சடங்குகள் அமைகின்றன.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் மக்களினால் பாரம்பரிய சடங்குவழிபாடு இன்றுவரை தொடரப்படுகின்றது. இந்தச் சடங்கு வழிபாடானது பௌத்த, இந்து மத வழிபாடுகளில் இருந்தும் அவை எடுத்துரைக்கும் தத்துவார்த்த அடிப்படைகளில் இருந்தும் வேறுபட்ட தாகும். பாரம்பரிய சடங்கு வழிபாட்டிற்குரிய அடிப்படைகள் இந்தச் சடங்குகளில் காணப்பட்ட போதும் வழிபடப்படும் தெய்வங்கள், வழிபாட்டு முறை ஆகிய அடிப்படைகளில் வேடர்களின் சடங்குகள் சிங்கள, தமிழ் மக்களினால் மேற்கொள்ளப்படும் சடங்குகளில் இருந்து வேறுபட்டவையாக விளங்குகின்றன. இருந்தும் வேடர்களினால் மேற் கொள்ளப்படும் சடங்கு வழிபாடு உலகெங்கிலும் பரந்து வாழும் பழங்குடியினால் மேற்கொள்ளப்படும் சமய வழிபாட்டின் அடிப்படைக் கூறுகள் பலவற்றையும் கொண்டதாக அமைந்திருந்தது. பழங்குடியினரின் சமயம் பற்றிய புரிதல் இதனைத் தெளிவுபடுத்தும். (Wright,Robin.M., (2013), "Indigenous Religious Traditions of the World", Religions of the World: A Cultural Introduction to the Making of Meaning, Lawrence E. Sullivan, ed, Fortress Press) எடுத்துக்காட்டாக மதகுருவின் முக்கியத்துவம், இறந்த முன்னோர்கள் சடங்கில் பிரதானம் பெறுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமரபுச் சின்னங்கள் பலவற்றைச் சடங்கு கொண்டிருத்தல், இயற்கைச் சக்திக்கு தெய்வீக ஆற்றலைக் கற்பித்து வழிபடுதல் என இந்தப் பொதுமைகளை அடையாளப்படுத்திக் கொண்டு செல்லலாம்.

KOHA JPL

### வாழ்வியல் சடங்குகள்

வேடர்களின் சமய நம்பிக்கைகளுடன் தொடர்புடைய சடங்குகளைத் தவிர பருவமடைதல், திருமணம் ஆகிய வாழ்வியல் மாற்றங்களின் போதும் மரணத்தின் போதும் விசேட சடங்குமுறைகள் நிகழ்த்தப் படுகின்றன.

### பருவமடைதல் சடங்கு

பருவமடைந்த பெண் பிள்ளைக்காக மேற்கொள்ளப்படும் சடங்கு வேடர்களால் ஆண்டுக்கொருதடவை நடாத்தப்படும். ஏனைய சமூகங் களைப்போன்று விழாவாக நடைபெறாத போதும் வாழ்வில் ஒரு முக்கியமான சம்பவமாக கருதப்படுகின்றது. பருவமடைந்தவுடன் பிள்ளையை ஏனையவர்களில் இருந்து ஒதுக்கி வைப்பர். தீட்டுத் தொடர்பான நம்பிக்கையாலேயே இவ்வாறு தனிமைப்படுத்து கின்றனர். தற்காலிகமான தங்குமிடமொன்றை அமைத்து அதிலேயே பருவமடைந்த பிள்ளையை வைத்திருப்பர். பருவமடைந்ததை அறிந்தவுடன் ''லபுகலய தெமீம'' என்னும் சுரைக்காய் போடும் மரபை நிறைவேற்றுவர். இதன்போது காயவைத்து எடுக்கப்பட்ட சுரக்க குடுவையில் நீர் நிரப்பப்பட்டு அது உடைந்திடும் விதமாக வீசப்படும். இந்த விடயம் பருவமடைந்த பெண்ணின் சொந்த மச்சாள் ஒருவரால் நிறைவேற்றப்படும்.

இந்த நடைமுறையைச் சற்று மாறுபட்ட விதத்தில் சிலிக்மக் குறிப்பிடுகின்றார். அதாவது மண் பாத்திரமொன்றில் நீரை நிரப்பி அதனை மச்சாள் (naena) ஒருவர் பருவமடைந்த பெண்ணின் தலையில் வைத்து சுமந்து சென்று ஒரு நாகமரத்தின் கீழ் உடைத்துவிடுவர். அதன் பின்னர் தற்காலிகமான தங்குமிடமொன்றை அமைத்து அதிலே பருவமடைந்த பிள்ளையை வைத்திருப்பர் (Seligmann,1911:94) எனக் குறிப்பிடுகின்றார். இதன் பின்னர் மச்சாள் ஒருவரால் நீராட்டப்பட்டு புதிய ஆடைகள் அணிவித்து வீட்டினுள் அழைத்துவருவர். இதன்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவமடைந்தபோது அணிந்திருந்த ஆடைகள் மற்றும் அவள் வாழ்ந்த தற்காலிக குடிசை என்பவற்றை பருவமடைந்த பெண்ணைக் கொண்டே தீ வைத்து அழித்திடுவர் (ஊர்வரிக்கே வன்னிலா எத்தோ, தம்பானை, மகியங்கனை).

பருவமடைந்த பெண்பிள்ளைக்காக மேற்கொள்ளப்படும் சடங்கு நிகழ்வில் சுரக்குடுவையில் நீர் நிரப்பி அதனை உடைத்தல், பருவமடைந்த பெண்ணுக்கு நீராட்டுதல், அப்பெண்ணின் ஆடைகள் மற்றும் பருவமடைந்த காலத்தில் தங்கியிருந்த குடிசை என்பவற்றை எரித்தல் ஆகியன முக்கியமான நிகழ்வுகளாக அமைகின்றன. நீராட்டும் நிகழ்வு தீட்டுநிலையில் இருக்கும் பெண்ணை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாக அமைகின்றது. நீர் புனிதப்படுத்தும் அல்லது தீட்டை நீக்கும் ஒன்றாகக் கொள்ளப்படுவதால் புனித நீராடல் எல்லாச் சமயங்களிலும் வலியுறுத்தப்படுகின்றது. புனித நீராடலின் போது நோய், துன்பம், என்பன இல்லாமல் செய்யப்படுவது போன்று தீட்டில் இருந்தும் விலக்கு அளிக்கப்படுகின்றது என மக்கள் நம்புகின்றனர்.

ஏனைய சமூகங்களில் நீர் பெண்ணின் தலையில் நேரடியாக ஊற்றப்படாது ஒரு இடை நிலைப்பொருளின் ஊடாக (Inter Media Object) ஊற்றப்படுகின்றது. இது சிறுமி நிலையில் அல்லது தீட்டு நிலையில் இருக்கும் பெண்ணை இயல்புநிலைக்குக் கொண்டுவருதலை அல்லது இன்னொரு நிலையாகிய குமரி நிலைக்கு மாற்றுவதைச் சுட்டி நிற்கின்றது. இடையீட்டுப் பொருளின் பணி ஒரு நிலையில் இருக்கும் பொருளை இன்னொரு நிலைக்கு மாற்றுவதாகும்.[7] சுரக்குடுவையில் நீர் நிரப்பி பருவமடைந்த பெண்ணின் தலையில் வைத்து உடைக்கும் செயற்பாடு சிறுமி என்னும் நிலையைக் கடந்து குமரி என்னும் நிலைக்கு மாறிவிட்டாள் என்பதை குறிக்கும் ஒரு குறியீட்டுச் செயற்பாடாக அமைகின்றது. இதனைக் குறிக்கும் விதமாகவே சிறுமி பருவமடைந்தவுடன் இந்நிகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது.

---

7. இந்த விடயப்பொருள் தொடர்பாக புதுச்சேரி மொழியியல், பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் நாட்டுப்புறவியல் துறையில் பணியாற்றும் முனைவர் ச.பிலவேந்திரன் அவர்களுடனான கலந்துரையாடலின் போது அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள். நாள் 03.12.2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடிப்படையிலே குமரிப்பருவத்தை அவள் அடையும் போது சிறுமியாக அவர் இருந்தபோது அணிந்திருந்த ஆடைகள், குடிசை என்பன எரிக்கப்படுகின்றன.

பருவமடைந்த பெண் தங்கியிருப்பதற்காக தற்காலிக தங்குமிடம் அமைப்பது தொடர்பான நடைமுறைகள் இலங்கையில் வாழும் இன்னொரு பழங்குடி சமூகமான குறவர்களிடமும் பின்பற்றப் படுகின்றது. குறவர்கள் செறிந்து வாழும் அலிக்கம்பை, காஞ்சி ரங்குடா (ஸ்ரீவள்ளிபுரம்) ஆகிய பிரதேசங்களில் வாழும் குறவர்களின் நடைமுறை பின்வருமாறு அமைந்திருந்தது ''சிறுமி பருவமடைந்தவுடன் வதிவிடத்துக்கு அண்மையில் நாகமரக்கொத்தினால் சிறிய குடில் ஒன்றினை அமைப்பர். சிறுமி போய் வரக்கூடியதாக வழி விட்டே இக்குடில் அமைக்கப்பட்டிருக்கும். சிறுமியை அதனுள் எட்டு நாட்கள் தங்கவைத்திருப்பர். ஐந்தாம் நாள் சிறுமிக்கு மஞ்சள் நிராட்டப்படும். அதன் பின்னர் தங்கியிருந்த குடிலை கலைத்து (பிரித்து) விடுவர்'' (சந்திராதேவி,2019:64). வனக்குறவர் பற்றிய இக்குறிப்பில் பருவமடைந்த பெண்ணுக்கு மேற்கொள்ளப்படும் சடங்கு நடைமுறையில் உள்ள ஒருமைப்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது. பெண்களின் தீட்டு புனிதத்திற்கு எதிரானதாக காணப்படுவதால் தீட்டுக் காலத்தில் தங்கியிருந்த இடம் அழிக்கப்படுகிறது. இது இன்னொரு நிலையில் பருவமடைந்த பெண் புதிய வாழ்விற்குத் திரும்புகின்றாள் என்பதை சடங்குச் செயற்பாட்டின் மூலம் குறியீட்டுரீதியாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

### திருமணச் சடங்கு

வேடர்களின் திருமணம் சர்ந்த சடங்கு நடைமுறைகள் முற்றிலும் தனித்துவமானவை. சிங்கள, தமிழ் சமூகத்தில் பின்பற்றப்படும் எந்தவிதமான மரபுகளும் பின்பற்றப்படுவதில்லை. இருந்தும் அவர்களுக்குரிய சில எளிமையான சடங்குகள் உண்டு. மணமகன் தன்னுடைய தந்தையின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்வான். இரு சகோதரர்களின் அல்லது சகோதரிகளின் பிள்ளைகள் திருமணம் செய்துகொள்ளும் நடைமுறை வேடர்களிடம் இல்லை. முறைகேடான பாலியல் தொடர்புகளும் திருமணத்தின்போது கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற் கொள்ளப்படுகின்றன (Seligmann,1911:96-97). இவை சமூக நடைமுறைகளை மீறிய செயற்பாடாகக் கருதப்படுவதால் அவ்வாறான செயற்பாடுகளுக்கு தண்டனையுண்டு. இதனால் முறைகேடான திருமணம், பாலியல் பழக்கம் என்பனவற்றில் ஈடுபடுவதை வேடர்கள் அனுமதிப்பதில்லை.

ஓர் இளைஞனும் யுவதியும் திருமணம் செய்யவேண்டுமாயின் இரு தரப்பினரின், பெற்றோர்களின் சம்மதத்தைப் பெறவேண்டியது அவசியமானதாகும். திருமணங்கள் பெரும்பாலும் உறவினர்களின் மத்தியிலேயே இடம்பெறும். வேடர்களிடமும் சாதியுடன் தொடர்புடைய நடைமுறைகள் சில பின்பற்றப்படுவதால் ஒரு சில சாதிகளுக்கிடையேயான திருமண உறவுகள் வேடர்களுக்குள்ளேயும் தவிர்க்கப்படுகின்றது. திருமண நாளன்று மணமகனின் இல்லத்திற்கு உறவினர்கள் வருவார்கள். இந்நாளில் தேன், வேட்டை இறைச்சி போன்ற அவர்களுக்கு விருப்பமான உணவுகள் தயாரிக்கப்படும். மணப்பெண்ணின் இல்லத்திற்கு பரிசில்கள் கொண்டு செல்கின்ற மணமகன் தரப்பினர் மணப்பெண்ணை தமது இல்லத்திற்கு அழைத்துவருவர்.[8] திருமணத்தின்போது வேடத் தலைவரால் மணமகன் மற்றும் மணப்பெண்ணின் சிறுவிரல்கள் ''மதுவெல்'' என்னும் காட்டுக்கொடியால் இணைத்துக் கட்டப்படுவதன் மூலம் இருவரினையும் திருமண பந்தத்தில் இணையச் செய்வர். பின்னர் இவர்கள் நல்லமுறையில் வாழ்வதாகவும் வேட இளைஞன் தனது மனைவியை நல்ல முறையில் பார்த்துக் கொள்வதாகவும் சத்தியம் செய்யப்படும். சமகாலத்தில் கணவன்-மனைவி இருவரையும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் விவாகப்பதிவு முறை நடைமுறையில் உள்ளதுபோல் வேடர்கள் திருமணம் செய்யும் தம்பதியர்களை கணவன் மனைவியாக அங்கீகரிக்கும் சடங்குபூர்வமான நிகழ்வாக இவை அமைகின்றன. வேடர்களின் தலைவரால் இச்சடங்கு நடாத்திமுடிக்

---

8. சிங்கள சமூகத்தில் திருமணத்தின் பின்னர் பெண் மணமகனின் இல்லத்தில் குடிபுகுந்து வாழும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது. வடகிழக்கில் வாழும் தமிழர்களிடம் மணப் பெண்ணின் வீட்டுக்கு மணமகன் சென்று வாழும் வழக்கம் உள்ளது. இவ்விடயத்தில் வேடர்களிடம் உள்ள நடைமுறையும் சிங்களவர்களிடம் உள்ள நடைமுறையும் தொடர்புடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுவது இச்சடங்கின் முக்கியத்துவத்தையும் அதற்கு யாவரும் மதிப்பளித்துச் செயற்படவேண்டும் என்பதையும் அழுத்துவதாக அமைகின்றது.

திருமணத்தின் போது மணமகள் மணமகனின் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டி விடுவார். இது தேய்ந்து போகும்வரை இதனை இடுப்பில் இருந்து கழற்றக் கூடாது என்பது வேடர்களின் நம்பிக்கை. இது தேய்வடைந்தால் புதிதாக ஒன்றை மீண்டும் அவனின் மனைவி கட்டிவிடுவாள். மணமகன் குறித்த பெண்ணுக்கு உரித்துடையவன் என்பதன் அடையாளமாக இது அமைகின்றது. இது தகாத பாலியல் உறவின்போது மாத்திரம் குறித்த ஆண் திருமணமானவன், இன்னொரு மனைவிக்குரியவன் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு தடயம். வேடர்களின் குழும அடையாளமான இதனை ஏனைய சமூகத்தினரால் புரிந்துகொள்ள முடியாது.

திருமணத்தின் போது ஆண்களுக்கு திருமணத்தின் அடையாளத்தை தாங்கிக் கொள்ளும் வழங்கம் தமிழர், சிங்களவர் போன்ற சமூகப் பிரிவினரிடம் பேணப்படுவதில்லை. பெண்களே திருமணம் ஆனவர் என்பதைப் பிரதிபலிப்பதற்கான அடையாளங்களைத் தாங்கும் மரபு உண்டு. ஆனால் வேடர் சமூகத்தினரிடம் உள்ள இந்நடைமுறை முற்றிலும் தனித்துவமானது. திருமணத்தின் பின்னர் பெண்களின் உடலில் ஏற்படும் இயற்கையான மாற்றங்கள் திருமணமானவள் என்பதை அடையாளப்படுத்தி நிற்கின்றன. ஆனால் ஆண்களை அவ்வாறு அடையாளப்படுத்துவதில் உள்ள சிரமங்கள் இடுப்பில் கட்டப்படும் துண்டின் மூலம் தவிர்க்கப்படுகின்றது. வேட சமூகத்தினர் கற்பு நெறியை ஆண், பெண் இருவருக்கும் சமமாக பேணியுள்ளனர் என்பதை இந்த திருமண நடைமுறைகள் எடுத்துக் காட்டுகின்றன.

மணப்பெண் தரப்பிலிருந்து மணமகனுக்கு ஈட்டி, வில் - அம்பு, மற்றும் ஓரிரு நாய்கள் பரிசில்களாக வழங்கப்படும். அத்துடன் தேன், தானியம் அல்லது உலர்ந்த மான் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களும் வழங்கப்படும். (குணபண்டிய ஊர்வரிக்கே, தம்பானை, மகியங்கனை). இவை அவர்களின் சமூக அடையாளத்தினை பாது காக்கும் சீதனப் பொருட்களாக காலங்காலமாக வழங்கப்பட்டு வருகின்றன. வனக்குரவர் சீதனமாக பாம்பு, பாம்புப் பெட்டி, சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடில், சட்டி, பானை, கத்தி என்பனவற்றுடன் வேட்டை நாய்களையும் வழங்குவதாக குறிப்பிடப்படுகின்றது (சந்திராதேவி,2019:66). இந்நிலையில் பழங்குடியினரிடம் உள்ள நடைமுறைகளின்படி புதிதாகக் திருமணமாகும் தம்பதியர் வாழ்வாதாரத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கான அடிப்படையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே இப்பொருட்கள் வழங்கப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. வேடர்கள் வேட்டையாடலை பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளதால் ஈட்டி, வில் - அம்பு என்பன சிறப்பான சீதனப் பொருளாக வழங்கப்பட்டுள்ளன. வில் - அம்பு வேடர்களை அடையாளப்படுத்தும் சிறப்பான குலமரபுச் சின்னங்களாகும். உணவீட்டத்தில் வேட்டை நாய்கள் முக்கிய பங்கு வகிப்பதால் வேட்டை நாய்களும் சீதனமாக வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய சமூகங்களுடன் வேடர்கள் இணைத்து அல்லது கலந்து வாழும் நிலைமை சமகாலத்தில் ஏற்பட்டுள்ளதால் கலப்பு திருமணங் களும் இடம்பெறுகின்றன. வெளி இடங்களுக்கு வேலைக்குச் செல்லும் வேட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அப்பிரதேசங்களில் உள்ள பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர். அது போன்று வேட சமூகத்தைச் சேர்ந்த பெண்களையும் சிங்கள, தமிழ் இளைஞர்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். கலப்புத் திருமணம், புதிய வாழ்க்கை முறைக்குள் இணைந்துகொள்ளும் விருப்பு ஆகியவற்றால் வேட சமூகத்தைச் சேர்ந்த இளம் தலைமுறையினர் ''வேடர்'' என்னும் அடையாளத்தை தொலைக்கும் நோக்கம் கொண்டவர்களாகவும் மாறுகின்றனர். சமகாலத்தில் அரசாங்கத்தின் நிர்வாக ஒழுங்கமைப்புக்குள் வேடர்கள் உள்வாங்கப்படுவதால் பதிவுத் திருமணம் செய்துகொள்வது அவசியமாகின்றது. அத்துடன் கலப்புத் திருமணமும் பதிவுத் திருமணத்தினை தேவையுடையதாக்குகின்றது. பாரம்பரிய திருமணச் சடங்குகள் கலப்புத் திருமணத்தின் போது வலுவற்றதாகின்றன.

**மரணச் சடங்கு**

மரணச் சடங்கும் மிக எளிமையானதாகவே செய்யப்படுகின்றது. மரணம் ஏற்பட்டவுடன் மரத்தில் இருந்து எடுக்கப்படும் பட்டை களால் (மரப்பட்டை) இறந்த உடலைச் சுற்றி வைத்து மூடி பின்னர்

281040
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகளால் சுற்றிக் கட்டுவர். பின்னர் தரையில் குழி தோண்டி உடலை வைத்து மண்ணைக் கொண்டு மூடிவிடுவர். இதில் அவர்களின் சமூக உறுப்பினர்கள் யாவரும் கலந்துகொள்வதும் அஞ்சலி செலுத்துவதும் பொதுவான வழக்கமாக உள்ளது. உறவினர் ஒருவர் மரணமடைந்ததன் பின்னர் அவர் ஒரு சொந்தக்காரரில் பிறப்பார் என்பதே வேடர்களின் நம்பிக்கையாக உள்ளது. ஆகையால் இறந்தவர்களுக்கு படையல்கள் வழங்கும் வழக்கம் வேடர்களிடமும் உள்ளது. ஒரு சில சந்தர்ப்பங்களில் மரணமடைந்து ஏழு நாட்கள் சென்ற பின் மரணமடைந்த இடத்தில் ''நாமகுன்'' என்னும் உறவுப் பேய்களை பூசிக்கும் நிகழ்ச்சியை நடத்துவர். (சுதுவண்டா களுவா, தம்பானை, மகியங்கனை).

## சடங்குகளின் சமகாலநிலை

வேடர்களினால் மேற்கொள்ளப்படும் சடங்குகள் யாவும் அவர்களின் சமய நம்பிக்கையையும், சமூக அடையாளத்தையும், பண்பாட்டு மரபுகளையும், பாதுகாக்கும் வடிவங்களாக உள்ளன. வேடர்களின் சமூக, பண்பாட்டு, கலை அம்சங்களைப் பிரதிபலிப்பதாகவும் அவர் களின் வழிபாட்டு முறையாகவும் அவர்களால் மேற்கொள்ளப்படும் சடங்குகள் புதிய மாற்றங்களால் படிப்படியாக பலமிழந்து வருகின்றன. வேடர்கள் தாம் சார்ந்து வாழும் சிங்கள, தமிழ்ச் சமூகங்களின் பாதிப்புக் களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அச்சமூகங்கள் பின்பற்றும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுகின்றனர். மதமாற்றச் செயற்பாட்டின் மூலமாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணமுடியும் என நம்புகின்றனர்.

மதமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டாலும் வேடர்களின் பண்பாட்டு மரபுகளை, இனத் தனித்துவத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒன்றாக சடங்குகள் விளங்குவதால் சடங்குடன் தொடர்புடைய மரபுகளைத் தொடர்ந்து பேணுவதில் ஆர்வமாக உள்ளனர். உதாரணமாக களுவங் கேணி, வாகரை, தளவாய் போன்ற பிரதேசங்களில் வேடர்கள் பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ள போதும் இன்றுவரை அவர்களின் குல தெய்வங்களுக்கான வழிபாட்டிடத்தை பேணுவதிலும் ஆண்டுக்கொரு தடவை அவ்விடத்திற்குச் சென்று வழிபாட்டை மேற்கொள்வதிலும் ஆர்வமாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் வேடர்களின் சடங்கு வழிபாட்டின் போது தமிழ், சிங்கள மக்களின் கிராமிய வழிபாட்டின் (சடங்கு வழிபாடு) சில அடிப்படைகளையும் உள்வாங்கியுள்ளனர். உதாரணமாக கிழக்கிலங்கையில் பரந்துவாழும் தமிழ் மக்களால் வழிபடப்படும் முக்கியமான தெய்வமாக மாரியம்மன் விளங்குகின்றது. முறுத்தானை வேடர்களின் ஆண்டுச் சடங்கு மேற்கொள்ளும் இடத்தில் மாரியம்மனுக்கான ஒரு கோயிலை கல்லால் நிரந்தரமாக அமைத்துள்ளனர். அக்கோயில் மாரியம்மன் சடங்கை மேற்கொண்டு அதன் தொடர்ச்சியாகவே வேடர்களின் குலதெய்வத்திற்கான சடங்கை இறுதி நாள் மேற்கொள்கின்றனர். இவை வேடர்களின் பாரம்பரிய சடங்கு நடைமுறைகளும் மாற்றங்களுக்கு உட்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையே சுட்டுகின்றன.

### vi. உணவும் உணவீட்டமும்

வேடர்கள் ஏனைய மனிதர்கள் போன்று அல்லாது அவர்களின் வாழ்வின் இலட்சியம் உறுப்பினர்கள் யாவரும் ஒன்றாக இணைந்து மகிழ்வான வாழ்வை வாழ்வது, தேவையான உணவைப் பெற்று உண்பது, பாதுகாப்பான உறைவிடத்தை நாடுவது போன்ற அடிப்படை வாழ்வியல் தேவைகளுடன் வரையறுக்கப்பட்டிருந்தது. இவை வேடர்களின் இயற்கையுடன் ஒன்றிய வாழ்வின் அடிப்படையான இயல்புகளாக அமைந்திருந்தன. உணவை இயற்கையில் இருந்து பெற்றுண்ணல் வேடர்களின் பொதுவான உணவீட்ட முறையாக அமைந்திருந்ததால் வாழ்நாளில் பெரும்பகுதியை உணவுத் தேட்டத்தில் செலவிட்டனர். வேட்டையாடுதல், தேன் எடுத்தல், கிழங்கு தோண்டுதல், பழங்கள் சேகரித்தல் பறவை முட்டை சேகரித்தல், மீன் பிடித்தல் ஆகியனவற்றின்மூலம் அவர்களின் வாழ்வாதாரத்திற்கான உணவைப் பெற்றுக்கொண்டனர்.

வருடத்தின் ஆரம்ப காலப்பகுதியான ஜனவரி - பெப்ரவரி வரையான மாதங்களில் கிழங்கு வகைகளும், வருடத்தின் நடுப் பகுதியான யூன் - யூலை வரையான காலங்களில் பழங்கள் மற்றும் தேன் என்பனவும் பெற்றுக் கொள்ளப்படும் காலப்பகுதியாக கருதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. எக்காலத்திலும் வேடர்கள் வேட்டைக்குச் சென்று இறைச்சி வகைகளைப் பெற்றுக் கொண்டனர்.

வேட்டுவப் பெண்களின் பிரபல்யமான உணவு சேகரிப்பு முறை யாக கிழங்குவகைகளைத் தோண்டி எடுப்பது விளங்குகின்றது. கட்டுவல, கோனல, ஊயல, ஹிரித்தல போன்ற இடங்களில் காட்டுக் கிழங்கு வகைகள் தோண்டி எடுத்து சுட்டு அல்லது அவித்து உண்பர்.

வேட்டையாடுதல் வேடர்களின் பண்டைய வாழ்க்கை முறை யாகவும் உணவீட்டமாகவும் விளங்குகின்றது. வேடர்கள் என்பதை அடையாளப்படுத்தும் அம்சங்களில் வேட்டையாடுதல் முதன்மை யானது. வனாந்தரக் காடுகளில் காணப்படும் முயல், ஆமை, உடும்பு, காட்டுப் பன்றி, குரங்கு, மான், மரை போன்றவற்றை வேட்டையாடி விரும்பி உண்பர். வேடர்கள் தேர்ச்சி பெற்ற வேட்டையாடிகளாக விளங்குவதால் அவர்களின் கண்கள், காதுகள் மற்றும் கால், கைகள் வேட்டைக்கு ஏற்றாற்போல் வளர்ச்சியடைந்திருந்தன அல்லது இயைபாக்கம் அடைந்திருந்தன. வேட்டையாடுவதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வனாந்தரத்தின் குறித்த பகுதிகள் பங்கீடு செய்யப் பட்டிருந்தது. இவ்வாறான எல்லைகள் பொதுவாக 25 - 50 ஏக்கர்களை உட்கொண்டதாகக் காணப்படும். இவர்கள் குறிப்பிட்ட எல்லைகளில் மாத்திரமே வேட்டையாடுவர். ஏனையவர்களின் நிலப்பகுதிக்குள் சென்று வேட்டையாடுவதில்லை. கைக்கோடரி, வில், அம்பு, மர ஈட்டிபோன்ற ஆயுதங்களை வேட்டைக்காகப் பயன்படுத்துவர். அத்துடன் பொறி வைத்தும் விலங்குகளை வேட்டையாடும் நுட்பத் தையும் பயன்படுத்துவர். மரை, மான், பன்றி, உடும்பு, குரங்கு, ஆமை, முயல், சருகுமான், முள்ளம்பன்றி, அணுங்கு போன்ற விலங்குகளும் மயில், கிளி, காட்டுக் கோழி, சின்னக் காட்டுக்கோழி, பூவை போன்ற பட்சி வகைகளும் உணவாக வேட்டையாடப்படும். இயற்கைச் சமநிலையைப் பேணும் விதத்தில் வேட்டையில் சில விதிகளை பின்பற்றுவர். இவ்விதிகளைப் மீறும் வேடர்கள் தலைமைத்துவத்தால் தண்டிக்கப்படுவர். உதாரணமாக கற்பமுற்ற மற்றும் குட்டி விலங்குகள் அருகிக்கொண்டு போகும் விலங்கினங்கள் போன்றவற்றை வேட்டையாடுவதைத் தவிர்ப்பர். அவர்களின் உணவுத் தேவைக்கான விலங்குகளை மாத்திரம் வேட்டையாடுவர். வேட்டையில் கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளை குடும்பங்களுக்கும் அவர்களின் குலத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பர்.

தேன் எடுத்தல் வேடர்களின் அடுத்துக் குறிப்பிடத்தக்க உணவு ஈட்ட முறைகளில் ஒன்றாகவுள்ளது. மர இடைகள், மரப் பொந்து கள், கல் ஓடைகள், போன்றவற்றில் தேனீ கூடு கட்டும். தேன் கூடு களில் தேன் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நிறைந்திருக்கும். ஜூன் - ஜூலை மாதங்களில் குளவித் தேன் பறிக்கப்படும். பெரும்பாலும் இது இரவு நேரத்திலேயே மேற்கொள்ளப்படும். குளவித் தேன் இருக்கும் இடத்திற்கு கயிற்று ஏணியைப் பயன்படுத்தி ஏறிச் செல்வர். பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஏணியின் மேற் பரப்பை ஒரு மரத்தில் கட்டிவிடுவர். இக்கயிற்று ஏணியை ''பாதம'' என அழைக்கின்றனர். குளவிகளை கூட்டில் இருந்து விரட்டுவதற்காக புகையடிக்கப்படும். பாறையடியில் தீ கொழுத்தப்பட்டு வெப்பமும் புகையும் குளவிக் கூட்டுக்குள் வரும்போது குளவிகள் பறந்து சென்று விடும். இதன்போது தொங்கியிருக்கும் ஏணியில் இருந்து ''பத்த'' என்னும் நீண்ட சிறு மரத்துண்டுகளால் குளவித் தேன் வெட் டப்பட்டு தேன் வடிந்து விழச் செய்யப்படும். மான் தோலினால் உருவாக்கப்பட்ட ''யாகாகட'' என்னும் பையில் தேனை எடுப்பர்.

வேட்டையாடுதல் போன்று தேன் எடுப்பதிலும் வேடர்கள் அனுபவமும் சிறப்புத் தேர்ச்சியும் உடையவர்களாக விளங்கினர். தேன் எடுப்பதில் வேடர்கள் சிறு பராயத்தில் இருந்தே பயிற்சி பெற்றவர்கள். குளவித் தேன் பறிப்பதில் உள்ள அபாயகரமான நிலைமை காரணமாக குளவித் தேன் பறிப்பதற்கு முன்னர் கடவுளுக்கு நேர்த்திகள் வைப்பர். குளவித் தேன் பறித்த பின்னர் அதில் குறிப்பிட்ட பகுதியை கடவுளுக்கு அர்ப்பணிப்பர். ஒரு பெரும் குளவித் தேன் கூட்டில் 25 - 30 போத்தல் தேன் பறிக்கமுடியும் எனக் கருதுகின்றனர். தேன் வேடர்களின் உணவுச் செயற்பாட்டில் பிரதானமானதொன்றாக விளங்குகின்றது. உணவைப் பதப்படுத்தல், அவர்களின் ஏனைய உணவுப் பொருட்களுடன் சேர்த்து உண்ணல், வேடர்களின் விசேட உணவுப் பண்டங்களை தயாரித்தல் என்பவற்றுக்கு தேன் பிரதானமானதொன்றாக விளங்கியது. அத்துடன் தேன் பறிப்பது ஆபத்து நிறைந்ததொரு செயற்பாடாக விளங்குவதால் சில தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி தேன் எடுப்பர். தேன் பறித்தல் வேடர் வாழ்வில் முக்கியமானதாக விளங்கும் தன்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளவித் தேன் பறித்தல் தொடர்பான ஒரு கவி தெளிவுபடுத்துகின்றது.

*''ரஜ ஓமுண கல்லியே*
*மா குருவன் அம்மா*
*குரு பலே ரகினா*
*மா வேவெல் கபாலா பஸ்ஸாலா*
*தும் பாலியென் பன்னாலா*
*கடுவன் கபாலா*
*மீரா மீரிய பெணி கெனவிதின்*
*கெனென் கெனென்*
*படகினி ஏரென்ன கன்ன''*

*''ரன் கடுவென் கபாலா*
*கோடாலா யகாகே கடே நொத மாபொய்*
*ஏ அத பெலுவத் மிசி மிரிச நகாலா*
*மே அத பெலுவத் கலு ரது நகாலா*
*எத்த கினி நிமாத்தய்; - ரன் கினி நிமாத்தய்*
*தும் படியென் தும் அல்லா*
*யமாகே கடே நொதமாலா கெனாதின் எனகிளி*
*நிமன்னய் ரன்கினி - நிமன்னய் என கினி''*

பொது நூலகம்
3 1 DEC 2020
மாநகர ...
யாழ்ப்பாணம்

இக்கவியின் பொருள் :

''எங்களின் குரு மாதாவே! உங்களின் பெரும் அதிகாரத்துடன் ஒமுணு கற்பாறையின் உறைவிடத்தில் எங்களுக்கான தங்களின் பாதுகாப்பை வழங்குங்கள். உயரம் குறைந்த ஏணியைப் பாவித்து மரத்தை வெட்டி புகைப்பிடித்த கும்பிமூலம் புகையை வீசி அவற்றை இழுத்துச் சென்று வாளால் துண்டு துண்டுகளாக நறுக்கி அவற்றைக் குடத்தில் ஊற்றுங்கள். இனிமையான தேனைப் பெற்றிடுங்கள். பசி யைப் போக்க அவற்றைச் சாப்பிடக் கொண்டு வாருங்கள்''

''தங்க வாளால் வெட்டுங்கள். பிசாசின் வாயில் எமக்குத் தெரி யாமல் கோடரியால் வெட்டுங்கள். அந்தக் கைப் பக்கம் பார்த்தால் அது தெரியவில்லை. இந்தக் கைப் பக்கம் பார்த்தால் அது கறுப்பாகவும் சிவப்பாகவும் தெரிகின்றது. வாருங்கள் நெருப்பு அணைகின்றது. நெருப்பு அணைகின்றது. புகையோடு புகையைப் பிடித்துக் கொள் ளுங்கள். புதிதாக எரியும் நெருப்பு அணைய, அச்செந்நெருப்பு அணைய அதனைப் பேயின் வாயில் எடுத்துப் போடுங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிகள் தேன் பறித்தலில் உள்ள ஆபத்தான நிலையையும் தேன் வேடர்களால் விரும்பி உண்ணப்படும் ஒரு பொருளாக விளங்குகின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. இக்கவிகள் தேன் பறிக்கப் போகும் முன்னர் தெய்வத்திடம் வேண்டுதலாக சமய வழிபாட்டுடன் இணைந்தவையாகப் பாடப்பட்டிருக்கலாம்.

வேடர்களின் உணவீட்டமான தேன் எடுத்தல், வேட்டையாடுதல், காட்டுக் கிழங்குகள் தோண்டியெடுத்தல் போன்றவற்றில் அனேக மான உணவீட்டங்கள் காட்டை அண்மித்து வாழும் ஏனைய சமூகப் பிரிவினராலும் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக வேட்டை யாடுதல். ஆனால் தேன் எடுத்தல் இன்றுவரை வேடர்களுக்கு மாத்திரம் உள்ள தனித்துவமான உணவீட்ட முறையாக உள்ளது. தேன் எடுத்தல், தேன் கூடு அல்லது பொந்து எங்குள்ளது என்பதைக் கண்டறிதல், தேன் கூட்டில் நிறைந்துள்ளதா என்பதை ஊகித்தறிதல், தேனீக்கள் குத்தாமலும் அவற்றைக் கொல்லாமலும் தேன் எடுத்தல் என பல திறன்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது. இத்திறன்கள் ஏனைய சமூகத்தினருக்கு வாய்க்கப்பெறாமையால் இன்றுவரை தேனெடுத்தல் வேடர்களின் தனித்துவமான உணவீட்ட முறையாக உள்ளது.

சமகாலத்தில் வேடர்களின் மிக முக்கியமானதொரு வருமான ஈட்ட மூலமாகவும் தேன் வியாபாரம் அமைந்துள்ளது. தேன் வியா பாரத்தில் கலப்படம் தொடர்பான சந்தேகங்கள் நுகர்வோருக்கு உள்ளதால் வேடர்களிடம் இருக்கும் நம்பகத் தன்மையால் வேடர்க ளிடமிருந்து மிகக்கூடுதலான விலை கொடுத்தும் தேனைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் தயாராக உள்ளனர்.

வேடர்களின் உணவுத் தேவையை நீர்நிலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மீன்களின் மூலமும் பூர்த்தி செய்தனர். கடல், மற்றும் நீரை அண்டிய பகுதிகளில் வாழும் வேடர்களின் உணவுத் தேவையை மீன் பூர்த்திசெய்தது. நீர்த் தேக்கங்களில் உள்ள நீரை வெளியேற்றுவதன் மூலமும் நச்சு இலை குழைகள், கொடிகள் அல்லது காய்களை உடைத்து நீரில் இடுவதன் மூலமும் (கற்றாழைச் சாறு போன்றன உதாரணமாகக் குறிப்பிடத்தக்கது) ''கரககெமன'' போன்ற விதிமுறைகளைப் பின்பற்றி யும் மீன்களைப் பிடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் வேடர்கள் அவர்களுக்குப் பழக்கப்பட்ட வனாந்தரத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டதால் பெரும்பாலானோர் சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அதிகளவில் குரக்கன் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். சோளம், கிழங்குவகை, காய்கறிகள், பழவகைகள் என்பவைகூட சேனைப் பயிர்ச்செய்கையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இயற்கையில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் உணவை வாழ்வாதாரத்திற்காகப் பயன்படுத்திய வேடர்கள் உணவை உற்பத்தி செய்யும் வாழ்க்கை முறைக்கு மாறிய நிலையினையே இங்கு காண்கின்றோம். இதன்போது மாடு, ஆடு, கோழி போன்ற வளர்ப்பு விலங்குகளையும் வளர்க்க ஆரம்பிக்கின்றனர்.

வேடர்கள் பாரம்பரிய உணவு தயாரிக்கும்முறை ஏனைய சமூகத்தினரின் உணவு தயாரிக்கும் முறையில் இருந்து தனித்துவமானது. இறைச்சி போன்றவற்றைச் சமைத்தல் மற்றும் சுடுதல் ஆகிய முறைகளில் பதப்படுத்துவர். கிழங்கு போன்றவற்றை அவித்தல், சுடுதல் ஆகிய முறையிலும் ஏனைய உணவு வகைகளை அவித்து உண்பர். இவற்றுக்கு உப்பு மற்றும் மிளகாய் மாத்திரம் சேர்க்கப்படும். இறைச்சி சுட்டோ அல்லது வெயிலில் வைத்து உலர்த்தியோ (காயவைத்து) உண்ணப்படும்.

வேடர்கள் உணவைப் பதப்படுத்தி நீண்ட நாட்களுக்கு சேமிக்கும் பழக்கம் உடையவர்களாகவும் அதற்கான தொழில் நுட்பத்தையும் கொண்டிருந்தனர். வேடர்கள் காயவைத்தெடுத்த சுவை மிகுந்த இறைச்சியை தேனில் நனைத்து பாதுகாத்து வைப்பர். இதனைத் தவிர மண் சட்டி அல்லது சுரக் குடுவையில் போட்டு அதற்கு தேன் கலந்து உணவில்லாத காலத்தில் உண்பதற்காக பாதுகாத்து வைக்கப்படும் நடைமுறையும் வேடர்களிடம் உள்ளது. பழைய காலங்களில் வேடர்கள் உணவைப் பாதுகாத்து வைப்பதற்காக மரப் பொந்துகளைப் பயன்படுத்தினர். மரப்பொந்தினுள் உணவை வைத்து ஓட்டையைக் களியினால் அடைத்து விடுவர். உணவு பழுதடையாமல் இருப்பதற்கேற்ற விதத்தில் தேனுடன் கலந்து பதப்படுத்தி பொந்துகளில் வைக்கப்படும். உணவுத் தட்டுப் பாடான காலங்களில் விநியோகிப் பதற்காக இவ்வாறு சேமிக்கப்படுகின்றன. இவ்வாறு சதைப் பற்றுள்ள இறைச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்கப்படும். மான் இறைச்சி அதன் கொழுப்பு, அது போல் உடும்பு இறைச்சி அதன் கொழுப்பு (உடும்பின் கொழுப்பை எண்ணெய்க் காது என்றும் அழைப்பர்) சேர்த்து சுடவைத்து பதப்படுத்தும் முறை யினையும் கையாளாளுகின்றனர். இது இன்று நாம் இறைச்சியை எண்ணெயில் இட்டுப் பொரித்து பதப்படுத்தி உண்ணும் முறைக்குச் சமமானதாக அமைந்திருந்தது. மிருகங்களின் கொழுப்பைக் கொண்டே இறைச்சியைப் பதப்படுத்தும் நுட்பத்தை வேடர்கள் பயன்படுத்தி யிருந்தனர்.

குரக்கன் போன்ற தானியங்களை களி மற்றும் ரொட்டியாக தயாரித்து உண்ணும் பழக்கமுடையவர்கள். சட்டியில் போட்டு வறுத்து, வறுக்கப்பட்ட சோளத்தை மாவாக இடித்து எடுத்து அதனை தேங்காயத் துருவலுடன் கலந்து இனிமையான உணவாகத் தயாரிப்பர்.

உணவை பதப்படுத்தி வைப்பதற்கு உரிய நவீன தொழில்நுட்பம் எவற்றையும் அறிந்திராத வேடர்கள் உடல் ஆரோக்கியத்திற்குப் பங்கம் ஏற்படுத்தாத விதத்தில் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி ஆரோக்கியமான உணவை உண்ணும் நுட்பத்தையும் தம்வசம் வைத் திருந்துள்ளனர். மிருகங்களின் உடற்பாகங்கள் மற்றும் இயற்கையில் இருந்து பெற்றுக்கொண்ட உணவுப் பொருட்களை தேவைக்கேற்ப பயன்படுத்தி உணவை பதப்படுத்தி உண்ணும் நுட்பம் வேடர்களிடம் வளர்ச்சியடைந்திருந்தது.

உணவு வாழ்வாதாரத்திற்கு மாத்திரம் வேடர்களினால் வரைய றுக்கப்பட்டிருந்தது. தேவைக்குரிய உணவையே வனாந்தரங்களில் இருந்து பெற்றுக்கொண்டனர். ஆரம்பகாலத்தில் வனாந்தரங்களில் பெற்றுக்கொண்ட உணவுகளை வியாபாரநோக்கில் பயன்படுத்துவ தில்லை. வேடர்களிடம் ஏனைய சமூகங்களில் நிலவும் பொருளா தாரத்தை அடிப்படையாகக்கொண்ட சமூக ஏற்றத் தாழ்வுகள் நிலவ வில்லை. அத்துடன் எந்தச் செயற்பாட்டையும் பொருளாதார நோக்கில் முன்னெடுக்க வேண்டிய தேவையும் வேடர்களுக்கு இருக்கவில்லை. இயற்கையில் இருந்து பெறப்பட்ட உணவுகளை ஏனைய சமூகங்களுக்கு விற்பனை நோக்கத்திற்காகவோ, நட்புரீதியாகவோ பங்கீடு செய்வதற் கேற்றவிதத்தில் ஏனைய சமூகங்களுடன் வலுவான தொடர்புகள், உறவுகளை வேடர்கள் பேணவில்லை. இவை யாவற்றிற்கும் மேலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச் சமநிலையைப் பேண வேண்டும் என்னும் நோக்கு வேடர் களிடம் வலுவானதாக இருந்தது. அவ்வாறு பேணப்படாவிட்டால் எதிர்கால உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாது போய்விடும் என நம்பினர். இயற்கை வளங்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் இயற்கை வளங்களை அனுபவிக்கும் திறன் வேடர்களிடம் இருந்ததே இதற்கெல்லாம் அடிப்படை.

பரந்த வனாந்தரத்தில் வாழ்ந்தவர்களின் வாழ்வு சமகாலத்தில் குறித்த இடத்தினுள் குறுக்கப்பட்டதால் ஆரம்பத்தில் காணப்பட்ட வாழ்க்கை முறையை தற்காலத்தில் முன்னெடுக்க முடியாத நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு ஏற்றதாகவே உணவு விநியோகமும் உணவுப் பழக்கமும் மாற்றமடைந்தது. வனாந்தரக் காடுகளைப் பாதுகாக்கும் அரசின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள், உள்நாட்டு யுத்தம்[9] ஆகியன வேடர்கள் காடுகளில் சுதந்திரமாகத் திரிவதற்கும் காட்டு உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்தியது. அத்தடைகளையும் மீறி குறிப்பிட்டளவான உணவுகளை வனாந்தரங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்தனர்.

உணவில் கலப்படம் மிகப்பெரிய பிரச்சினையாக நவீன வாழ்க்கைப் புலத்தில் உருவெடுத்துள்ளது. இதற்கு மாற்றீடாக இயற்கை

---

9. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் 1983இல் முனைப்புப் பெற்றாலும் அது 1990களில் இருந்து உக்கிரம் பெறுகின்றது. யுத்த காலத்தில் தமிழ்ப் பகுதிகளான வாகரை, முறுத்தானை போன்ற பகுதிகளில் வாழ்ந்த வேடர்கள் போராளிக் குழுக்களில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஆயுதங்களுடன் செயற்பட்ட வேட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் அதிகாரம் எப்படிப் பட்டது என்பதை அனுபவித்து உணர்ந்ததுடன் அதிகாரம் அவர்களின் சமூக அடையாளங்களை இல்லாமல் செய்து அவர்களை உயர் ஸ்தானத்தில் வைத்து நோக்கியதை உணர்ந்தனர். போராளிக் குழுக்கள் காட்டுப்பகுதிகளில் செயற்பாடுகளில் ஈடுபட் டதால் அவர்களின் தாக்கம் வேடர்களுக்கும் ஏற்பட்டது. இது வேடர்களின் நடை, உடை, பாவனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. போராளிக் குழுக்களுடனான தொடர்பு ஏனைய சமூகங்களுடன் வேடர்களை சமமாகப் பழகுவதற்கான வாய்ப்புக்களை வழங்கியது. இருந்தும் அவர்களால் யுத்த காலத்தில் விருப்பம்போல் காட்டிற்குள் சென்று அவர்களின் இயல்பு வாழ்வை முன்னெடுப்பதில் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். ஏனெனில் காட்டில் இராணுவம், போராளிக் குழுக்கள் என இரு தரப்பினரும் உலாவுவதும் அவர்க ளுக்கு இடையே சண்டைகள் இடம்பெறுவதும் வேடர்களைப் பாதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் (Organic Farm), இயற்கையில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் உணவு என்னும் இரண்டிலும் மக்கள் நாட்டம் செலுத்துகின்றனர். பொது வர்த்தக நிலையங்களில் இயற்கை விவசாயத்தின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுகள் என்னும் ஒரு புதிய கலப்படமும் தோன்றியுள்ளது. இவ்வாறான நிலையில் அதற்கு மாற்றீடாக வேடர் களின் உணவுப் பொருட்கள் உரம், உணவைப் பதப்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்கள் பாவிக்கப்படாத இயற்கையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உணவுகளாக இருப்பதால் அவ்வுணவுகளுக்கு கூடுதலான மவுசு ஏற்பட்டது. கலப்படமற்ற இயற்கை உணவுகளை உண்பதில் ஆர்வமாக உள்ளவர்கள் வேடர்களிடம் இருந்து உணவுப் பொருட்களை கூடுதலான விலை கொடுத்தும் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக உள்ளனர். புதிய வாழ்க்கைச் சூழலில் வாழ்வதற்கான கதியற்றிருந்த வேடர்கள் பாரம்பரிய உணவுகளை விற்பனைப் பண்டங்களாக்கி அதன் ஊடாக வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் நிறுவன உற்பத்தி களான பொதிசெய்யப்பட்ட நூடில்ஸ், பொதி செய்யப்பட்ட பால்மா, ஏனைய உணவுப் பொருட்களை உண்பதற்கு பயிற்றப்படுகின்றனர். இவை அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து மாற்றமடைந்து நவீன வாழ்க்கை முறையினை உள்வாங்கியதன் அடிப்படைகளாக அமைந்திருந்தன. வேடர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றான மகியங்கனையில் வாழும் வேடர்களின் பிரதிநிதி ஒருவர் ''நாங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சம் சோறு சாப்பிடப் பழகிவிட்டோம்'' (ஊர்வரிக்கே வன்னிலா எத்தோ, தம்பானை, மகியங்கனை) எனக் கூறிய கருத்துக்கள் புதிய வாழ்வியல் சூழலுக்குள் வேடர்கள் அவர்களை இணைத்துக் கொண்டுள்ள தன்மையினை காட்டுவதற்கு போதுமான உதாரணமாக அமைகின்றது.

பாரம்பரிய உணவைப் பெற்றுக் கொள்வதில் அவர்களுக்கு இருந்த சிரமம் புதிய உணவுப் பழக்கத்திற்கு அவர்கள் பரீட்சயப்படுத்திக் கொண்டதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகின்றது. அவர்கள் வாழும் சூழலில் மேற்கொள்ளக்கூடிய தொழில்களான சேனைப் பயிர்ச்செய்கை, மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். சிலர் வெளிக்கிராமங்களுக்கு கூலிவேலைக்குச் செல்வதிலும், மத்திய கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்குச் செல்வதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். ஏனெனில் இன்று வேடர்களுக்கு அறிமுகமாகியுள்ள பணத்தைப் பிரதானப்படுத்திய வாழ்க்கைமுறை வேடர்களை பணத்தைத்தேடி பல இடங்களுக்கு அலையச் செய்கின்றது. பணப் பொருளாதாரத்திற்கேற்ப அவர்கள் பாரம்பரியமாகப் பயிற்றுவிக்கப்படாததால் ஏனைய சமூகத்தினரைப் போல் பணத்தை இலகுவாகச் சம்பாதிக்க முடியாத அவலமான சூழலை எதிர்கொள்கின்றனர்.

### vii. வாழ்விடம்

ஆரம்பகாலங்களில் காடுகளில் வாழ்ந்த வேடர்கள் குகைகளிலும் தற்காலிக தங்குமிடங்களிலும் வாழ்ந்தனர். ஆனால் தற்காலத்தில் எளிமையாக அமைக்கப்பட்ட வேலியிட்டு எல்லையிடப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிசைகள், வைக்கோல் மற்றும் நாணல் புல்லால் கூரை வேயப்பட்ட குடிசைகள் என்பவற்றை வாழ்விடங்களாக அமைக்கின்றனர் (படம் 07).

இயற்கையில் கிடைக்கும் பொருட்களான களிமண், இலுப்பம்புல், நன்னாரி, விண்ணாங்கு நார்கள், காட்டு மரம் போன்றவற்றைப் பயன்படுத்தி வாழ்விடங்களை நிர்மாணிக்கின்றனர். இவற்றினை நிர்மாணிப்பதற்காக எவ்வித செலவும் இவர்களுக்கு ஏற்படுவதில்லை. இவற்றை உருவாக்கும் திறன் அவர்களிடம் காணப்பட்டது. குளிர், வெப்பம், பனி, காற்று ஆகிய இயற்கையின் பாதிப்புக்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடியவையாக இவை அமைந்திருந்தன (அப்புகாமி, சின்னத்தம்பி, முறுத்தானை). மூலப்பொருட்களைப் பதப்படுத்தல், பொருத்தமான முறையில் வடிவமைத்தல் என்பன அவர்களின் சுவாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. இவை அடிப்படை வசதிகளைக்கொண்ட சிறிய வாழ்விடமாக விளங்கும்.

வறுமை ஒழித்தல், மற்றும் மக்கள் நலன்புரித் திட்டங்கள் என்பன வேடர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் எற்படுவதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. இதற்கமைய வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வேடர்களுக்கு நிரந்தரமான கல்லாலான வீடுகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. இதனைப் பல வேடர்கள் விருப்புடன் ஏற்றுக் கொண்டனர். இதனால் பாரம்பரிய வாழ்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடக்கலை படிப்படியாக வழக்கொழிந்துகொண்டு வருகின்றது. வேடர்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்பட்டுள்ளதால் ஆரம்பகாலங்களில் புலம்பெயர் வாழ்வு வாழ்ந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட குகைகள், தற்காலிக தங்குமிடங்கள் என்பன இன்று தேவையற்றதாகின்றன. நவீன வாழ்க்கை முறைக்குள் சென்ற வேடர்களுக்கு அவர்களின் பாரம்பரிய வதிவிடங்கள் மின்சார வசதிபோன்ற அரசாங்கத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக அமைந்ததுடன் நவீன வாழ்வியல் செயற்பாட்டை தொடர்வதற்கும் (எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தல், சிறார்கள் கல்வி கற்பதற்கான ஏற்புடைய சூழலை உருவாக்குதல் போன்றன) இடமளிப்பதாக அமையவில்லை. புதிய வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் நவீன வசதிகளைக் கொண்ட வாழ்விடங்களை விரும்பி ஏற்றுக் கொண்டனர்.

## viii. வைத்தியம்

அனுராதபுரம் மற்றும் கரையோர வேடர்களில் தெற்காசிய பண்பாடான ஆயுள்வேத மருத்துவப் பழக்கத்திற்கு உட்பட்ட சிலராவது காணப்படு கின்றனர். அவர்கள் மூலிகைக் கலவைகளை உடம்பின் சமநிலையைப் பேணுவதற்குப் பயன்படுத்துகின்றனர். சில நோய்கள் பேய் பிடிப்ப தனால் வருவதாக நம்பி பேயோட்டுவதற்கான சடங்குகளை சிகிச்சையாக மேற்கொள்கின்றனர். குறிப்பாக அனைத்து நோய்களுக்கும் ''வின்டென்ன'' வேடர்கள் சடங்குகளையே பயன்படுத்துகின்றனர் (https://www.encyclopedia.com/places/asia/sri-lankan-political-eography/vedda). வேடர்களினால் ஆண்டுக்கொரு தடவை மேற்கொள்ளப்படும் சடங்குச் செயற்பாடுகளின்போது சடங்கு சார்ந்த மாந்திரிகச் செயற் பாட்டின் மூலமாக நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு முதன்மை யளிக்கப்பட்டிருந்தது. சடங்கு நடைபெறும் இடத்தில் குறித்த வேடக் குழுமத்தைச் சேர்ந்த பலரும் இணைவதால் நோயாளர்களுக்கான வைத்தியமும் ஆலோசனைகளும் அங்கு குழுமியிருக்கும் முதியவர் களால் வழங்கப்படும். பொதுவாக அடுத்த வருடம் சடங்கிற்காகக் கூடும்போது குறித்த நோய் குணமடைந்துவிடும் என வேடர் சமூகத்தினர் நம்புகின்றனர். இதனைவிட கிராமத்தில் வாழும் மந்திர ஆற்றல் வாய்ந்த மதகுரு சாதாரண காலங்களிலும் நோய்களுக்கான சிகிச்சைகளை அளித்துக் கொண்டிருப்பார் (படம் 08).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைபோட்டுப் பார்த்தல் என்னும் ஒரு மாந்திரிகத்துடன் தொடர்புடைய முறையினை நோய்களைக் கண்டறிவதற்குப் பயன்படுத்துகின்றனர். இவர்களிடம் சுமார் பதினெட்டு மைபோட்டுப் பார்க்கும் முறைகள் உள்ளதாக அறியமுடிகின்றது. உலக்கை, கல் ஒன்று, நெல் குவியல், வில் போன்றவற்றை மைபோட்டுப் பார்ப்பதற்கு உபயோகிப்பர். சிங்கள, தமிழ் சமூகங்களிலும் மை போட்டுப் பார்க்கும் முறை நடைமுறையில் உள்ளது. அவர்கள் பொருட்களைத் திருடிய திருடனைக் கண்டறிதல், பகைவர்கள் தொடர்பான விடயங்களை அறிவதற்கு மைபோட்டுப் பார்ப்பர். ஆனால் வேடர்கள் அவர்களின் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் என்ன என்பதையும் அதனை ஏற்படுத்திய தீய ஆவி அல்லது பேய் எது என்பதையும் கண்டறிவதற்கே மை போட்டுப் பார்க்கின்றனர். மை போட்டுப் பார்க்கும் போது,

*''ஆய் போவா துமமண்கட சுவாமின் வஹன்செ கல் பெனட*
*துனு பேனட, சுப பேனட, அஹூகரலா தென்ட ஓனா.*
*மயெ பேனட என்ட ஓனா.*
*குந்தெ வன்னியா பொரு பேரை அதஹர லெட களயகா*
*மட்ட அஹூகரவன்ட ஓனா.*
*ரீரியகா இந்திகெல்லே யகா,*
*ராஹூ யகுன் மெம சுப பேனட அஹூகரலா தென்ட ஓனா''*

என்னும் மந்திர ஆணையான வேண்டுதல் பிறப்பிக்கப்படும். அதாவது வணக்கத்திற்குரிய துமமன்கட சுவாமி அவர்களே! கல் மைக்கு, சுப மைக்கு பிடித்துத் தரவேண்டும். எனது மையில் வரவேண்டும். மலையில் வன்னியா போலியான மைகளை கைவிட்டு நோய் ஏற்படுத்திய பேயை என்னிடம் பிடித்துத் தரவேண்டும். டகரி பேய், இந்திகொல்லை பேய், ராஹூப் பேய்கள், பட்டப் பேய்கள், இச்சுபமான மையில் பிடித்துத் தரவேண்டும் என்பதாக அந்த வேண்டுதலின் பொருள் அமைந்திருந்தது. நோய்களை ஏற்படுத்துவனவாக மலைப் பேய்கள் காணப்படுகின்றன என்பதும் (மலைத் தேவர் நோய்களில் இருந்து விடுவிக்க பெறுவதற்கு உதவும் தெய்வம்) நோயாளர்கள் பேய்களுக்கு அன்பளிப்புக்களை வழங்காவிடின் பேய்கள் துன்பங்களை ஏற்படுத்தும் என்பதும் வேடர்களின் நம்பிக்கையாகும். இந்நடைமுறை தமிழ் மக்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பேயோட்டும் சடங்குகளுடன் தொடர்புடையதாக அமைகின்றது.

வேடர்களுக்கு மருத்துவரீதியான அறிவு வரையறுக்கப்பட்ட தாகக் காணப்பட்டாலும் எலும்பு முறிவு மற்றும் ஆழமான வெட்டுக் காயங்களுக்கு இவர்களின் மருந்துகள் பயனளித்துள்ளன. இதற்கு சிறப்பாக 'பின்புறுத்தெல்' என்னும் எண்ணெயைப் பயன்படுத்து கின்றனர்.

சமகாலத்தில் அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச மற்றும் மேற்கத்தேய மருத்துவ முறைகளுக்கு வேடர்கள் பயிற்றப்படுகின்றனர். அரசின் நடமாடும் வைத்தியசேவை, பொதுச் சுகாதாரத் தாதியர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோர் ஏனைய பிரதேசங்களின் வைத்திய சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ளது போன்று வேடக் கிராமங்களின் வைத்திய சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ளதால் மேலைநாட்டு வைத்திய முறைமைக்கு வேடர்கள் மாறியுள்ளனர். பாரம்பரிய மருத்துவிச்சு முறை அரச வைத்திய அதிகாரிகளால் தடைசெய்யப்படுகிறது. ஏனெனில் இந்த வைத்திய முறையில் சம்பவிக்கும் குழந்தை, தாய் மரணம் தொடர்பான அபாயநேர்வு இதற்கான காரணமாகும். இதனால் மருத்துவிச்சி முறையில் குழந்தைப் பேற்று வைத்தியம் பார்த்தல் அரச குற்றமாகவும் இப்போது கொள்ளப் படுகின்றது. சமகாலத்தில் வேடர்கள் வைத்திய தேவைகளுக்காக மேலைநாட்டு முறையில் அமைக்கப்பட்ட அரச வைத்தியசாலை களையும் தனியார் வைத்தியசாலைகளையும் நாடுவதால் வேடர்களின் பாரம்பரிய வைத்தியமுறை படிப்படியாக வழக்கொழிந்து போகின்றது. இருந்தும் வேடர்கள் அவர்களை தரிசிக்கவரும் உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தியுள்ள பொருட்களில் அவர் களின் பாரம்பரிய மருந்துகளும் அடங்கியிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. தம்பானையில் வேடர்களின் மருந்து வகைகள், உள்ளடக்கிய வைத்திய பொருட்களை உள்ளடக்கிய காட்சியகம் தனியாக அமைக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ix. ஆடை அணிகலன்

வேடர்களை அடையாளப்படுத்துவதாக ஆடை, அணிகலன் தொடர்புடைய பண்பாடும் அமைந்திருந்தது. ஆரம்பகாலத்தில் வேடர்கள் இலைகுழைகளால் உடற்பாகங்களை மறைத்து வாழ்ந்தனர். பிற்காலங்களில் கோமணம், அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக சாரன் அணிந்தனர். பெண்கள் ஒரு துணியால் உடலின் கீழ் பாகங்களை மறைத்துக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் சமகாலத்தில் ஏனைய சமூகத்தினர் போல் ஆடைப் பண்பாட்டை மாற்றியுள்ளனர். சிங்களச் சமூகத்துடன் இணைந்து வாழும் வேடர்கள் சிங்களவர்களின் ஆடைப் பண்பாட்டைப் பின்பற்ற, தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து வாழ்பவர்கள் தமிழர்களின் ஆடைப் பண்பாட்டைப் பின்பற்றுகின்றனர். இந்த ஆடைப் பண்பாடு ஐரோப்பிய தாக்கத்துக்கு உட்பட்டதாகவும் உள்ளது (https://srilog.com/veddas-of-sri-lanka_2567.html).

வேடர்கள் என்பதை வேறுபடுத்தி அறிவதற்கான அடையாளங் களைத் தாங்கியவர்களாக வேடர்கள் பலர் இன்றுவரை வாழ்கின்றனர். சிறப்பாக கோடரியை இடது தோளில் அணியும் பழக்கத்தை கொண் டுள்ளனர். செல்லுமிடங்களுக்கு கோடரியுடன் செல்வதுடன் அதனை அவர்களுடன் வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பர். கோடரி வேடர் என்பதை அடையாளப்படுத்தும் முக்கியமானதொரு அவர்களின் பாவனைப் பொருளாக விளங்குகின்றது. ஆண்கள் பொதுவாக உடம்பின் மேல் பாகத்தைக் மறைக்காதவிதத்தில் ஆடை யணியும் பழக்கம் உடையவர்கள். நீளமான தாடி வைத்துக் கொள்வ துடன், தலை முடியை நீளமாக வளர்க்கும் பழக்கம் கொண்டவர்கள். பெண்கள் முத்துமாலை அணியும் பழக்கத்தைக் கொண்டிருப்பர்.

### x. கலை மற்றும் கைப்பணி மரபு

பழங்குடியினர் எப்போதும் கலைக்கான சமூக விதிகளை உறுதியாக நம்புகின்றனர். அதனை உறுதியாகப் பின்பற்றியதுடன் பாதுகாத்தும் வருகின்றனர். இந்த விதிகள் கலைக்கான உட்பொருள், வடிவச் சூழமைவு, அதில் கலந்துகொள்ளும் மக்கள் என்பவற்றுடன் தொடர்பு டையதாகவே விளங்கியது. கலை சமய அனுபவத்தை வெளிப்படுத்திய துடன் பயன்பாட்டு நோக்கம் மிக்கதாகவும் செயற்திறன் மிக்கதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும். பழங்குடியினரின் பண்பாட்டில் அழகு என்பதும் கலையின் சமூக செயற்பாட்டுடன் தொடர்புடையதாக உணரப்படுகிறது. கலையினை சமூகத்தில் இருந்து வேறுபட்ட வடிவமாகக் கொள்ள முடியாது. அதுபோன்று பழங்குடியினரின் பண்பாட்டில் கலைஞனை சமூகத்தில் இருந்து வேறுபட்டவனாகப் பார்க்கமுடியாது. கலைஞன் ஒரு சமூக உறுப்பினராக பார்க்கப்படுகின்றானேயன்றி கலைஞனாக பார்க்கப்படுவதில்லை. கலைஞனால் உருவாக்கப்படும் கலையும் அவர்களின் வாழ்வியல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக நோக்கப் படுகின்றதேயன்றி தனித்தவமானதொரு படைப்பாக நோக்கப்படுவதில்லை. இதனால் கலைச் செயற்பாடுகளும் வாழ்வியல் செயற்பாடுகளும் வேறுபட்டவையல்ல. சமூகத்தில் ஏற்படும் சிறிய அழுத்தத்தின் காரணமாக கலையின் புதிதளித்தல் நடைபெறுகின்றது. அத்துடன் கலை சமய, தனிமனித செய்கையின் சூழமைவாகவும் அதிலிருந்து பயனொன்றைப் பெறும் செயற்பாடாகவும் அமைந்துவிடுகிறது (Leuthold, Steven, 1998:48).

பழங்குடியினரின் கலை பற்றிய நோக்கிற்கு அமையவே வேடர்களின் கலை பற்றிய நோக்கும் அமைந்துள்ளது. கலையும் கைப் பணியும் இயற்கை சார்ந்த சாதாரண நடைமுறைகளாக வேடர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய வேடர்களை அடையாளப்படுத்தக் கூடியதாக சில கலை, கைப்பணிப் பொருட்கள் காணப்பட்டன. இவை ஏனைய சமூகங்களினால் மேற்கொள்ளப்படும் கலை, கைப்பணிச் செயற்பாடுகள் போன்று குறிப்பிடும்படியான அலங்கார முயற்சிகளாக அன்றித் தனித்துவமானவையாக அமைந்திருந்தன. வேடர்களிடம் தனித்துவமான அலங்காரக் கலைவடிவங்கள் இல்லாதிருந்ததுடன் அவை புறக்கணிக்கவும் பட்டன. வேடர்களினால் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்தளவான கலைச் செயற்பாடாக இசைப்பாடல்கள் கொள்ளப்படத் தக்கன. இவை வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டவை. கூடுதலாக வேடர்களினால் மேற்கொள்ளப்பட்ட சடங்கு நடனத்தின் போது பாடப்பட்டன. வேடர்கள் வாழ்வின் நோக்கை, வாழ்க்கைத் தேவையை கலையின்மூலம் வெளிப்படுத்துவதை நோக்காகக் கொண்டிருந்ததே இதற்கான காரணம். பொதுவாக பாடல்களைப் பாடுவதில் சிறப்புத் தேர்ச்சியுடையவர்களினால் பாடப்பட்டிருந்தன. இவை உள்ளக்கிளர்ச்சியின் வெளிப்பாடாகக் கொள்ளப்படத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிகள் நாளாந்த வாழ்வியல் செயற்பாட்டுடன் தொடர்புடையவை யாகவும் அமைந்திருந்தன. இவை பருவ காலங்களுக்கு உரியவையன்று. எக்காலத்திலும் பாடப்பட்டன. கலைத்துவ உந்துதலும் கவி பாடு வதற்கான நேர்வும் ஒன்றிணையும் போது கவிகளைப் பாடினர். உயர்திறன் மிக்க கலைத்துவ வெளிப்பாடாக கவிகள் இன்றுவரை தொடர்கின்றன. வேடர்களிடம் உயர்திறனுடைய அலங்காரக் கலை வடிவங்களும் காணப்பட்டன. கலைச் செயற்பாடுகளில் வேடர்கள் முழு விருப்புடன் ஈடுபட்டனர். இவை பாறைகளில் மேற்கொள்ளப் பட்ட நேர்த்தியற்ற வரைவுகளாகக் காணப்பட்டன.

## குகை ஓவியங்கள்

வேடர்கள் ஆரம்பகாலங்களில் வாழ்ந்த இயற்கை அமைவிடங்களான குகைகளில் இருந்து சில ஓவியப்பதிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினை அடிப்படையாகக்கொண்டு வேடர்களின் வரைதிறனை கண்டறியக்கூடியதாக இருந்தது. அடிக்கடி நடந்த நிகழ்வுகள் கரடு முரடான அல்லது நேர்த்தியற்ற வரைவுகளாக குகைகளில் வேடர் களால் வரையப்பட்டிருந்தன. வேடர்கள் வெளிப்படையாக இவற்றில் எவற்றையும் வரையவில்லை. ஓவியம் வரைவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இடம் ஒருபோதும் மழையினால் பாதிக்கப்படாத விதத்தில் காணப்பட்டது. இந்த வரைவுகள் பொதுவாக பெண்களா லேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் பெண்கள், வேட்டைக்குச் சென்ற ஆண்கள் வேட்டையில் இருந்து திரும்பி வரும்வரை குகைகளில் காத்திருந்தனர். இது நீண்டநேரத்தைக் கொண்டதாக இருந்ததால் அவர்களுக்கு இருந்த படைப்பாக்க மனோபாவத்தால் பாறையில் சில ஓவிய வரைவுகளை மேற்கொண்டனர். இந்த உருவங்களின் உருவாக்கத்தில் மாந்திரிக ஆற்றல் இருந்ததாக குறிப்பிடமுடியாது. இங்கு வரையப்பட்ட உருவங்களில் ஆண், பெண் உருவங்கள், பல்வேறுபட்ட மிருகங்கள், தேனைச் சேமித்து வைக்கும் குடுவை போன்றன குறிப்பிடத்தக்கன. சாம்பல் உமிழ்நீருடன் கலந்து ஈரமாக்கப்பட்டு வரைபுகளை கைகளி னால் மேற்கொண்டுள்ளனர். சிறுத்தையில் காணப்படும் புள்ளி போன்ற அமைப்புக்களை கரியினால் உருவாக்கியிருந்தனர் (Seligmann,1911:318-319). இயற்கை வர்ணங்கள், வரைவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட முறை, வரைவுக்காக வர்ணத்தை தயார்படுத்தியமுறை என்பன ஆரம்பகால மனிதனின் வரைதல் நுட்பத்துடன் தொடர்புடை யனவாகவே அமைந்திருந்தன.

வேடர்களினால் வரையப்பட்ட பாறை ஓவியங்கள் கோட்டுச் சித்திரிப்பாக அமைந்திருந்தன. இவை அரூபமான தோற்றத்தைக் கொண்டிருந்ததுடன் பலியோதிக், நியோலதிக் கால மனிதனின் பாறையோவியங்களில் இருந்து இந்த ஓவியங்கள் வேறுபட்டு இருக்கவில்லை. வேடர்களின் வெற்றியைச் சித்திரிப்பதாகவும் இந்த வெற்றியால் உருவான தைரியமானது வலிமைமிக்க காட்டு விலங்குகளில் இருந்து வேடர்களை உயர் நிலையில் வைத்திருந்த நிலையையும் வெளிப்படுத்தின. இவை எளிமையாகக் காணப்பட் டாலும் இவற்றிடையே பல அரூபமான விளக்கங்கள் உட்பொதிந்து இருந்தன. இந்த விளக்கங்கள் அன்றைய வேடர்களின் வாழ்வுடன் தொடர்புடைய பல துயரம் நிறைந்த வாழ்வின் சாட்சியங்களாக அமைந்திருந்தன (படம் 09).

மனித உருவங்களின் தலைக்கு மேல் காணப்பட்ட ஒளிவட்டம் அல்லது இருண்ட மேகமானது வேடர்களுக்கு காணப்பட்ட தெய்வீக சக்தியை மட்டும் சுட்டிக் காட்டாது, தெய்வீக சக்தியின் அற்புதத்தைக் காணவும் பெறவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அனைவரையும் சுட்டிக் காட்டுகின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பாறை ஓவியங்கள் ஒரு நீண்ட காலத்திற்கு முந்திய ஒரு கட்புல ஞாபகங்களாக மாத்திரம் அமையாமல் முன்னோர்களின் அறிவினையும் பாரம்பரியத்தையும் பிற்காலத் தலைமுறையினருக்கு வெற்றிகரமாகக் கடத்தும் கருவியாகப் பயன்படுகின்றன. இன்றைய காலம் வரை இவை இலங்கையின் பூர்வீகப் பண்பாடு அடைந்த உச்ச ங்களின் மௌனமான ஒரு சாட்சியமாகக் காணப்பட்டு அனைத்து சமூகத்தினராலும் பாராட்டப்படும் ஒரு விடயமாக உள்ளன.

வேடர்களால் தம்பானையில் அமைக்கப்பட்ட கலாசார நிலையத் தின் சுவர்களில் பல ஓவியங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர். சமகாலத்தில் இவை வரையப்பட்ட போதும் சிலிக்மன் சுட்டிக்காட்டிய ஓவியங்களின் பிரதிகளாகவே இவை அமைந்துள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு வேடர்களின் மூதாதையரால் வரையப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகை ஓவியம் தொடர்பான தெளிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்னும் அடிப்படையில் அவற்றில் சில நூலில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன (படம் 15).

KOHA JPL

### மட்பாண்டப் பாத்திரங்கள்

வேடர்கள் மட்பாண்டப் பொருட்களை உருவாக்கியதற்கான சான்று கள் கிடைக்கின்றன. இவை இன்று நாம் பயன்படுத்தும் மட்பாண் டங்கள் போலன்றி நேர்த்தியற்றனவாக காணப்பட்டன. கருநிறமான களிகளை இவற்றின் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தினர். களியைத் தட்டி விரும்பிய வடிவத்தைப் பெற்று, வெயிலில் காயவைத்து பின்னர் நெருப்பில் சுட்டு உருவாக்கும் தொழில்நுட்பத்தை வேடர்கள் கொண்டிருந்தனர். கெனவெட்ட வேடர்கள் குறிப்பாக இவ்வாறான மட்பாண்டங்களை உருவாக்கினர். சிட்டல, வன்னிய வேடர்கள் மட்பாண்டத்தினை உருவாக்குவதில் நவீனமான முறைகளைப் பயன் படுத்தினர். மட்பாண்டப் பொருட்கள் ஆண், பெண் இருவரினாலும் உருவாக்கப்பட்டிருந்தன. இவை பண்டைய காலத்திலிருந்தே வேடர் களினால் உருவாக்கப்பட்டு வந்துள்ளன (படம் 11).

சில பாத்திரங்கள் அலங்காரமான வேலைப்பாடுகளைக் கொண் டிருந்தன. இருந்தும் இவை எந்தவிதமான சிறப்பு அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை. சில தடிப்பான அகலமான வாய்ப் பகுதியை உடைய பாத்திரங்கள் உதட்டு விளிம்புப் பகுதிகள் இல்லாமல் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அமைக்கப்பட்ட பாத்திரங்கள் மிகவும் பழைமையானதாகக் கொள்ளப்படத்தக்கவை.

### கருவிகளும் ஆயுதங்களும்

வில், அம்பு, கோடரி என்பன வேட்டையாடலுக்காகவும் மிருகங் களைத் துரத்துவதற்காகவும் சண்டையிடுவதற்காகவும் வீட்டுப் பாவனைக்காகவும் வேடர்களால் பயன்படுத்தப்படும் கருவிகளாகும். வேடர்கள் வில் செய்வதற்கு ''கொப்பெவெல்'' எனப்படும் ஒருவகை மரத்தினைப் பயன்படுத்துகின்றனர். வில் நாண் ''அருலு'' என்னும் மரத்திலிருந்து பெறப்படும் கொடியினால் ஏற்றப்படுகின்றது. அம்பு பொதுவாக ''வெலன்'' எனப்படும் மரத்திலிருந்து உருவாக்கப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இக்கருவிகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தை வேடர்கள் கொண்டிருந்தனர். பாரம்பரியமாக திறன் கையளிப்பு அடிப்படையில் இத்திறன்களைப் பாதுகாக்கின்றனர். இவை வேடர்களின் பயன்பாட்டிற் காக உருவாக்கப்பட்டதால் உருவாக்கத்தின்போது அலங்காரக் கூறுகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

## வேடர்களின் சடங்கும் கலை, கைப்பணி, அழகியல் உணர்வும்

வேடர்களின் சடங்கு வழிபாடு வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் தாங்கியதொரு வடிவமாகத் திகழ்வதால் சடங்குகாலச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் வேடசமூகத்தினர் பின்னிற்பதில்லை. இச்சடங்குகளே வேடர்களின் கலைத் திறனையும் அழகியல் உணர்வுநிலையையும் உள்ளடக்கியுள்ளதுடன் வேடர்களிடம் நிலைகொண்டுள்ள நம்பிக்கை களையும் தாங்கிய வடிவமாகவுள்ளன.

சடங்கை முன் நின்று நடத்தும் மதகுருவான கப்புகளில் வேடர்களின் குல தெய்வங்கள் வெளிப்படுவதும், அவை வேட சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன் வைப்பதும், அதன்மூலம் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்து எதிர்கால வாழ்விற்கான சிறந்த மார்க்கங்களைத் தேடுவதும் சடங்கு வழிபாட்டில் பிரதானம் பெற்றிருந்தது. சடங்கு நிகழ்த்துகையில் பயன் படுத்தப்படும் பொருட்களில் சில வேடர்களின் கலை, கைப்பணித் திறனை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. சடங்கு நிகழ்த்து கையில் இணையும் வேட சமூகத்தினர் பெறும் அனுபவம் ஒரு புதுமையான அனுபவமாக அமைந்திருக்கும். இதனை அழகியல் உணர்வுநிலையில் நோக்கமுடியும்.

சடங்குத் தேவைக்காக பல பொருட்கள் வேடர்களால் உருவாக்கப் படுகின்றன. சில எடுத்துக்காட்டுக்களை வழங்கமுடியும். இங்கு இடம் பெறும் சடங்குகளில் ஒன்றான பொட்டு வைக்கும் சடங்கில் பயன் படுத்தப்படுவதற்கும், குமாரத் தெய்வச் சடங்கின்போது பிரசன் னமாகி ஆடும் தெய்வங்களில் ஒன்றான ‘‘தட்டாலிவெருத்து சாமி’’ கையில் ஏந்தி ஆடுவதற்காகவும் ‘‘கடுவ’’ எனப்படும் பொருள் உருவாக்கப் படுகிறது. 1 ½ அடிநீளம் 4 அங்குல அகலம்கொண்ட இத்தி மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு மரத்துண்டைத் தட்டையாக வெட்டி மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியையும் கீழ்ப்பகுதியையும் வளைவாக வெட்டி உருவாக்கி அதற்குக் கருமஞ்சள், மஞ்சள், கறுப்பு என்னும் வர்ணங்களால் அலங் காரக் கோடுகளை வரைந்து இதனை வடிவமைப்பர். நேரான கோடுகளையும் வளைந்த கோடுகளையும் பயன்படுத்தி அலங்காரம் மேற்கொள்ளப்படும் (படம்: 12). இது சடங்குப் பயன்பாட்டிற்காக அமைக்கப்படும் ஒரு பொருளாக அமைந்திருந்தாலும் அதன் வடிவமைப்புத் திறனும் அதன் மூலம் வெளிப்படும் அழகியல் வெளிப்பாடும் அதனை ஒரு கலைப் பொருளாகவே அடையாளம் காட்டுகின்றது. இதனை அவுஸ்திரேலியப் பழங்குடியினரிடம் உள்ள பட்டை ஓவியத்துடன் (Bar painting) தொடர்புபடுத்தி நோக்க முடியும்.

இதனைவிட வழிபாட்டுத் தேவைக்கான பொருளான நாகம், அதனுடன் இணைந்து காணப்படும் சொர்ணாலி என்பன குறிப்பிடத் தக்கன. நாகத்தினை ஒரு மரத்துண்டில் வடிவமைப்பர். நாகத்தை உருவாக்குவதற்காக அவர்களால் தெரிவு செய்யப்படும் மரத்துண்டு படம் விரித்த நாகத்தின் தோற்றப்பொலிவை ஏற்படுத்தத்தக்க விதத்தில் அமைந்திருக்கும். காட்டுடன் தொடர்புடையதாக இவர்களின் வாழ்வு விளங்குவதால் நாகத்தை உருவாக்குவதற்கு பொருத்தமான மரத்துண்டு கிடைக்கும்போது அதனைப் பெற்று, சடங்குத் தேவையின்போது நாகத்தை கத்தியாலும் உளியாலும் மரத்தைச் செதுக்கி வடிவமைப்பர். நாகத்தின் படம் விரித்த தோற்றம் அழகாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் தலையில் இருந்து ஏனைய பகுதிகள் படிப்படியாக வால் வரை சிறிதாகச் செல்லும் விதத்தில் வடிவமைக்கப்படும் (செல்லமணி, சீனியன், முறுத்தானை). திருநீறு, குங்குமம் என்பனவற்றைப் பயன்படுத்தி வெள்ளை, கருஞ்சிவப்புப் புள்ளிகள் இடப்பட்டிருந்ததுடன் தலைப்பகுதியில் நீளக்கோடுகளும் குறுக்குக் கோடுகளும் இடப்படும். நாகத்தின் வடிவமைப்பு படம் விரித்தாடும் நாகம் ஏற்படுத்தும் அச்சம், பீதி என்னும் உணர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. காடுகளில் திரியும் வேடர்களுக்கு விச ஜந்துக்களின் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக சடங்கு வழிபாட்டின்போது நாகத்தை வழிபடுகின்றனர்.

''சொர்ணாலி'' துவரம் பிரம்பினால் உருவாக்கப்பட்டிருந்தது. ''களுராசா'' என்னும் தெய்வம் ஊன்றி நடப்பதற்காக பயன்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடியும் கரு மஞ்சள் வர்ணத்திலான கோடுகள் இடப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தது. இதனைவிட களூராசா வில் அம்புடன் ஆடும் சடங்கிற்காக அமைக்கப்படும் வில், அம்பு என்பனவும் குறிப்பிடத்தக்கன. வில் மரநார் மூலம் நாண் ஏற்றி உருவாக்கப் பட்டிருக்கும். அம்பின் தலைப்பகுதி இருபால் உருவாக்கப்பட்டிருப்ப துடன். அதன் முனைப்பகுதி தீட்டப்பட்டு கூராக்கப்பட்டிருக்கும். இப்பொருட்கள் நாகம், கடுவ என்பனவற்றின் படைப்பாக்கத்துடன் ஒப்பிட்டும் நோக்கும் போது கலை அம்சத்தைக் குறைவாகவே கொண்டிருந்தன.

சடங்குப் பொருட்கள் சடங்குகாலத்திலேயே உருவாக்கப்படு கின்றன. இவற்றை வேடர் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களே உருவாக்குவர். இவற்றை குறித்த ஒரு நபர் உருவாக்க அவருக்கு உதவியாக சிலர் செயற்படுவர். இருந்தும் குறித்த நபர்தான் இவற்றை உருவாக்க வேண்டும் என்பது ஒரு நியதியாகக் கடைப்பிடிக்கப்படுவ தில்லை. குறித்த சடங்கு நடைபெறும் சூழலில் குறித்த அப்பொருளை உருவாக்கும் திறன் உடையவர் யார் இருக்கிறாரோ அவரால் குறித்த பொருள் உருவாக்கப்படும். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் முத்து வண்டா என்பவர் இவற்றை உருவாக்கும் தேர்ச்சியுடையவராகக் காணப்பட்டதாகவும் அவரின் மரணத்தின் பின்னர் அடுத்த தலை முறையினர் உருவாக்குவதாகவும் இப்பொருட்களை உருவாக்கிய ஒருவர் குறிப்பிட்டார் (செல்லமணி, சீனியன், முறுத்தானை).

இப்பொருட்கள் ஒவ்வொரு வருடச் சடங்கின்போதும் புதிதாகவே உருவாக்கப்படுவதால் மூத்த உறுப்பினர்களால் எவ்வாறு உருவாக்கப் படுகின்றன என்பதை நுட்பமாக இளம் தலைமுறையினர் அவதானிக் கின்றனர் (படம் 13). பிற்காலத்தில் இப்பொருட்களை உருவாக்கும் திறனை அவர்களும் கற்றுக் கொள்கின்றனர். இளந்தலைமுறையினர் கற்றுக்கொள்ளும் வாழ்வியல் திறன்களில் ஒன்றாக சடங்குப் பொருட்களை உருவாக்கும் நுட்பத்தைக் குறிப்பிடலாம். இப் பொருட்களின் உருவாக்கம் என்பது சடங்குச் செயல் தொடரின் ஒரு பகுதியாகவே அமைந்திருக்கும்.

சடங்கிற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களை உருவாக்குவதற் குரிய ஆயுதமாக அவர்களின் தொழில், வீட்டுத் தேவைகளுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் கத்தி, சீவுளி, வாள் என்பனவே பயன்படுத்தப்படு கின்றன. உருவாக்கப்பட்ட பொருட்களை அலங்கரிப்பதற்கான வர்ணங்களை இயற்கை மூலப்பொருட்களில் இருந்தே பெற்றுக் கொள்கின்றனர். இங்கு கருமஞ்சள், மஞ்சள், கறுப்பு ஆகிய வர்ணங் களையே பயன்படுத்தியிருந்தனர். கறுப்பு வர்ணத்தை கரித் தூளை அரைத்துப் பொடியாக்கிப் பெற்றுக்கொள்வர். கருமஞ்சள் வர்ணத்தை சுண்ணாம்பையும் மஞ்சள் தூளையும் கலந்தும், மஞ்சள் வர்ணத்தை மஞ்சள் தூளில் இருந்தும் பெற்றுக் கொள்கின்றனர். வர்ணம் கலப்ப தற்கான வர்ணக்கலவைத் தட்டாக அச்சூழலில் காணப்படும் ஒரு தட்டையான சதுரவடிவமான கருங்கல் பயன்படுத்தப்பட்டது. அலங்காரங்களை வரைவதற்கான தூரிகையாக மெல்லியதாகச் சீவிய மரக்குச்சிகளைப் பயன்படுத்தியிருந்தனர்.

வேடர்களின் சடங்கின்போது கப்பல் மரம் எனப்படும் ஒரு மரம் சடங்கு நடைபெறும் இடத்தில் நடப்படுகின்றது. இது சுமார் 60 அடி உயரமுடையதாகும். மரத்தினை மூன்று பிரிப்பாகப் பிரித்து அதனைப் புனிதப்படுத்தி சடங்குகள் செய்து மஞ்சள், விபூதி, நாவல் இலை, பூக்கள் என்பனவற்றால் அலங்கரித்து சடங்குச் செயற்பாட்டின்போது நடுவர். வேடர்களினால் நடப்படும் கப்பல் மரம் பழங்குடியினரால் பயன்படுத்தப்படும் இன்னொரு முக்கிய குலக்குறி அடையாளமாகக் கொள்ளப்படத்தக்கது. வடமேற்குக் கரையோர கனேடியர் மற்றும் அமெரிக்க செவ்விந்தியர்களினால் அவர்களின் சடங்குசார்ந்த செயற்பாட்டின் ஒரு வடிவமாக குலமரபுத் துருவம் (Totem Pole) கொள்ளப்படுகின்றது. இவை குறியீட்டுரீதியான மனித உருவம், மிருகம், இயற்கை கடந்த வடிவங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கும். குலமரபுத் துருவம் அடிப்படையில் குலக்குழும உறவு, குடும்ப பரம்பரைத் தொடர்ச்சி, குழு அங்கத்துவம் என்பவற்றின் குறியீடாக அமைகின்றது. குலமரபுத் துருவத்தையும் வேடர்களால் நடப்படும் கப்பல் மரத்தையும் வேறுபடுத்தி அறிய முடியாது. குலமரபுத் துருவம் பல கலையம்சங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும். இருந்தும் கருத்தியல் சார்ந்து இரண்டும் ஒரே நோக்கிலேயே நடப்படுகின்றன.

வேடர்கள் சடங்கினை வாத்திய இசையினை எழுப்பி இசைப் பாடலின் தன்மையை ஒத்த மந்திரங்களை உச்சரித்தே நடாத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கின்போது இசைக்கப்படும் இசைக் கருவியைக் ''கொட்டு'' என அழைப்பர். இது பறையின் சத்தத்தை ஒத்த சத்தத்தை உடையது. இருந்தும் இதன் இரு பகுதியையும் கையினால் தட்டியே இசைப்பர். இக்கொட்டு வேடர் சமூகத்தைச் சேர்ந்தவர்களினாலேயே உருவாக்கப்படும். உருவாக்கத்திற்காக முதிரை மரம், ஆட்டுத்தோல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. கொட்டு உருவாக்கும் திறன் கொண்டவர்கள் வேட சமூகத்தில் உள்ளனர் (செல்வம், சின்னத்தம்பி, முறுத்தானை).

வேடர்களினால் சடங்குத் தேவையை அடிப்படையாகக்கொண்டு சடங்குப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. சடங்குத் தேவை முடிந்ததும் இவற்றை அழித்து அல்லது கைவிட்டு விடுகின்றனர். ஏனெனில் இப்பொருட்களை அவர்கள் கலையாக நோக்குவதில்லை. இருந்தும் கலை, கைப்பணிப் திறன்களை இவை கொண்டமைந் துள்ளன. இவை பழங்குடியினரின் கலையின் இயல்பாகும். அதே இயல்புகளை வேடர்களின் சடங்கு சார்ந்த செயற்பாடுகளின் ஊடாக அடையாளம் காணமுடிகின்றது. கலையை அவர்களின் சமூக வாழ்வியலில் இருந்து பிரித்தறியமுடியாத நிலை பழங்குடியினரின் கலையில் காணப்படும் பொதுவான பண்பாகும். இதற்கு வேடர்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர்.

## அழகியல் உணர்வு

வேடர்களின் சடங்குச் செயற்பாடு ஒரு வழிபாடாக, சமூக செயற்பாட்டு மையமாக, பலரும் கூடி மகிழ்வுற்று இருப்பதற்கான ஒரு நிகழ்வாக அம்மக்களால் நோக்கப்பட்டாலும் சடங்கு நிகழ்த்துகையின் அழகியல் ஈர்ப்பு சடங்குடன் மக்களை இணைப்பதில் முக்கிய காரணியாகத் திகழ்கின்றது. வேடர்கள் சடங்குத் தேவைக்காக ஒன்று கூடுவதிலும் சடங்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் அவர்களின் அழகியல் தேவையும் ஒரு காரணியாக அமைகின்றது. நிகழ்த்துகை இடம்பெறும் போது வேட சமூகத்தைச் சேர்ந்தமக்கள் நிகழ்த்துகையில் பங்கு பற்றுவர்.

சடங்கு நிகழ்த்துகையின்போது சடங்கை நிகழ்த்துவோர் சாதாரண உணர்வு நிலையிலும் பார்க்க மேம்பட்ட உணர்வு நிலையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துகையில் ஈடுபடுகின்றனர். கண்களை அகல விரித்தல், உடல் நடுக்கம், உடல் பதற்றம், முகம் கறுத்துக் காணப்படுதல் என்னும் தோற்ற மாறுபாடுகள் இதனைப் புலப்படுத்தும்.

சாதாரண நிலையில் இருக்கும் மக்கள் நிகழ்த்துகைக்குத் தயாரானவுடன் ஒரு சக்தியைப் பெற்றுக் கொள்வதும் பின்னர் அச்சக்தியை கொண்டவர்களாக நிகழ்த்துகையில் ஈடுபடுவதும் அடிப்படையான அம்சங்களாகும். சடங்கை நிகழ்த்துபவர்கள் புதிய சக்தியைப் பெற்று நிகழ்த்துகையை மேற்கொள்வதும் நிகழ்த்துகையைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அவர்களின் அந்த சக்தியின் தாக்கத்தால் புதிய உணர்வுத் தளமொன்றுக்குச் சென்று அதாவது புதியதொரு சக்தியைப் பெற்று சடங்குடன் தம்மை இணைத்துக் கொள்வதும் சடங்கில் அவதானிக்கத்தக்கன.

எரிக் பிஸ்ச லிட்ச் அவர்கள் நிகழ்த்துகையின் அழகியல் பற்றிக் குறிப்பிடும் கருத்துக்களை நாம் இங்கு தொடர்புபடுத்தி நோக்கமுடியும். நிகழ்த்துவோருக்கு ஒரு சக்தி (Power) உருவாவதும் அச்சக்தி பார்வையாளருக்கு மாற்றியமைக்கப்படுவதும் (Transformative) நிகழ்த்துகை வழங்கும் அழகியலின் அடிப்படையானது என்பது அவரின் கருத்தாக உள்ளது (Fischer-Lichte, Erika, 2008:11). இந்த உருமாற்றீட்டுச் சக்தி (Transformative Power) கலையில் நடிகருக்கும் பார்வையாளருக்கும் ஏற்படும் உள்ளாந்த ஆற்றலாகக் கருதப்படுகின்றது. இதனை ஏற்படுத்துவதில் நிகழ்த்துகைக்கு ஒரு தனி இடமுள்ளது. நடிகர் இந்த உள்ளாந்த ஆற்றலை நிகழ்த்துகையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் போது பெற்றுக் கொள்கின்றனர். நடிகருக்கு இந்த உள்ளாந்த ஆற்றல் ஏற்படும் போதே அவர்களின் நிகழ்த்துகை உயிர்த்துடிப்புடையதாக அமைகின்றது. நிகழ்த்துகையைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது பார்வையாளர்களுக்கு இது நிகழ்த்துகையாளரின் உயிர்த்துடிப்பான தன்மையால் ஏற்படுகின்றது. பார்வையாளர் நிகழ்த்துகையில் ஈடுபாடுடையவர்களாக இருப்பதற்கு இச்சத்தியை பெறுவது ஒரு அடிப்படையான காரணம். இதனை வேடர்களினால் நடத்தப்படும் சடங்குகளிலும் அவதானிக்க முடிகின்றது. இதனை சடங்கு வழங்கும் அடிப்படையான அழகியலாகக் கருதலாம். இவ்வழகியல் நிகழ்த்துகையாளரும் பார்ப்போரும் நிகழ்த்துகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு ஈடுபாட்டுடன் ஈடுபடும்போது பெற்றுக் கொள்ளும் அழகில் அனுபவமாகும். இவ்வழகியல் அனுபவமே சடங்குடன் மக்களை இணைக்கும் அடிப்படையான அம்சங்களில் ஒன்று. நிகழ்த்துகையைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளர் அவ்வுணர்வு தங்களுக்கும் ஏற்படுவதாக உணர்கின்றனர் (Ibid, P:18). சடங்கை நிகழ்த்துவோருக்கும் நிகழ்த்துகையில் இணைந்துள்ள சமூகத்திற்குமான பிணைப்பை இது ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் வேடர்களினால் நிகழ்த்துகை செய்யப்படும் சடங்குகள் அவர்களின் கலை, கைப்பணி, அழகியல் அம்சங்களை தாங்கிய வடிவங்களாக அமைகின்றன. இத்தன்மைகள் வேடர்களின் சடங்குகளின், சிறப்பாக பழங்குடியினரின் கலைகளின் அடிப்படை யாக கொள்ளப்படத்தக்கன.

## இசை மரபு

வேடர்கள் வனாந்தரக் காடுகளில் வாழ்ந்தாலும் அவர்கள் ஓய்வான நேரங்களில் கவிகளைப் பாடி மகிழ்வுற்று இருந்துள்ளனர். இதனை அவர்களிடம் வழக்கில் உள்ள பல கவிகளைக்கொண்டு அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. வனாந்தரத்தில் பயத்துடன் வாழ்ந்த வேடர்கள் மகிழ்ச்சியுடன் சந்தோசமாக ஆடிப்பாடி இருந்த சந்தர்ப் பங்களாக இந்தக்கவிகளைப் பாடும் சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தன. இப்பாடல்களை தாலாட்டுப் பாடல்கள், காதல் பாடல்கள், சோகத்தை வெளிப்படுத்தும் பாடல்கள், வேட்டை, தேன் பறித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல்கள், குலதெய்வத்திற்கான சடங்கின்போது பாடப்படும் பாடல்கள் என வகைப்படுத்தலாம்.

பெரும்பாலான வேடர்களின் கவிகள் ஒத்திசைவைக் கொண்டதாக அமைந்திருக்கும். நாதம் சிறு தனிப் புள்ளியைச் சார்ந்ததாகும். அனேகமான பாடல்களின் நடை வேகம் அமைந்திருப்பது மத்திய நடைவேகத்திற்கும் உத்தம ''தருத'' நடைவேகத்திற்கும் சற்றுக் குறை வாக இவ்விரண்டுக்கும் இடைப்பட்டதாக விளங்கும். ஒத்திசை வைக்கொண்ட தாள அமைப்புக்கள் மற்றும் நாத அமைப்பைக் கொண்டதாகவே பாடல் முழுவதும் காணப்படும். வேடர்கள் பாடல்களைப் பாடும்போது பாடலில் இடம்பெறும் சொற்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளைக் கருத்திற் கொள்ளாது நினைவுக்கு வரும் சொற்களை ஒன்றாக இணைத்துப் பாடுவதால் பாடல்களிடையே பொருளைத் தேடுவது கடினமானதாக அமையும். அனைத்துப் பாடல்களும் ஒரே ராகத்தைக் கொண்டிருப்பதால் இவ்வாறு சொற்களை மாற்றுவதில் எவ்வித தடையையும் அவர்கள் எதிர்கொள்வதில்லை.

உடும்பு வேட்டைப் பாடல் ஒன்று பின்வருமாறு அமைகின்றது.

*''ஹே பொல தென தெதி நானே தெதிநானே*
*தேன தெதி நானே தெதிநானே*
*கோபிந்து கேலே யமு தென்னா*
*கோயா புச்சா கமு தென்னா*
*கோ அகுமா டிக்கா மான் கஞ்ஞா*

*தேன தெகு நானே தெதிநானே*
*தேன தெதி நானே தெதிநானே''*

இப்பாடலின் பொருள் இவ்வாறு அமைகின்றது : உடும்பு முட்டை யிடும் பருவத்தில் உடும்பு வேட்டையில் போகவேண்டிய பயணம் ''கோபிந்து கெலே யாம்'' என அழைக்கப்படும். இத்தகைய பயணத் திற்கு தயாரான இளம் தம்பதியியரிடையே ஏற்படும் பகிடிப் பேச்சாக இப்பாடல் அமைந்துள்ளது. உடும்பு முட்டையிடும் பருவத்தில் (பங்குனி, சித்திரை மாதங்களில்) நாம் இருவரும் காட்டுக்குச் செல்வோம். உடும்பொன்றைப் பிடித்துச் சுட்டுச் சாப்பிடுவோம். ஆனால் நான் சாப்பிடுவது உடும்பின் ''கொய் அகுமா'' (இனிமையான பாகங்கள்). உனக்கு (மனைவிக்கு) குடல் பகுதியைத் தருகின்றேன் (கழித்து அகற்றப்படும் பாகங்கள்) என கணவன் தனது மனைவியிடம் பகிடி செய்கின்றான். மனைவியைக் கோபப்படுத்தி, பின்னர் அவளைச் சமாதானப்படுத்த இப்பாடலை மறுபடியும் பாடி ஆடுவான்.

இது போன்று காதல் பாடல் ஒன்று இவ்வாறு அமைந்திருந்தது.

*''பாங்கர கம்பன கல் கச்சி*
*ஆங்கர நாட்டுங் நாட்டன்னே*
*சோந்த சொந்த நாட்டுங் நாட்டப துன்னா*
*சோந்த சொந்த நாட்டுங் நாட்டாபோ*
*தானத் பேதத் நாமப துன்னா*
*தானத் பேதத் நாமபோ.....''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பொருள் விளக்கம், பிள்ளையைக் கொஞ்சிக் கொண்டிருக்கும் போது பிள்ளையை ஆடவைத்துப் பாட்டன் பாட்டொன்றைப் பாடுவான். நடனமாடுகையில் விகாரமான தோற்றம் ஏற்படுவதால் ''பங்கர கம்மன கல் கெச்சி'' என்னும் உடலூனமுற்ற நபரைப் போன்றோன். நடனமாடுகின்ற தனது பேரனை பரிகாசத்திற்கு உட்படுத்தும் பாட்டனார் நடனமாடும் முறையைக் காட்டிக் கொடுப்பார். ''நன்றாக நடனமாடுங்கள் பேரனே. நன்றாக ஆடுங்கள். முழங்காலை வளைத்து ஆடுங்கள். உடலை, வயிற்றை வளைத்து ஆடுங்கள், தலையை, முதுகை வளைத்து ஆடுங்கள், ஆடுவதோடு வயிற்றில் பறை சாற்றிக்கொண்டே ஆடுங்கள், இவ்வாறு மெதுவாக நடனமாடிப் போதாது, நன்றாக வேகமாக ஆடுங்கள். (எவ்வாறு கூறியும் நடனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை) இதனால் சற்றுக் கோபத்துடன் பாட்டனார் நீர் ஆடுவதும் உமது தகப்பனின் நடனமே எனக் கூறுவார் (தகப்பன் அழகாக நடனமாடமாட்டார் எனப் பொருள் கொள்ள வேண்டும்).

வேடர்களிடம் வழக்கிலுள்ள தாலாட்டுப் பாடல்கள் தனித்துவமானவையாகும். தாலாட்டுப்பாடல்கள் குழந்தைகள் நித்திரை செய்யும்வரை நீண்டநேரம்பாட வேண்டும். இதற்காக ஒரு வரியை இருமுறை பாடுவதன்மூலம் பாடலை மேலும் நீளமாக்குவர். வேடர்களின் வாழ்வியல் யதார்த்தங்கள் அனைத்தும் தாலாட்டின்மூலம் வெளிப்படுத்தப்படுவது இப்பாடல்களின் சிறப்பாக அமைகின்றது.

*''அப்பி ரோ ரோ பெட்டுனே*
*தொபே தளங் தென் கேனே*
*பெனி லப்புகெட்ட தென் கேனே*
*தொபி நிதி நிதி நிதி பெடுனே''*[10]

பாடலில் தாய் பிள்ளையிடம் கீழ்கண்ட செய்திகளைப் பரிமாறுவாள். மகனே உனது தந்தை தற்போது இருப்பது சேனையில். சற்று நேரத்தில் தேன் பறித்து மகனுக்குத் தேன் கொண்டுவருவார். இல்லையெனில் உடும்பொன்றை அடித்து ஈரலைக் கொண்டு வருவார். சுரக்குடுவையில் நிறைத்து தேன்கொண்டு வருவார். தந்தை வரும்வரை நித்திரை கொள்.

10. தம்பானையில் அமைக்கப்பட்டுள்ள வேடர்களின் கலாசார நிலையத்தில் இருந்து இக்கவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு தாலாட்டுப் பாடல் வேடர்கள், அவர்களின் பிள்ளைகள் நாளாந்தம் உலவித் திரிகின்ற காட்டு வழிகளை நினைவு படுத்தவதாக அமைகின்றது.

*''அப்பி ரோ ரோ பெட்டுனே*
*தொபி நிதி நிதி நிதி பெட்டுனே*
*குல வெல்லா கங்க திகே*
*தொபி நிதி நிதி நிதி பெட்டுனே*
*புச்செல்லா தங்க திகே*
*தொபி நிதி நிதி நிதி பெட்டுனே*
*சேலம்போ கங்க திகே*
*தொபி நிதி நிதி நிதி பெட்டுனே*
*அதுபிட்ட நிதி நிதி பெட்டுனே*
*கொள பிட்ட நிதி நிதி பெட்டுனே*
*கல் ருகுலே நிதி பெட்டுனே*
*பெந்தி ருகுலே நிதி பெட்டுனே*
*தொபி நிதி நிதி நிதி பெட்டுனே*
*தொபெ அப்பா தென் கெனே*
*மெஹி மீரிய தென் கெனே*
*தொபி நாடா நிதி பெட்டுனே*
*அப்பி ரோ ரோ பெட்டுனே''*[11]

வெள்ளைப் பூக்களைக் கொண்ட ஆற்று நெடுவில் நாம் வந்தோம். புஸ் ஆற்று நெடுவில் நாம் வந்தோம். வெண்ணிற மணல் வெளி களைக் கொண்ட மற்றும் நீர் நிறைந்த நீர்க் குழிகள் இருக்கும் நாம் விளையாடிய ஆற்று நெடுவில் நாம் வந்தோம். மகனே இப்போது தங்களுக்கு இப்பெரும் காட்டில் இருக்கும் ஒரு கற்குகையில் இலை, கிளைகளைக்கொண்டு ஒரு அழகான படுக்கை ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இதன் மீது அழகாக நித்திரை கொள்ளவும். இன்னும் சற்று நேரத்தில் உன் தந்தை தேனுடன் வருவார். அழாமல் நித்திரை கொள்வாய்.

தேன் பறித்தல் தொடர்பான கவி ஒன்று பின்வருமாறு அமைகின்றது.

*''ததனத் தந்தன ததிணனே*
*மங் சொந்த படுவக் தெகபிங்*

---

11. மேற்குறிப்பிட்ட இடத்திலிருந்து பெறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மடத் கியாபங் ரங்குரு நேனா*
*எஹெம கியன பாடுவ நேவெப்*
*பல்லே தலாவே புருந்த கோட்டே*
*மங் பெத்தி கணமீயக் தெகபிங்*
*ததனத் தத்தன ததினானே*
*ததனத் தத்தன ததினானே''*[12]

இந்தக் கவி ஒரு சிறுவன் சிறு தேன் கூடு ஒன்றை கண்டு பிடித்த மகிழ்ச்சியில் பாடுவதாக அமைந்துள்ளது. சிறுவர்களைப் பொறுத்த வரை அவர்களுக்கு சாதனைக்குரிய செயற்பாடாக அது அமையும். பல்லெதலாவ பகுதியில் முதிரை மரப் பொந்தில் கட்டப்பட்டுள்ள சிறுதேன் கூடு ஒன்றைக் கண்டு தனது அண்ணனின் மனைவியிடம் அதாவது அவனின் அண்ணியிடம் கூறுவதாக கவி அமைந்துள்ளது. ''அன்புக்குரிய அண்ணியே நான் ஒரு நல்ல பொருளைக் கண்டேன்'' ''இனி என்னிடம் கூறு'' ''பல்லெலாவையில் இருக்கும் ஒரு முதிரை மரப் பொந்தில் சிறு தேனீக் கூடொன்றை நான் கண்டேன்'' என்பதாக கவி அமைந்திருந்தது. இங்கு சிறுவன் மற்றும் அவனின் அண்ணி ஆகிய இருவருக்கும் இடையேயான சம்பாசணையாக கவி புனையப்பட்டுள்ளது.

வேடர்களிடம் வழக்கில் இருந்த இக்கவிமரபு அவர்களின் நடைமுறை வாழ்வியல் அனுபவங்களை எடுத்தியம்புவனவாக அமைந்திருந்தன. அத்துடன் இசைமரபு நடனத்துடன் தொடர்புடையதாக விளங்கும் தன்மையும் இங்கு தொடர்புபடுத்தி நோக்கத்தக்கது. தாலாட்டுப் பாடல் மரபும் வேடர்களிடம் வளர்ச்சியடைந்திருந்தது. குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக வேடுவப் பெண்கள் தாலாட்டுப் பாடல்களைப் பாடுவர்.

வேடர்கள் அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த பல ஆபத்தான சம்பவங்களையும் கவிகளாகப் பாடியுள்ளனர். கீழ் வரும் கவியில் ஒரு பெண் தனது கணவனுக்கு நேர்ந்த ஒரு ஆபத்தான நேர்விலிருந்து தப்பியதை பின்வருமாறு பாடுகின்றாள்,

*''தென் தெதி பொல தென் தெதி நானே தெதினானே*
*கேலிய வெல நெகிலா*

12. மேற்குறிப்பிட்ட இடத்திலிருந்தே இக்கவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுத்த பலாகெல நெகிலா
துடனக் மாடே எரிலா
ஓய் ஓகய ரெ மங் கீலே
தேன தெதி நானே தெதினானே
தேனதெதி நானே தெதினானே''

தனது கணவன் அவள் பல தடவைகள் எச்சரித்தும் கேளாமல் ''கேலிய'' என்னும் கொடியில் ஏறி மரத்தின் கிளை ஒன்றை உடைத்துக் கொண்டு கீழே விழுந்தான். கேலியக் கொடித் தொகுதிக்குக் கீழே சேற்றுக் குழி ஒன்று இருந்ததால் தனது கணவனுக்குப் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. இருந்தும் கீழே விழுந்த கணவனின் முழங்கால்வரை சேற்றில் மூழ்கியிருந்தது. இதைக் கண்ட அவள் இதற்காகத்தான் நான் கூறினேன் கொடியில் ஏறவேண்டாம் என கணவனைப் பார்த்து பேசுகின்றாள். இக்கவி வேடர்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பகரமான சம்பவங்களை சித்திரிப்பதாக அமைந்திருந்தது.

மேற்குறித்த எடுத்துக்காட்டுக்கள் ஊடாக வேடர்களிடம் ஒரு கவி மரபு வளர்ச்சியடைந்திருந்தது என்பதையும் இவை அவர்களின் வாழ்வியல் யதார்த்தங்களைத் தெளிவுபடுத்துவனவாக அமைந்திருந்தன என்பதையும் அறியமுடிகிறது. இக்கவிகள் ஓய்வாக இருக்கும் காலங்களில் பாடப்பட்டதுடன் வாழ்வின் பல்வேறு விடயங்களையும் மீட்டுப்பார்க்கும் தன்மை கொண்டனவாகவும் அமைந்திருந்தன என்றே குறிப்பிட வேண்டும்.

## கலை மற்றும் கைப்பணி மரபு

சமகாலத்தில் பாரம்பரிய வேடர்களின் கலையடையாளங்கள் என்னும் பிரக்ஞையை ஏற்படுத்திக் கொண்டு வியாபார நோக்கத்துடன் சில கலை, கைப்பணிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. மரச் செதுக்கு வேலைகள் குறிப்பாக நோக்கத்தக்கன. புடைப்பாகவும், முழுமையாகச் செதுக்கி உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்களாகவும் இவை அமைந்திருந்தன. கருங்காலி போன்ற மரங்கள் செதுக்கு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. யானை, உடும்பு, மான், முதலை போன்ற விலங்குகளும் மற்றும் கத்தி, வாள், வில், அம்பு போன்ற பொருட்களும் உருவாக்கப்பட்டன. யானைத்தந்தம், கீகிரிதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் விதை போன்றவற்றிலும் சில அலங்காரப் பொருட்களை உருவாக்கினர். மோதிரங்கள், காதணிகள் (தோடு மற்றும் சுரை), மாலைகள், மாலைப் பதக்கம் என்பனவற்றை உருவாக்கினர் (படம்: 14). இவற்றை உருவாக்குவதற்கு கத்தி, உளி, வாள், துளையிடும் கருவி போன்றன பயன்படுத்தப்படுகின்றன. உருவாக்கத்தின்போது சில நவீன சாதனங்களின் பயன்பாடும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பொருட்களை வேடர்கள் அவர்கள் வாழும் பிரதேசங் களை அண்மித்துள்ள வீதிகள், தம்பானையில் அமைந்துள்ள கலாசார மையம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தி விற்பனை செய்கின்றனர். இவை சிறப்பாக உல்லாசப் பயணிகளைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டவையே.

வேடர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதால் பாரம்பரிய கலைகள் பெற்ற முக்கியத்துவத்தை இன்று இழந்துள்ளதுடன் கலையை அவர்களின் பொருளாதார தேவையினை பூர்த்தி செய்வதற்கான ஊடகமாகவும் கையாள்கின்றனர். இருந்தும் சடங்குடன் தொடர்புடைய சில பாரம்பரிய கலை மரபுகள் தொடரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. வாழ்வியல் நெருக்கடிகளும் அடையாள இழப்பும்

இலங்கையின் பூர்விகமானதொரு இனமாக வேடர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் அவர்கள் தனித்துவமான இனத்துவ, பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட ஒரு சமூகமாக விளங்குகின்றனர் என்பதும் இந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இருந்தும் சமகாலத்தில் வேடர்கள் பாரிய மாற்றங்களை எதிர்நோக்கும் இனமாக மாறியுள்ளனர். வேடர்களின் மேல் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள், காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றால் இன்று இலங்கையில் அருகிக்கொண்டு போகும் இனமாக மாறியுள்ளனர். பல நூற்றாண்டுகளைத் தாண்டும் போது வேடர் சமூகம் சிங்களம், தமிழ், முஸ்லிம் சமூகப் பிரிவுகளுக்குள் உள்வாங்கப்படுவதற்கான வாய்புக்களே அதிகம் உள்ளன. வேடர்களின் சமூக, பண்பாட்டு தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் ஏற்படுத்தப்படாமையே இந்த அடையாள இழப்பில் தாக்கம் செலுத்தும் காரணியாகும். அரசாங்கத்தால் வேடர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட சலுகைகளும் வசதிகளும் வேடர்களின் இன அடையாளத்தைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாக அமையவில்லை.

சமூக மாற்றம் தொடர்பாக நெல்சன் எச்.எச்.கிறபேர்ன் (Nelson H. H. Graburn) கருத்துப் பதிவொன்றைச் செய்திருந்தார். ''சமூகங்கள் ஏனைய சமூகங்களுடன் தொடர்புகொள்ளும்போது இறுதியில் உற்பத்திக்கான மூலப் பொருட்கள், நாளாந்த பயன்பாட்டுப் பொருட்கள், சிந்தனைகள் ஆகியனவற்றை ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திற்கு பரிமாறிக் கொள்ளும் நிலை இயல்பாகவே ஏற்படுகின்றது. இரண்டு சமூகங்கள் தொடர்ச்சியாக நீண்டகாலம் தொடர்பில் இருக்குமாயின் அவை வேறுபட்ட பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும்போது பண்பாடு, மற்றும் உற்பத்திக்கான மூலப்பொருட்களில் குறைவான வளர்ச்சியைக் கொண்டுள்ள சமூகங்கள் பெரியளவான மாற்றங்களைப் பெறுகின்றன. மக்கள் அத்தியாவசியச் செயற்பாடுகளை இலகுவாகக் கொண்டு நடத்துவதற்குரிய வழிகளைத் தேடுதல் மக்களின் பொதுவான இயல்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. இதனை சகல மக்கள் குழுக்களிடமும் காணலாம். அதற்கான சிந்தனைகளை விருத்திசெய்து கொள்வர்'' (1976: 10-11). வலிமையுள்ள சமூகத்தின் சிந்தனைகளையும் விடயங்களையும் உள்வாங்கி வலிமையற்ற சமூகம் வலிமைப்படுத்திக் கொள்ள முயற்சிக்கும் என்பது இங்கு மேலெழுந்து நிற்கும் கருத்தாகும். நெல்சனின் இந்தக் கருத்துப் பதிவு சமகாலத்தில் வேடர்களின் வாழ்வியலுக்கு மிகவும் பொருத்தம் உடையதொன்றாகவே உள்ளது. இந்த வலிமைப்படுத்தும் செயற்பாட்டில் வேடர்கள் அடையாளங்களை பாதுகாத்துக்கொண்டு மேல் வருவதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இது வேட சமூகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

வேடர்கள் இன்று எதிர்கொள்ளும் மாற்றங்களுக்கான, அடையாள இழப்பிற்கான காரணங்களைப் பின்வரும் அடிப்படைகளில் நோக்கமுடியும்.

1. அடையாள இழப்பில் முக்கிய தாக்கம் செலுத்தும் காரணி வேடர்கள் காலாகாலமாக வாழ்ந்துவந்த நிலங்களின் அபகரிப்பில் இருந்து ஆரம்பமாகின்றது. பூர்வீகமாக வாழ்ந்து வந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டு வேடர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்திற்கொள்ளாது புதிய நிலங்களில் குடியமர்த்தியதுடன் அவர்கள் புதிதாக குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் புதிய புலம்பெயர்வாளர்களாகவும் மாற்றப்படுகின்றனர். அதாவது வேடர்களின் அனுமதியின்றி அவர்கள் வாழ்ந்துவந்த பூர்வீகமான நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றனர். வேடர்களுக்குப் புதிதாக வழங்கப்படும் நிலம் வேடர்களின் வாழ்வியல் தேவையைப் பூர்த்தி செய்தல், குறித்த நிலத்தில் குடியமர்த்தப்பட்ட வேடர்களின் இருப்பிடத் தேவையைப் பூர்த்தி செய்தல், பாரம்பரிய சமூக பண்பாட்டு மரபுகளை, இனத்துவ அடையாளத்தைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கு பொருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றதாகவும் போதாததாகவும் வாய்ப்புக்களை வழங்காததாகவும் அமைந்திருந்தது. புதிய வாழ்விடங்கள் சிங்கள, தமிழ் சமூகங்களை அண்மித்ததாக அல்லது சூழ அமைந்துள்ளதால் பண்பாட்டு ஊடாட்டம் வேடர்களின் பண்பாட்டு இழப்பிற்கும் புதிய பண்பாட்டின் உள்வாங்கலுக்கும் அடிப்படையாக அமைகின்றது. பண்பாட்டு இழப்புடன் தொடர்புடைய அடையாள இழப்பு என்பது வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

2. பாரம்பரிய வாழ்க்கை முறையினை மேற்கொள்ளப்படுவதற்கு தடை விதிக்கும் அரசாங்கம் புதிய வாழ்க்கைச் சூழலில் அவர்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கான பொருத்தமான வழிகாட்டல்களை வழங்காமை அடுத்துக் குறிப்பிடத்தக்கது. இதனால் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இயற்கை பற்றிய அறிவும், அதில் இருந்து வாழ்வாதாரத்திற்கான உணவைப் பெற்று உண்டு வாழ்வதும் வேடர்களின் வாழ்வின் அடிப்படையாக அமைந்திருந்தன. இதற்கப்பால் அவர்களிடம் பெரிய இலட்சியங்கள் இருக்கவில்லை. புதிய வாழ்க்கைச் சூழலில் வாழ்வை எதிர்கொள்வதற்கான அடிப்படைகள் இன்றி குடியமர்த்தப்பட்டு அரசாங்கத்தின் நிர்வாக பொறிமுறைக்கேற்ப வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இயற்கை வளங்களில் தங்கி வாழ்ந்த வேடர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான உணவீட்டம் என்பது பாரிய சவால் நிறைந்த விடயமாக அமைகின்றது. உணவீட்டம் என்பது பெற்றுண்டு வாழ்வதல்ல, அது உற்பத்தி செய்வது, பணம் கொடுத்து வாங்குவது என்னும் புதிய சித்தாந்தங்களைக் கற்பிதம் செய்கின்றது. இயற்கையை கையாள்வது தண்டனைக்குரிய குற்றமாகவும் அர்த்தப்படுத்தப்படுகின்றது. இங்கு வாழ்வாதாரச் செயற்பாடு பணப் பொருளாதாரத்துடன் தொடர்புடையதொரு செயற்பாடு என்பதை அறிந்துகொள்வதுடன் பணத்தைப் உழைப்பதற்கான எந்தவித பொறிமுறைகளும் தெரியாதவர்களாக தடுமாறுகின்றனர். பணப் பொருளாதாரத்திற்கு பயிற்றுவிக்கப்படாத வேடர்கள் வாழ்வாதாரத்திற்கான பணத்தை பெற்றுக்கொள்வதற்கான வருமான மூலம் இல்லாதிருப்பதால் பொருளாதாரரீதியான நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ரீதியான நெருக்கடியில் இருந்து வெளிவருவதற்காக வேட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் அவர்களின் இயலுமைக்கேற்ற வருமான ஈட்ட மூலங்களைக் கையாள்கின்றனர். அதில் ஒன்றாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்களை நாடிச் செல்கின்றனர். வேடர்களின் வருமான ஈட்டசெயற்தொடர் வேடர்களுக்கு அனுபவமற்ற புதிய மூலமாக அமைந்து விளங்கு வதால் வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காமை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதுபோன்று தொழில் வழங்கப்படுவதாக இளம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும், அவர்கள் அங்கு ஏமாற்றப் பட்டு பாலியல் தொழிலாளர்களாக மாற்றப்படுவதாகவும் குற்றம் சாட்டியிருந்தார் வேடர்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டி ருந்த விவிகா ஸ்ரெகபோன் (http://vedda.org/keerthisinghe.htm). இவ்வாறான செயற்பாடுகள் வேடர்களின் வாழ்க்கையை மோச மாகப் பாதித்தது. காலாதிகாலமாக பேணி வந்த சமூக நியமங்களை மீறுவதாக அமைந்திருந்தது.

3. பணப் பொருளாதாரத்துடன் இணைந்த நவீன வாழ்க்கை முறை புதிய செலவுகள் பலவற்றை உருவாக்கி விடுகின்றது. எடுத்துக்காட்டாக மின்சாரக் கட்டணம், போக்குவரத்துச் செலவு, தொலைபேசிக் கட்டணம், வைத்தியச் செலவு, அலங்காரப் பொருட்களுக்கான கொடுப்பனவு, எரிபொருள் செலவு, தொலைக்காட்சி அலைவரிசைக் கட்டணம் என இந்தச் செலவுகள் விரிவடைந்து செல்கின்றன. மேற்குறிப்பிட்ட சில செலவுகள் கட்டாயமாக்கப்பட்டவையாகவும் அமைந்திருந்தன. இவ்வாறான செலவுகள் நவீன வாழ்வில் இணைந்துள்ள சகல மக்களுக்கும் பொதுவானதாக அமைந்திருந்தாலும் ஏனைய மக்களுக்கு அவற்றை மேற்கொள்வதற்கான வருமான மூலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வேடர்களைப் பொறுத்தவரை உறுதி யான வருமான மூலங்கள் இல்லாது குறித்த செலவுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது. இவை வாழ்வாதாரப் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கின்றது. உழைப்பின்றி செலவு செய்யும் புதிய பொறிமுறைக்குள் வேடர்களை தள்ளி விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புதிதாக அறிமுகமாகிய பண்பாட்டிற்கும் பாரம்பரிய பண்பாட்டுக்கும் இடையேயான முரண்நிலை புதிய சமூகத்தளத்தில் வாழ்வை எதிர்கொள்வது பற்றிய பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. இங்கு இளம் தலைமுறையினருக்கும் புதிய தலைமுறையினருக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகள் முனைப்புப் பெறுகின்றன. இளந்தலைமுறையினர் அரசாங்கத்தின் நியமங்களுக்களுக்கேற்ப வாழ்வினை ஒழுங்குபடுத்த முயற்சிக்கின்றனர். பாடசாலைக் கல்வி, பணப்பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட வாழ்வியல் நோக்கு, புதிய சிந்தனைகளை உள்வாங்கி நடப்புலகின் இயல்புக்கேற்ப வாழ்வை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். முன்னோர்களின் வாழ்வு பற்றிய உணர்வு, முன்னோர்களின் மேலான அக்கறை உடையவர்களாக விளங்கிய போதும் முன்னோர்களின் வாழ்வினைத் தொடர்வதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாதுள்ளது. அதாவது ''வேடன்'' என்னும் அடையாளத்தைத் தாங்கிக்கொண்டு புதிய வாழ்வை இளந்தலைமுறையினரால் வடிவமைக்க முடியாதுள்ளது. ஏனெனில் இளந்தலைமுறையினர் இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றனர், அவர்களுடன் இணைந்து வாழ்கின்றனர். அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பிற்கேற்ப வாழ்க்கையை வடிவமைக்கின்றனர். பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கையைத் திட்டமிடுகின்றனர். இவை புதிய அடையாளங்களை வேடர் சமூகத்தினுள் கொண்டு வந்தது. வேடர்களிடம் புதிதாக அறிமுகமாகிய பண்பாடும், பாரம்பரியப் பண்பாடும் இணைந்ததொரு கலப்புப் பண்பாட்டின் தோற்றம் வேடர்களின் அடையாள இழப்புடன் தொடர்புடையதாக அமைந்திருந்தது.

5. வேடர்களின் பண்பாட்டு இழப்பைத் துரிதப்படுத்துவதாக கலப்புத் திருமணம், மதமாற்றம், பூர்வீக வேட பாசையின் இழப்பு போன்றன அமைந்திருந்தன. இந்தச் செயல் தொடரின் ஊடாக தொடரப்பட்ட நடைமுறைகள் வேடர்களின் அடயாளங்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்தன. இளந்தலைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரில் அனேகமானோர் வேடர் என்னும் அடையாளத்தை தொலைக்கும் நோக்குடையவர்களாக விளங்குகின்றனர். இதனால் வேடர் என்னும் அடையாளத்தைத் தரும் தோற்றப் பொலிவு (ஆடை பண்பாடு, முடியமைப்பு மற்றும் முடி அலங்காரம்) இல்லாமல் செய்யப்பட்டு ஏனைய சமூகத்தினர்போன்று முழுமையாக மாற்றிக் கொள்கின்றனர். அரசாங்கத்தின் கல்விக் கொள்கை கல்வியில் மேம்பாடடைந்த இளைஞர், யுவதிகளை உருவாக்குகின்றது. கல்வி புதிய பொருளாதார ஈட்டத்தில் ஈடுபடுவதற்கான தகுதிப்பாடுகளையும் பெற்றுக் கொடுக்கின்றது. ஏனைய சமூகங்களுடனான கலப்புத் திருமணம், பௌத்த, இந்து மதமாற்றம் என்பவற்றை சமூகத்தொடர்பாடல் ஏற்படுத்துகின்றது. வேடபாசை இனக்குழும மொழியாக அமைவதால் அதனை அவர்களால் சமூகத் தொடர் பாடலுக்காகப் பயன்படுத்த முடியாத நிலையுருவாகின்றது. இதனால் மொழி அடையாளமும் இழக்கப் படுகின்றது. இளந் தலைமுறையினரின் மாற்றத்தை நோக்கிய முன்னெடுப்பின்போது பாரம்பரிய அடையாளத்தைப் பாது காக்கும் வேட்கையுள்ளவர்களாலும் எதிர்கொள்ளும் மாற்றங் களைத் தவிர்க்கமுடியாதுள்ளது. புதிய சமூகத் தொடர்பாடல் மாற்றங்களின் அடிப்படையாக அமைந்திருந்தது.

6. ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் வேடர்களின் அடை யாளங்களை பாரம்பரிய கலை, கைப்பணிப் பொருட்களை பாதிப்பதாக அமைந்திருந்தது. கலை, கைப்பணி மரபு வேடர் களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருந்ததால் புதிய வாழ்க்கைச் சூழல் கலை, கைப்பணிச் செயற்பாடுகளுக்கு இருந்த உயிர்ப்பைக் குறைக்கின்றது அல்லது தேவையற்றதாக்குகின்றது. இதனால் வேடர்களின் வாழ்வுடன் வாழ்வின் ஒரு பகுதியான சடங்குடன் தொடர்புடையதாகப் பேணப்பட்ட கலை, கைப்பணி மரபுகள் அழிவடைகின்றன அல்லது வழக் கொழிந்து போகின்றன. பாரம்பரிய கலை, கைப்பணி மரபுகளில் தேர்ச்சியுள்ளோர் எண்ணிக்கையும் குறைவடைகின்றது.

7. புதிய வாழ்க்கைச் சூழலை வேடர்களால் உள்வாங்க முடியாத போதும் அவர்களின் அடிப்படையான வாழ்வாதாரப் பிரச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைகளைத் தீர்க்க வேண்டியதாகின்றது. அதனைத் தீர்ப்பது பணத்தை சம்பாதித்தலுடன் தொடர்புடையதாக இருந்தது. பணத்தைச் சம்பாதிப்பதற்கான எதுவித மார்க்கமும் தெரியாத வேடர்கள் முதல் நடவடிக்கையாக அவர்களின் அடையாளங்களை பொருளாதார ஈட்டத்திற்கான மூலமாக கையாள முயற்சிக் கின்றனர். இவ்வடிப்படையில் உல்லாசப் பயணிகள், மானிட வியலாளர்கள், ஆய்வாளர்களின் கவனத்திற்குரியனவாக வேடர் களின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் அமைந்துள்ளதால் பாரம்பரிய பண்பாட்டம்சங்களை பொருளாதார ஈட்டத்துக்கு உரியதாக மாற்றியமைக்க வேடசமூகம் முன்வருகின்றது. இதனால் உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க பொருட்களின் உருவாக்கம், ஏனைய சமூகத்தினரின் நுகர்வுக்குரியதாகத் தயாராகும் வேடர் களின் மருத்துவக் குணங்கொண்ட பொருட்கள், பண்பாட்டு உணவுப் பொருட்கள் என்பன விற்பனை மனோபாவத்துடன் தயாராகின்றன. சமகால உலகில் வேடர்களின் இருப்பைத் தங்க வைத்துக் கொள்வதற்காக இவை உருவாக்கப்படுகின்றன. வாழ் வாதாரத்திற்கான பொருளாதாரத்தை ஈட்ட முடியாத வேடர்கள் அடையாளங்களை விற்பனைப் பொருளாக்கிய செயற்பாடாக இவை அமைகின்றன (படம்: 10).

வேடர்கள் அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறைக்குத் திரும்பிச் செல்வதென்பது இனிவரும் காலங்களில் சாத்தியமற்றது. காலத்திற் குக் காலம் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப சமூகங்கள் வாழ்க்கை ஒழுங்கை மறுசீரமைப்பது பொது நியதியாக உள்ளது. அதாவது எதிர்கால வாழ்வை எதிர்கொள்வதற்கேற்ப நிகழ்காலத்தில் நடந்தேறும் மாற்றங்களை உள்வாங்கி வாழ்கை ஒழுங்கை மறுசீரமைக்கின்றனர். காலங்காலமாக கடைப்பிடித்துவந்த வாழ்வியல் நடைமுறைகளுடன் புதிய விடயங்களை இணைத்துக் கொள்வதும் அப்போது சமூகங்க ளுக்கே உரிய தனித்துவமான அடையாளங்கள் புதிய வாழ் ஒழுங்கிற் கேற்ப முன்னெடுக்கப்படுவதும் மாற்றங்களை எதிர்கொள்ளும் சமூகங் களில் நடந்தேறுகின்றது. மாற்றங்களை எதிர்கொள்ளாது பாரம்பரிய அடையாளங்களை மாற்றமின்றித் தொடரும் சமூகம் என ஒன்றை சமகாலத்தில் இனங்காண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட சமூகம் போன்று உலகெங்கிலும் வாழும் பழங்குடி சமூகத்தினர் புதிய வாழ்வியல் ஒழுங்கிற்கேற்ப பாரம்பரிய வாழ்வினை மறுசீரமைக்கும்போது மாற்றங்களை உள்வாங்கியுள்ளனர். மறுசீரமைப்புச் செயற்பாட்டின்போது அடையாள இழப்பும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. இருந்தும் அடையாளங்களைப் பாது காப்பதற்காக பழங்குடி சமூகத்தினர் ஒன்று திரண்டு குரல் கொடுத்து வருவதுடன், அதற்கான ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். இந்தச் செயற்பாட்டில் இலங்கையில் உள்ள வேடர்களும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. அடையாளத்தை பாதுகாப்பதற்காக அவர்கள் எடுத்த பிரயத்தனத்தின் விளைவாகவே தம்பானையில் அவர்களுக்கான கலாசார மையம் அமைக்கப்பட்டதும் அப்பிரதேசத்தில் பாரம்பரிய வாழ்வினைத் தொடர்வதற்கான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் அமைந்திருந்தது. இது வேட சமூகம் அடையாளங்களைப் பாதுகாப்பதில் எடுத்த பிரயத்தனங்களையும் அதில் அடைந்த வெற்றியின் ஒரு பகுதியையும் சுட்டி நிற்கின்றது.

ஒரு சமூகம் அதன் அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் அந்தச் சமூகத்தால் காலங்காலமாக கடைப்பிடித்துவரும் பண்பாட்டு அம்சங்கள், பழக்க வழக்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சடங்குகள், வழிபாட்டு முறை, குலதெய்வங்கள், மொழி, உணவு, ஆடைப்பண்பாடு, உடற்தோற்றப் பாணி போன்றன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. வேடர்களைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட அடையாளங்களை படிப்படியாக இழந்துகொண்டு வருகின்றனர். இந்த அடையாள இழப்பில் வேடர்கள் அதிகாரம் அற்ற சமூகமாகவுள்ளதும், நாட்டில் வாழும் ஏனைய மக்கள் தொகையினருடன் ஒப்பிடும்போது சிறுபான்மையினராக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சிறுபான்மை இனமாக விளங்குவதால் அரசியல்ரீதியாக வேடர்களின் குரல் அழுத்த மற்றதாக உள்ளது. அத்துடன் அரசியல்ரீதியாக வேடர்களை அணி திரட்டுவதற்கு இன்றுவரை முயற்சிக்கவில்லை. அதற்கு வேடர்கள் நாட்டில் வாழும் மக்கள் தொகையில் சிறு வீதமாக அமைந்துள்ளதும் ஒரு காரணமாக அமையலாம்.

வேடர்களின் அடையாள இழப்பில் முக்கிய தாக்கம் செலுத்தும் காரணியாக அவர்கள் சிங்கள, தமிழ் இனங்களால் உள்வாங்கப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைக் குறிப்பிடலாம். இதனை உறுஞ்சப்படுவது என்றும் குறிப்பிடலாம். இதனால் வேடர்கள் சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும் அடையாளப் படுத்தப்படுகின்றனர். சிங்கள, தமிழ் மக்களின் பண்பாட்டிற்கும் வேடர் களின் பண்பாடுகளுக்கும் இடையே இருக்கும் ஒருமைப்பாடான தன்மைகள் வேடர்களின் அடையாள இழப்பை துரிதப்படுத்தும் காரணி யாக அமைகின்றது. வேடர்கள் சிங்களவர், தமிழர்களின் தோற்றப் பொலிவைக் கொண்டவர்கள். முடியமைப்பு, உடலின் வர்ணம், உயரம், உடலின் தோற்ற அமைப்பு, முகத்தோற்றம் போன்ற விடயங்களில் இதனை அடையாளப்படுத்தலாம். அத்துடன் நடத்தை சார்ந்தும் இவ்விரு இனங்களுடன் ஒத்துப் போகக்கூடியவர்களாக உள்ளனர். வேடர்களின் பூர்வீகம் தொடர்பாகக் குறிப்பிடும் ஆய்வாளர்கள் ஆரிய, திராவிட இனங்களுடன் தொடர்புடைய இனமாக வேடரைக் குறிப்பிடுகின்றனர். அது போன்றே இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் இனங்கள் ஆரிய, திராவிட இனவழித் தோன்றலாகக் கருதப்படும் நிலையில் வேடர்களும் தொடர்புபடுத்தப்படுகின்றனர். வேடர்களின் மரபணு சார்ந்து மேற்கொள்ளும் ஆய்வுகள் இதனை உறுதிப்படுத்தும்.

இவ்வாறான காரணிகள் சிங்கள, தமிழ் இனங்களினால் வேடர்கள் உள்வாங்கப்படுவதில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவ்விடத்தில் இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மை இனக் குழுமமான பறங்கியர் பற்றிய பதிவு மூலம் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்கு ஆய்வாளர் முயற்சிக்கின்றார். இலங்கையில் பறங்கியர் இன்றுவரை தனித்துவமான இனமாக வாழ்ந்து கொண்டி ருக்கின்றனர். பறங்கியர் இலங்கையினை ஆக்கிரமிப்புச் செய்து ஆட்சிபுரிந்த போத்துக்கீசரின் வழித் தோன்றல்களாவர். தாய்மொழியை பேசுவதற்கோ பண்பாட்டு மரபுகளைப் பேணுவதற்கோ உரிய வெளி வேடர்களைப் போன்று பறங்கியருக்கும் முழுமையாகக் கிடைக்க வில்லை. இருந்தும் அவர்களின் சமய வழிபாடு, சடங்குகள், சமூக நடைமுறைகள், ஆடைப்பண்பாடு, உணவுப் பழக்கம் என்பவற்றை இன்றுவரை தனித்துவமாகப் பேணியும் பாதுகாத்தும் வருகின்றனர். இதில் முதன்மையாகத் தாக்கம் செலுத்தும் காரணியாக அமைவது பறங்கியர் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வேறுபட்ட மரபணுசார்ந்த (Genetic group) இனக்குழுமமாக விளங்குவதாகும். இவர்களின் பாரம்பரிய பண்பாடும் ஐரோப்பிய பண்பாட்டினை மூலமாகக் கொண்டது. பறங்கியரைச் சார்ந்துவாழும் இனங்களுடனான (சிங்களவர், தமிழர்) கலப்புத் திருமணம் போன்ற ஒரு சில சம்பங்கள் இடம்பெற்றாலும் பறங்கியருக்குரிய அடையாளங்க ளைப் பாதுகாக்கும் வேட்கையுடன் இன்றுவரை வாழ்ந்துவருவதால் இனத்தனித்துவத்துடன் வாழ்கின்றனர்.

பறங்கியர் பற்றிய இந்த எடுத்துக்காட்டு சிங்கள, தமிழ் சமூகங்க ளுடன் வேடர்களுக்கு இருக்கும் இனத்துவரீதியான தொடர்புகளே வேடர்களின் பண்பாட்டு இழப்பில் முக்கிய தாக்கம் செலுத்துகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

## முடிவுரை

வேடர்களுக்கு வெளி சமூகத்தினருடனான தொடர்புகள், அரச அங்கீகாரம் உள்ள மொழி மூலமான கல்வி, தாய்மொழிக்கு மேலதிக மாக அவர்கள் மேல் திணிக்கப்பட்ட மொழிமூலம் ஏற்படுத்தப்பட்ட எழுத்தறிவுத் திறன் விருத்தி, பிரயாண அனுபவம், நவீன ஊடகங்கள் ஆகியன பெரியளவிலான அனுபவத்தை வழங்குவதுடன் சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனால் பாரம்பரிய வாழ்க்கை முறையினை மீறி புதிய வாழ்க்கைச் சூழலுக்குள் நுழைவதற்கு இளந்தலைமுறையினர் தயாராக, மூத்த உறுப்பினர்கள் கடந்த கால வாழ்வு பற்றிய ஏக்கங்களுடன் புதிய வாழ்வை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் சமூகத்தில் காணப்படும் பாரம்பரிய மொழி, அறிவியல், வைத்தியம், உணவுப் பழக்கம் ஆகியவற்றை இழந்துகொண்டிருக்கின்றோம் என்னும் ஏக்க உணர்வுடன் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இருந்தும் அவர்களால் பழைய வாழ்வியல் சூழலுக்குள் மீண்டும் செல்லமுடியாதுள்ளது. ஏனெனில் அவர்களின் வாழ்க்கையில் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட புதிய நிர்வாக முறைமைகள் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. சமூக மாற்றம் காரணமாக மூதாதையரின் வாழ்வு பற்றிய அனுபவங்கள் படிப்படியாக இளந்தலைமுறையினருக்கு இல்லாமல் போவதுடன் புதிய வாழ்க்கை ஒழுங்குக்குப் பயிற்றப்பட்டவர்களாகவும் மாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். அரசாங்கம் இதில் கூடுதலாகப் பங்காற்றியது. அதாவது கவனிப்பாரற்று சுதந்திரமாகச் செயற்பட்ட அவர்களின் சிந்தனைகள், வாழ்வியல் நியமங்கள் ஆகியன படிப்படியாக அவர்களை அறியாமலே அழிக்கப்பட்டன.

ஏனைய சமூக உறுப்பினர்களில் இருந்து அவர்களை தனித்து அடையாளப்படுத்தும் இனத்துவ அடையாளங்களைக் கைவிட்டு பொது அடையாளங்களைத் தாங்கிக் கொள்வதற்கு இளந்தலைமுறை யினர் தயாராக உள்ளனர். இருந்தும் அவர்களின் சமூகத்தில் வாழும் மூத்த உறுப்பினர்களால் பாரம்பரிய மரபுகளின் சில அடிப்படைகள் எடுத்துக்காட்டாக வைத்தியம், உணவுப் பழக்கம் போன்றன தொடரப் படுகின்றன. இம்மாற்றங்களுக்கான அடிப்படையாக வேடர்களின் சிந்தனைகள், மரபுகள், கலைகள் புதிய வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமற்றதென புறந்தள்ளும் நோக்குடன் தொடர்புடையனவாக அமைந்திருந்தன. இனத்துவ அடையாளங்கள் இல்லாமல் செய்யப்படும்போது வேடர்கள் இலங்கையில் வாழும் தேசிய இனங் களில் ஒன்றுக்குள் உள்ளீர்க்கப்படும் நிலைமையை உருவாக்கும். இது எதிர்காலத்தில் வேடர் என ஒரு இனக்குழுமம் இல்லாமல் அழிந்துபோவதற்கான அடிப்படைகளை உருவாக்கும். வேடர்களை இலங்கையில் வாழும் தேசிய இனங்களில் ஒன்றாக அங்கீகரித்து அவர்களின் அடையாளங்களுடன் வாழ்வதற்கு அரசாங்கம் முழுமை யான அங்கீகாரத்தை வழங்காமை வேடர்களின் அடையாள இழப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அரச விவகாரங்களில் பலம் பொருந்திய தீர்மானிக்கும் சக்தியாக வேடர்கள் இருந்திருப்பார்களாயின் வேடர்களின் அபிலாசைகள் தேசிய அரசியல் கொள்கைகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஆட்சியதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்கள் எவற்றிக்கும் அவற்றின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்வதற்காக வேடர்களிடம் தங்கியிருக்கவேண்டிய தேவைப்பாடு இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL




படம் 01 : வேடர்களின் கலாசார நிலையம், தம்பானை, மகியங்கனை



படம் 02 : வேடர்களின் தலைவருடன் ஆய்வாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 03 : தம்பானையில் ஒரு வேடருடன் ஆய்வாளரும் அவரின் உத வியாளரும் உரையாடுதல்



படம் 04 : முறுத்தானைப் பிரதேச வேடுவத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 05 : முறுத்தானையில் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுச் சடங்கும், அங்கு உயரமாக நடப்பட்டன கப்பல் மரமும்



படம் 06 : சடங்கு நிகழ்வுகள் பூர்த்தியாகி சுமார் மூன்று மாதத்தின் பின்னர் சடங்கு நடைபெற்ற இடம், முறுத்தானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 07 : பாரம்பரிய முறையில் அமைக்கப்பட்ட வேடுவக் குடியிருப்பு, தம்பானை.



படம் - 08 : மாந்திரிக ரீதியான வேடர்களின் வைத்தியச் செயற்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் - 09 : வேடர்களின் குகையோவியம். சிலிக்மக் அவர்களின் ஆய்விலிருந்து பெறப்பட்டது.



படம் - 10 : தம்பானையில் வேடர்களின் உணவு மற்றும் ஏனைய பொருட்களின் விற்பனை நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 11 :வேடர்கள் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டப் பொருட்கள். சிலிக்மக் அவர்களின் ஆய்விலிருந்து பெறப்பட்டது.



படம் 12 :''கடுவ'' என்னும் கலையம்சம் கொண்ட சடங்குப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 13 :சேடங்குடன் தொடர்புடைய பொருட்களின் உருவாக்கச் செயல் தொடர். ஒரு இளைஞன் உருவாக்கல் நுட்பங்களை அவதானித்தல்



படம் 14 : தம்பானையில் வேடர் ஒருவர் கைப்பணிப் பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய நிலையில்.

3 1 DEC 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 15 : தம்பானையில் வேடர்களின் கலாசார நிலையத்தில் வரையப்பட்டுள்ள வேடர்களின் பாரம்பரிய ஓவியத்தின் பிரதியாக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

### நூல்கள்

எட்கர் தர்ஸ்டன், (2017) *தமிழகத் தொல் குடிகள்,* தொகுப்பு பக்தவத்சல பாரதி, புத்தாக்கம் 631310: அடையாளம்.

கிருஷ்ணராஜா,சோ., (2010) *பண்பாடு : சமூக மெய்யியல் நோக்கு,* கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

குகபாலன், கா., (2000) *இலங்கையில் பழங்குடிகள் : வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு,* ஒலுவில்: சமூகவிஞ்ஞானத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

சண்முகலிங்கன், என்., (2014) இலங்கை-இந்திய மானிடவியல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்.

சந்திராதேவி,த., (2019) *அளிக்கம்பை வனக்குறவர்களின் சமூக பண்பாட்டு மொழி வழக்காறுகள்,* மட்டக்களப்பு - சுதந்திர ஆய்வுவட்டம்.

பக்தவத்சலபாரதி, (2003) *பண்பாட்டு மானிடவியல்,* சிதம்பரம் - 608001: மெய்யப்பன் பதிப்பகம்.

................(2017) *தமிழகப் பழங்குடிகள்,* புத்தாக்கம் 631310: அடையாளம்.

பத்மபாரதி, ச., (2004) *நரிக்குறவர் இனவரைவியல்,* சென்னை, தமிழினி.

பிரேம்குமார், இரத்தினசபாபதி (இணையாசிரியர்), (2020) *கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்,* கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

புஷ்பரட்ணம்,ப., (2017) *இலங்கையில் தமிழர் : ஒரு சுருக்க வரலாறு,* சுவிற்சர்லாந்து: தமிழ்க் கல்விச்சேவை.

முத்துமோகன்,ந., (2011) *தமிழில் அடையாள அரசியலின் இயங்கியல்,* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

மௌனகுரு,சி., (1998) *மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,* மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு.

ரம்புக்வெல்ல, சூலனி, (2018), *பதுளை மாவட்ட மரபுரிமைகளைப் பார்வையிடுவோம்,* கொழும்பு : மத்திய கலாசார நிதியம்.

ஜார்ஜ் தாம்சன், (2017) *மனித சாரம்,* தமிழில் எஸ்.வி.ராஜதுரை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயகரன்,சு.கி.,(2016) *மூதாதையரைத் தேடி...,* நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம்.

ஜெயவர்த்தனா, குமாரி., (2015) *அநாமதேயங்களாக இருந்தோர் அறியப் பட்டவர்களானமை : இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவ வகுப்பின் தோற்றம்,* கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம் மற்றும் குமரன் புத்தக இல்லம்.

Chilisa, Bagele., (2012) *Indigenous Research Methodologies,* Los Angeles – America: SAGE Publication, Inc.

Claire Smith, Graeme K. Ward, (2000) *Indigenous Cultures in an Interconnected World,* Australia: Allen & Unwin.

Fischer-Lichte, Erika., (2008) *The Transformative Power of Perfomance : A New Aesthetics,* London & New York: Routledge, Taylor & Francis Group.

Leuthold, Steven, (1998) *Indigenous Aesthetics: Native Art, Media and Identity,* United State of America: University of Texas Press.

.........................., (2011) *Cross-Cultural Issues in Art: Frame for Understanding,* New york: Routledge.

Morphy, Howard, & Perkins, Morgan (Ed), (2006) *The Anthropology of Art: A Reader,* USA: Blackwell Publishing Ltd.

Morphy, Howard., (2013) *Aboriginal Art,* London: Phaidon Press Limited, Regent's Wharf.

Nelson H. H. Graburn (Ed), (1976) *Ethnic and Tourist Arts: Cultural Expressions from The Fourth World,* California: University of California Press, Berkeley and Los Angeles.

Ohale, Christine Nwakego., (2003) *From Ritual To Art: The Aesthtics and Cultural Relevance Igbo Datire,* New York: University press of America.

Shanmugalingan, N., (2001) *The cult of Murugan in Eastern Sri Lanka,* Jaffna : Nagalingam Noolalayam.

Seligmann,C,G.,(1911) The Veddas, Cambridge : University Press.

The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, (2015) Sri Lanka: the Parliament Secretariat, Department of Government Printing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wright,Robin.M., (2013) "Indigenous Religious Traditions of the World", Religions of the World: A Cultural Introduction to the Making of Meaning, Lawrence E. Sullivan, ed, Fortress Press

## இணையதளக் கட்டுரைகள்

https://www.nationsonline.org/ oneworld/ third_world_ countries.htm, 21.08.2019.

https://smarthistory.org/malangan/, 28.09.2019.

https://www.youtube.com/watch?v=lQrjEDNwQUU, 28.09.2019.

https://en.wikipedia.org/wiki/Vedda, 09.10.2019.

https://en.wikipedia.org/wiki/Bark_painting, 18.12.2018.

https://www.encyclopedia.com/places/asia/sri-lankan-political-geography/vedda, 27.10.2019.

http://kataragama.org/research/wanniyalaeto.htm, 08.04.2020.

http://btoptions.lk/serendib/article.p›?issue=9&id=196, 08.04.2020.

http://vedda.org/keerthisinghe.htm, 08.04.2020.

https://www.encyclopedia.com/places/asia/sri-lankan-political-geography/vedda, 10.04.2020.

https://uit.academia.edu/ WivecaStegeborn/CurriculumVitae, 11.04.2020.

## நேர்காணல்கள்

1. அப்புகாமி, சின்னத்தம்பி, வேடர் சமூகம், வேடர்களின் பரம்பரைத் தொழில் (வேட்டையாடல், தேன் எடுத்தல், மீன் பிடித்தல், சேனைப்பயிர் செய்கை), வயது 75, படிக்கவில்லை, ஆலங்குலம், 11.08.2018.

2. ஊர்வரிக்கே வன்னிலா எத்தோ (Uru Warige Wannila Aththo), வேட்டுவத் தலைவர், வயது 72, தம்பானை, மகியங்கனை, 07.11.2019.

3. கந்தப்பு, சின்னத்தம்பி, வேடர் சமூகம், வேடர்களின் பரம்பரைத் தொழில், வயது 81, படிக்கவில்லை, முறுத்தானை, 11.08.2018.

4. கலைச்செல்வன், யோ., அதிபர் : முறுத்தானை, வயது 37, க.பொ.த. (உ/த), கிரான், 21.06.2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குணபண்டிய ஊர்வரிக்கே, (Gunabandiya Uruwarige), வேடர் சமூகம், வயது 50, தம்பானை, மகியங்கனை, 07.11.2019.

6. சுட்டா, சுட்டா, வேடர் சமூகம், வயது 22, தம்பானை, மகியங்கனை, 07.11.2019.

7. சுதுவண்டா களுவா, வேடர் சமூகம், வயது 42, தம்பானை, மகியங்கனை, 07.11.2019.

8. செல்லமணி, சீனியன், வேடர் சமூகம், வயது 50, மீன்பிடித்தல், காட்டுத் தொழில், குமார தெய்வச் சடங்கிற்கான கடுவ, நாகம் என்னும் பொருட்கள் உருவாக்குபவர், முறுத்தானை, 11.10.2019.

9. செல்வம், சின்னத்தம்பி, வேடர் சமூகம், வயது 68, கொட்டு உருவாக்கும் திறன் உடையவர், கூலி வேலை, சேனைப்பயிர்ச் செய்கை, காட்டுத் தொழில், படிக்கவில்லை, முறுத்தானை, 21.10.2019.

10. மேனகா, செல்லமணியம், வேடர் சமூகம், வீட்டு வேலை, வயது 27, முறுத்தானை, 18.06.2019.

11. வண்டையா, சின்னத்தம்பி, வேடர் சமூகம், முறுத்தானை குமாரர்தெய்வ சடங்கை நிகழ்த்தும் கப்புகன், வயது 75, படிக்கவில்லை, முறுத்தானை, 18.06.2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டி


அம்புப் பேயாட்டம் 40
அம்பனை கோத்திரம் 16
அலிக்கம்பை 49
அழகியல் 72, 73, 76, 77, 78,
அழகியல் உணர்வு 72, 76
அடையாள அரசியல் 2
அடையாள இழப்பு 2, 87
அனுராதபுர வேடர் 1
ஆரியர் 25
ஆவி 37, 38, 65
ஆவியுலகக் கோட்பாடு 40
ஆடைப்பண்பாடு 92, 93
இயற்கை விவசாயம் 61
இயற்கை வர்ணங்கள் 69
இந்தோ - ஈரானியன் மொழி 28
இந்து - ஆரியர்கள் 26
இந்து - ஐரோப்பிய 27, 28
இசைப் பாடல்கள் 68
இசை மரபு 78
இறந்த ஆத்மாக்கள் 38
இனக்குழுமம் 12, 95
இனத்துவ அடையாளங்கள் 95
எலு 26
எமில் தர்க்கைம் 34
என்.சண்முகலிங்கன் 42
எரிக் பிஸ்ச லிட்ச் 77
உருமாற்றீட்டுச் சக்தி 77
உருவ வழிபாடு 35
உல்லாசப் பயணிகள் 91
உணவுப் பழக்கம் 93, 94, 95
உணவும் உணவீட்டமும் 54
உனாபான கோத்திரம் 15
உத்தியாக்கள் 39
ஊரு கோத்திரம் 15
ஊருவரிக்கே வன்னிலா எத்தோ 23
ஊருவரிக்கே வன்னிலாத்தன் 23, 24
ஊருவரிக்கே திசகாமி 23
ஓவியம் 69, 70
கப்புகன் 36, 37, 41, 108
கலப்புத் திருமணம் 52, 89, 90, 94
கப்பல் மரம் 36, 75
கவிகள் 69, 78
கடுவ 72, 74, 105, 108
கலை 3, 24, 53, 67, 68, 69, 72, 74, 76, 78, 83, 84, 90, 106
கலாசார மையம் 7, 13, 84, 92
காதல் பாடல்கள் 78
காலனித்துவ அரசு 7
கரையோர வேடர் 1
கதிர்காமத் திருத்தலம் 42
கிரி அம்மா 39
குமாரர் 35, 42
குமார தெய்வச் சடங்கு 35
குலமரபுத் துருவம் 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவேனி 5
குடும்பம் 18, 28
குறவர் 32
குகை வேடர் 1
குகை ஓவியங்கள் 69
குலதெய்வங்கள் 92
கெனவெட்ட வேடர்கள் 71
கைப்பணி மரபு 67, 83, 90
கொட்டு 36, 40, 41, 75, 76, 108
சமய வழிபாடு 93
ச.பத்மபாரதி 33
சிலிக்மன் 25, 26, 70
சடங்கு வழிபாடு 35, 36, 46, 53, 72
சடங்குகள் 14, 17, 34, 35, 36, 43, 44, 45, 46, 47, 49, 52, 53, 75, 78, 92, 93
சடங்குக் கலை 72
சமூக நடைமுறைகள் 93
சமூக அமைப்பு 15
சிங்கள மொழி 27, 28, 29, 31, 38
சிட்டல வன்னிய வேடர்கள் 71
சுற்றுச்சூழல் ஒழுக்கம் 10
சு.கி.ஜெயகரன் 4
சின்னத்தம்பி வண்டையா 23
செஞ்சு இனத்தினர் 27
சொர்ணாலி 73
தலா கோத்திரம் 15
தலைவர் திஸகாமி 13
தலைமைத்துவம் 21, 22, 23
தாலாட்டுப் பாடல்கள் 78, 80
திருமணச் சடங்கு 49
திராவிடர் 25
தெலுங்கு மொழி 32
தேன் எடுத்தல் 16, 45, 54, 55, 58, 108
நபுடன் கோத்திரம் 15
நந்ததேவ விஜயசேகர 5
நாச்சி 39
நரிக்குறவரின் மொழி 33
ந.முத்துமோகன் 2
நிகழ்த்துகையின் அழகியல் 76, 77
நெல்சன் எச்.எச்.கிறபேர்ன் 85
பருவமடைதல் சடங்கு 47
ப.புஷ்பரட்ணம் 6
பழங்குடியினர் 1, 12, 33, 67
பழங்குடி மக்கள் 14, 32
பாப் எல் மண்டெப் 4
பாம்புப் பெட்டி 51
பாறை ஓவியங்கள் 70
பறங்கியர் 32, 93, 94
பாரம்பரிய வாழ்க்கைமுறை 7
பாரம்பரிய கலைகள் 84
பண்பாட்டு அம்சங்கள் 91, 92
பண்பாட்டு அடையாளம் 9
பக்தவத்சலபாரதி 22, 33, 38, 106
பதிவுத் திருமணம் 19, 52
புனித நீராடல் 48
பூசாரி 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய் 36, 64, 65
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா 24
பேராசிரியர் S.U.தெரனியகல 4
பொருளாதாரம் 21
போர்த்துக்கல் மொழி 32
மகாவம்சம் 4, 5
மகாவலி அபிவிருத்தித் திட்டம் 7
மட்பாண்டப் பாத்திரங்கள் 71
மண்டூர் கந்தசுவாமி 42
மதகுரு 16, 37, 64
மதமாற்றம் 89, 90
மந்திரங்கள் 40, 42, 43, 45
மரச் செதுக்கு வேலைகள் 83
மரணச் சடங்கு 52
மருத்துவர் 16
மருத்துவிச்சி முறை 66
மலையாளம் 26
மலை வேடர் 1
மாதுருஓயா பூங்காத் திட்டம் 8
மாந்திரிகம் 43
மீன் பிடித்தல் 54, 108
முண்டா மொழி 26
முருகன் 36, 41, 42
முருகன் - வள்ளி 42
மெரிட் ரூலன் 28
மைபோட்டுப் பார்த்தல் 64
மொரான கோத்திரம் 16
ரணசிங்கப் பிரேமதாச 13
ரொபேர்ட் நொக்ஸ் 5
யக்ஷகோத்திரம் 15
வழிபாட்டிடங்கள் 36
வழிபாட்டு முறை 43, 46, 92
வள்ளியம்மன் 44
வன்னியா லஎடோ 3
வாவரா கிறைம்ஸ் 28
வாழ்விடம் 63
வாழ்வியல் கட்டடக்கலை 63
விஜயன் 4, 6
வீட்டுத் தலைவர் 20
வேட்டையாடுதல் 16, 20, 54, 55, 56, 58
வேடத் தெய்வங்கள் 36
வேட்டையாடும் கலாசாரம் 21
வேட பாசை 25, 26
வேடர் நலன்புரிக் குழு 12
வேடர்கள் 1-3, 5- 12, 14- 21, 23, 25, 27, 29, 30-33, 35- 44, 50, 52-56, 58- 69, 71, 75-78, 80, 82-87, 91-93, 95
வைத்தியம் 17, 64, 66, 94, 95
ஜேம்ஸ் வுறோ 18
ஜார்ஜ் தாம்சன் 43, 106
Dr. விவிகா ஸ்ரெகபோன் 14, 42, 88
M.W. சுகதபால டி சில்வா 26

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசனநூலகம்
31 DEC 2020
மாநகர
யாழ்ப்பாணம்

281040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேடர் : வாழ்வியலும் மாற்றங்களும்

## வடிவேல் இன்பமோகன்

உலகப் பண்பாடுகளில் பூர்வீக சமூகங்கள் எதிர்கொள்ளும் அடையாளம் சார்ந்த பிரச்சி னைகள் இன்றைய மானிடவியல், இனவரைவியல் ஆய்வுப்புலங்களில் முக்கிய கவனம் பெறுவன. இத்தகைய ஒரு சூழமைவில் கலாநிதி வ.இன்பமோகனின் 'இலங்கையில் வேடர் வாழ்வியலும் மாற்றங்களும்' நூலின் வரவு மகிழ்ச்சி தருகின்றது.

இலங்கையின் மேலாண்மை அரசியல், பண்பாட்டுமயமாக்க அலைகளிடையே வேடர்களின் வாழ்வியல் எதிர்கொள்ளும் மாற்றங்களை, தனித்துவம் சார்ந்த சவால்களை இன்பமோகனின் இந்நூல் அழகாய் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதுநாள்வரை வேடர்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட முன் ஆய்வுகளின் தரிசனத்துடன் முறையியல் வழிப்பட்ட, இன்பமோகனின் நேரடியான கள ஆய்வுத் தேடலின் பயனாய் இந்நூல் கைவசமாகியுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான இன்பமோகனின் படிமலர்ச்சியினை அண்மையிலும் சேய்மையிலும் நயந்து வந்திருக்கின்றேன். துறைகளுக்கிடையிலான சுவர்களைத்தாண்டிய பல்துறை இணை நோக்கும் (Inter Disciplinary Approach), துறைகளை ஊடறுத்த (Transdisciplinary) நுண்ணிய கருத்தாக்கங்களும் எங்கள் சமூக-பண்பாட்டியல் ஆய்வுப்புலங்களைச் செழுமைப்படுத்துகின்ற வேளை இது. கிழக்கிலங்கைக் கோயில் சடங்குகளின் அழகியலை ஆராயும் கலாநிதிப்பட்ட ஆய்வுப் பயணத்திடை முளைவிட்ட வேடர்கள் பற்றிய இன்பமோகனின் ஆய்வு ஆர்வம், ஆய்வுக்குள் வாழ்தல் (Living in Research) எனும் ஆழ்ந்த ஈடுபாட்டின் வழி விரிந்துள்ளது.

'தனித்துவ அடையாளங்களைத் தொலைத்து எஞ்சியதையேனும் காக்கும் வழிதேடும் சமூகமாக மாறியுள்ள இம்மக்கள் பற்றிய புரிதலுக்கான அறிவுத்தளத்தினை எதிர்காலத் தலைமுறையினரிடம் கையளிக்கும் நோக்கிலேயே,' நுண்கலையைப் பேசிய நான், இனவரைவியல் தொடர்பான விடயங்களைப் பேச இந்த ஆய்விலே நிர்ப்பந்திக்கப்பட்டேன்' என்பார் இன்பமோகன். இந்த வகையில் சமூக நீதிக்கான அறிவுப் பங்களிப்பாக இந் நூலின் பெறுமதியை உணரமுடியும்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**வடிவேல் இன்பமோகன் :** கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத் துவமாணிப் பட்டத்தையும் (M.Phil), கலாநிதிப் பட்டத்தையும் (Ph.D) பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் அழகியல், நாட்டார் கலை, சினிமா என்பவற்றில் ஈடுபாடு உடையவர். இவர் 'மரபுக்குப்பின் மட்டக் களப்பில் நாடகங்கள்' 'இந்தியக் கலையும் ரசனையும்', 'கலைத்துவ சினிமா' 'கிழக்கிலங்கைச் சடங்குகள்' போன்ற ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: மானிடவியல் / வரலாறு

ISBN 955659677-1

9 789556 596779

விலை ரூபா 600.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#865